வெளியீடு 16-9-2005 Issued 16-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 8, 2005—தொகுதி 81—எண் 1**

**Friday, the 8th April 2005 —Volume 81—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2ll, 31'POS
POS. 81.1
186240'

[Price Rs. 3.00

572
21.2.06

8-4-2005

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v -ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. கவன ஈர்ப்பு—** | |
| (அ) சிவந்திபுரம் ஊராட்சி, நத்தம் பகுதி, நான்காயிரம் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்குதல் | 1-7 |
| (ஆ) கோயம்புத்தூர் ஆற்றுப் பாலத்தில் சுங்க வரி வசூலிக்கப்படுவது | 7-11 |
| (இ) மதுரை மேற்கு, இந்திரா நகர் மற்றும் சொக்கிகுளம் பகுதிகளில் விடுபட்ட மக்களுக்கு பட்டா வழங்குதல் | 11-15 |
| (ஈ) ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, சில பிரிவுகள் மற்றும் மருத்துவர்கள் இல்லாதது | 15-18 |
| (உ) பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமிராஜாபுரம் குடியிருப்புகள் அனுபவிப்பாளர்களுக்கு கிரயம் செய்து கொடுத்தல் | 18-22 |
| **2. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 22-23 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 23 |

பக்கங்கள்

3. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—** —தொடர்ச்சி
(ஆ) **கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை**

திரு. தி. வேல் முருகன் 30-39, 42

திரு. கே.சி. கருணாகரன் 41, 43-53

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 53-60

திரு. எச். ராஜா 60-65

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் 66-101, 104-105

(இ) **கோரிக்கை எண் 1– மாநில சட்டமன்றம்**

(ஈ) **கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

(உ) **கோரிக்கை எண் 15 – நிதித் துறை**

(ஊ) **கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

(எ) **கோரிக்கை எண் 37 – பொதுத் துறை**

(ஏ) **கோரிக்கை எண் 48 – ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 153,155-156, 159-162, 170-171

*திரு. பா. பரணிகுமார் 154,155, 156,158, 165, 167, 168-172





பக்கங்கள்

4. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 24-28, 29, 40-41, 43-45

5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 172-174

185240
Chennai 600 008



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல் [illegible]கள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



**10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**
Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**
Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**
Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்
திரு. அ. அன்வர் ராஜா
திருமதி சி. எம். சூரியகலா
திரு. லா. சந்தானம்
டாக்டர் தே. குமாரதாஸ்
முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |

| | | |
|---|---|---|
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |
| 21. | ஆறுமுகம், திரு. த. | .. திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | .. நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | .. திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | .. திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | .. கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | .. திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | .. மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | .. அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 41. | இன்பத்தமிழன், திரு. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 42. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ) |



| | | |
|---|---|---|
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | .. திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. வெ. | .. செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஆர்.டி. | .. தேனி |
| 50. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 51. | கணேசன், திரு. வி. | .. மங்களூர் (செ.வ.) |
| 52. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. பொன்னேரி (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. க.ரா. | .. சத்தியமங்கலம் |
| 54. | கந்தசாமி, திரு. கா. | .. குன்னூர் (செ.வ.) |
| 55. | கருணாகரன், திரு. கே.சி. | .. சிங்காநல்லூர் |
| 56. | கருணாநிதி, திரு. மு. | .. சேப்பாக்கம் |
| 57. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 59. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. குளத்தூர் (செ.வ.) |
| 60. | கலாவதி, திருமதி கு. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 61. | கனகதாரா, செல்வி சி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 62. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. திருப்போரூர் (செ.வ.) |
| 63. | காசாம்பு பூமாலை, திருமதி | .. சங்கராபுரம் |
| 64. | காமராஜ், திரு. மே.ப. | .. தாரமங்கலம் |
| 65. | கார்த்தி, திரு. மு. | .. சேலம்-2 |

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம

67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்

72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை

85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை

87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்

88. சரவணன், திரு. துரை. இ. .. சிதம்பரம்

89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்

91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்

96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

98. சிவபெருமான், திரு. அ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. .. காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
131. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
154. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 26, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 8, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்திவ் வுலகு".*

*முறைசெய்தலாகிய தன்னுடைய கடமை கெடாமல், கண்ணோட்டம் செலுத்தும் வல்லமையுடைய அரசருக்கு, இந்த உலகமே உரிமையுடையதாகிறது.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. கவன ஈர்ப்பு

### (அ) சிவந்திபுரம் ஊராட்சி, நத்தம் பகுதி, நான்காயிரம் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சக்திவேல் முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சக்திவேல் முருகன்.*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவந்திபுரம் ஊராட்சி, நத்தம் பகுதியில் வசிக்கும் 4,000 குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த"*

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2005 ஏப்ரல் 8

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராம உரிமை ஒப்பாவணம் (Title Deed) எண் 202–ல் உள்ளடக்கிய ரயத்து அல்லாத இடம் தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழித்தலும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம், 26/63)–ன்கீழ் 15–3–1965 அன்று அறிவிக்கை / பிரசுரம் செய்யப்பட்டு 15–4–1965 அன்று அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி அறிவிக்கையை எதிர்த்து இனாம்தாரர் திருவாவடுதுறை ஆதீனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண் 3222/1965) தொடுத்தது, அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து மேற்படி மனுதாரர் (திருவாவடுதுறை ஆதீனம்) உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டதில், அவ்வழக்கு 18–11–1970 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி உச்ச நீதிமன்றத்தின் முடிவினைத் தொடர்ந்து மேற்படி ஆதீனத்தின் மனுவினை மேற்படி சட்டம், பிரிவு 5–ன்கீழ் நிலவரித் திட்ட அலுவலரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவ்விசாரணைக்குப் பின் மேற்படி சிவந்திபுரம் கிராமம் ஒரு இனாம் கிராமம் (Existing Inam Village) என அறிவித்தார். அதனை எதிர்த்து மேற்படி ஆதீனம், இனாம் மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்தது. அம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமை சீராய்வு மனு (CRP No.3771/1974) ஒன்றினைத் தொடுத்தது. மேற்படி சென்னை உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மேற்படி உரிமை ஒப்பாவணம் (Title Deed) எண் 202–ல் உள்ளடக்கிய இடம் ஒரு இனாம் எஸ்டேட் (Existing Inam Estate) என்று தீர்ப்பளித்து அச்சீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்தது.

இனாம் சட்டம் 26/63–ன்கீழ் உதவி நிலவரித் திட்ட அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு எஸ்.ஆர்.1 முதல் 592/அம்பை/79; நாள் 2–4–1980–ன்படி உதவி நிலவரித் திட்ட அலுவலர், திருவாவடுதுறை ஆதீனம் மற்றும் ஹார்வி மில்ஸ் கூட்டுறவுச் சங்கம் மற்றும் மதுரா கோட்ஸ்



2005 ஏப்ரல் 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆகியவற்றிற்கு 234.39.0 ஹெக்டேர் (578.94 ஏக்கர்) பட்டா அனுமதித்து உத்தரவிட்டுள்ளனர்.

இவ்வுத்தரவினால் இடருற்ற 592 நபர்கள் சார்பில் திருநெல்வேலி இனாம் ஒழிப்புத் தீர்ப்பாயத்தில் (சார்பு நீதிமன்றம்) மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதில் கீழ்க்காணும் காரணங்களினால் உதவி நிலவரித் திட்ட அலுவலருக்கு மீட்டனுப்புகை செய்து உத்தரவிடப்பட்டது.

அ. குடியிருப்புதாரர்களின் வீடுகளுக்கு ஆதீனத்தின் பெயரில் பட்டா வழங்கப்பட்டது.

ஆ. சமுதாய நிலங்களுக்கும் ஆதீனத்தின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

இ. சம்பந்தப்பட்ட நபர்கள் விசாரணைகள் செய்யப்படாமல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. அனைத்துக் குடியிருப்புதாரர்களுக்கும் எழுத்துமூலமான வாக்குமூலம் அளிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து, மேற்படி கிராமத்தில் நடைபெற்ற நிலவரித் திட்டத்தின்போது, உதவி நிலவரித் திட்ட அலுவலர் மேற்படி தாவா இடத்தினை (உரிமை ஒப்பாவணம் எண் 202–ல் உள்ளடக்கிய இடம்) "நத்தம்" என வகைப்பாடு செய்து மேற்படி ஆதீனத்திற்கு பட்டா வழங்கி ஆணையிட்டார். அவ்வாணையை எதிர்த்து சிவந்திபுரம் கிராமக் குடியிருப்புவாசிகள் திருநெல்வேலி இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்தார்கள். மேற்படி தீர்ப்பாயம் மேற்படி உதவி நிலவரித் திட்ட அலுவலரின் ஆணையைத் தள்ளுபடி செய்து மறு விசாரணைக்காக மேற்படி அலுவலருக்கு மீட்டனுப்பியது (Remanded for fresh enquiry). மேற்படி தீர்ப்பாயத்தின் ஆணைமீது ஆதீனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் எஸ்.ட்டி.எ. எண் 5/84–ல் மேல்முறையீடு வழக்கு தொடுத்தது. மேற்படி வழக்கில் 5–9–1996 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி உதவி நிலவரித் திட்ட அலுவலருக்கு மீட்டனுப்புகை செய்யப்பட்டது சரியென்றும், தீர்ப்பாயம் தெரிவித்த கருத்துகளை எடுத்துக்கொள்ளாமல் புதிய விசாரணை மேற்கொள்ளுமாறு உதவி நிலவரித் திட்ட அலுவலருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உதவி நிலவரித் திட்ட அலுவலரால் மீண்டும் புதிய விசாரணை மேற்கொள்ளப்படும் நிலையில் குடியிருப்புதாரர்கள் சார்பில் தங்களால் உதவி நிலவரித் திட்ட அலுவலரின் மதுரை அலுவலகத்தில்

விசாரணைக்கு கலந்து கொள்ள இயலாது என்றும், உதவி நிலவரித் திட்ட அலுவலர் சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு வந்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் எனக் கோரி நீ.பே. எண் 4057/01–ம் மற்றும் ஏற்கெனவே தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடுத்த 111 நபர்கள் அல்லாமல் மேலும் 481 நபர்கள் தங்களையும் மனுதாரர்களாக சேர்க்கக் கோரி நீ.பே. எண் 42572/02–ம் வழக்குகள் தொடரப்பட்டன. இறுதியாக, இவ்வழக்குகள் 28–11–2002–ல் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்நிலையில், உதவி நிலவரித் திட்ட அலுவலரிடம் மீட்டனுப்புகை செய்யப்பட்ட வழக்கு நிலுவையிலுள்ளது.

இதற்கிடையில் மாவட்ட நிர்வாகத்தினர், சிவந்திபுரம் கிராமத்தில் அடங்கிய நிலங்களில் பல குடியிருப்புதாரர்களுக்கு வீட்டுமனைபட்டா இல்லாத காரணத்தினால் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாகக் கருதி, இச்செயலக எதிர்நோக்கி திருவாவடுதுறை ஆதீனம் அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கு எதிராக, நிலவரித் திட்ட 'அ' பதிவேட்டில் மாறுதல் கோரியும், நத்தம் நிலவரிப் பட்டா வழங்கக் கூடாதெனக் கோரியும் வழக்கு எண் ஓ.எஸ்.9/02–ஐத் தொடுத்தனர். அவ்வழக்கில் 31–3–2004 நாளிட்ட தீர்ப்பின்படி, ஆதீனத்துக்குச் சாதகமாக ஆணை வழங்கப்பட்டுள்ளதாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் 7–3–2005 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதன்மீது அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 74/04–னை அரசுத் தரப்பில் தாக்கல் செய்துள்ளதாகவும், அம்மேல்முறையீட்டில் ஏற்கெனவே முடிவுற்ற நிலவரித் திட்டம் குறித்தான வழக்குகள் மற்றும் அவற்றில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வழக்கு 9–3–2005 அன்று விசாரணைக்கு வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். உதவி நிலவரித் திட்ட அலுவலரின் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதன் மூலம் தீர்வு காணலாம்.

மேலும், தற்போது உதவி நிலவரித் திட்ட அலுவலரின் அலுவலகம் சென்னையில் மட்டுமே இயங்கி வருவதால், இந்நேர்வினை சிறப்பு இனமாகக் கருதி உதவி நிலவரித் திட்ட அலுவலர், சம்பந்தப்பட்ட கிராமத்திற்குச் சென்று மனுதாரர்களுக்கும் எதிர் மனுதாரர்களுக்கும் விசாரணை அறிவிப்பு வழங்கி உரிய காலக்கெடுவிற்குள் ஆவணங்களை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு உரிய ஆணைகளை வழங்கலாம். மேலும் மேற்கண்ட விசாரணைகளை அம்பாசமுத்திரம் வட்டாட்சியர்





அலுவலகத்தில் மேற்கொள்வதால் பொதுமக்களுக்கும் சிரமமிருக்காது என்பதால் அவர்களும் விசாரணையில் பங்கேற்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்தப் பிரச்சினைமீது மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு, சுமார் 3 பக்கங்களுக்கு விரிவான ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், இந்த பட்டா பிரச்சினையில் எந்த அளவிற்கு நமது அரசாங்கம் கஷ்டப்பட்டு—சுமார் 40 ஆண்டு காலம், இந்த இனாம் ஒழிப்புச் சட்டம் 1965 ஆம் ஆண்டு அமலாக்கப்பட்டதிலிருந்து, 40 ஆண்டு காலம் நம்முடைய அரசாங்கம் எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டு—போராடி, உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று வெற்றிபெற்ற பிறகும், மீண்டும் உயர் நீதிமன்றம் வரை சென்று, இரண்டு தடவை வெற்றிப்பெற்ற பிறகும், பட்டாக்கள் தயாராகின்ற சூழ்நிலையில், உயர் நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில், வெற்றிபெற்ற வழக்கிற்கே வேறு ஒரு காரணம் காட்டி, அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எதிராக இந்த மடம் ஒரு தடையைப் பெற்றுள்ள சூழ்நிலையிலும், இன்று நம்முடைய அரசாங்கம் இதுவரை இல்லாத ஒரு சாதனையாக விசாரணைக் குழுவை சென்னையிலே அமைத்து, அங்கே வந்து அவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக, அந்தப் பட்டா விசாரணைக் குழுவையே சிவந்திபுரத்திற்கு அனுப்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி, இனாம் ஒழிப்புச் சட்டம் 40 ஆண்டுகளுக்கு முன்பு அமலில் வந்தும், இந்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் அங்கேயுள்ள ஒரு தனி நபர், அந்த மடத்து ஆய்வாளர் அவர்கள் இந்த 4,000 பட்டாக்கள் வழங்கவிடாமல் தடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துவரும் காரணத்தினால், நம்முடைய அம்மாவுடைய அரசாங்கம் இதிலே ஒரு தனி கவனம் செலுத்துகின்ற வகையில் ஒரு அவசரச் சட்டமாவது பிறப்பித்து பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்ற இப்பிரச்சினை குறித்து இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, உதவி நிலவரித் திட்ட அலுவலர்,

சம்பந்தப்பட்ட கிராமத்திற்குச் சென்று, மனுதாரர்களுக்கும் எதிர் மனுதாரர்களுக்கும் விசாரணை அறிவிப்பு வழங்கி, உரிய காலக் கெடுவிற்குள் அவ்வினங்களை ஆய்வுசெய்து, விசாரணை மேற்கொண்டு, சட்ட விதிகளுக்குட்பட்டு, நீதிமன்ற விசாரணையில் இருக்கின்ற இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் உரியவர்களுக்கு வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் எதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன் என்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற Water Tank–குகள், நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக கட்டப்பட்ட பஞ்சாயத்து அலுவலகங்களைக்கூட, Inspector–ஆக இருக்கின்ற அதிகாரி அவர்கள், தலைமைக்குக்கூட தெரியாமல் இந்த Water Tank–ஐ இடிக்க வேண்டுமென்றும் பஞ்சாயத்து அலுவலகத்தை இடிக்க வேண்டுமென்றும், சுமார் 1,000 பேர்களுக்கு மேலாக குடியிருக்கின்றவர்களைக் கோர்ட்டுக்கு அலைய வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் தவறாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். அவசரச் சட்டம் பிறப்பிக்க முடியவில்லையென்றாலும், நம்முடைய அமைச்சர் அவர்கள் உரிய காலத்தில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கின்ற நேரத்தில், நம்முடைய அரசாங்கத்திற்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துகின்ற அந்த மடத் தலைவர் மீது குண்டர் சட்ட நடவடிக்கையாவது பிறப்பிக்க வேண்டும். நம்முடைய அரசாங்கத்தினுடைய அனைத்து காரியங்களையும் — Water Tank–ஐ இடிக்க வேண்டும் என்கிறார்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சொல்லுங்கள். என்ன கேள்வி, அதைக் கேளுங்கள்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** எனவே, அந்த நடவடிக்கையை எடுத்து, அங்கே பாதிக்கப்படுகின்ற இந்த 4 ஆயிரம் குடும்பங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் அதையும் கருத்தில் கொண்டு—இப்போது வழக்கை விரைவிலே முடிக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய அரசாங்கம், சட்டத் துறை அமைச்சருடைய துணையோடு—ஒரு சிறப்பு வழக்கறிஞரையும் கூடுதலாக நியமித்து இந்த வழக்கை விரைவாக முடித்து, விசாரணையையும் விரைவாக முடித்து, பட்டா வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் விரைவில் ஆவன செய்து, தாங்களே நம்முடைய அம்மா ஆட்சியில் வந்து வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24–3–2005–ல் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சாதகமாக, அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது, அரசுக்கு எதிராக. அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அத்தாட்சி நகலைப் பெற்று, மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மேல்முறையீடு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார் என்பதனைத் தெரிவித்துக்கொண்டு, ஒழுங்கு விதிகளை மீறி, அரசு அலுவலர்களால் அங்கு முறைகேடுகள் ஏதாவது நடைபெற்றிருக்கின்றனவா என்பதனை அரசு விசாரணை செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) கோயம்புத்தூர் ஆற்றுப் பாலத்தில் சுங்கவரி வசூலிக்கப்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

*** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் ஆற்றுப் பாலத்தில் சுங்கவரி வசூலிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 8

## அறிக்கை

28.40 கி.மீ. நீளமுள்ள கோயம்புத்தூர் புறவழிச்சாலை கட்டும் பணி திருவாளர்கள் எல். & டி. நிறுவனத்தினரிடம், மைய அரசால், "கட்டி, நிர்வகித்து, ஒப்படைத்தல் திட்டத்தின்" (BOT) கீழ் ஒப்படைக்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலை 47–ல் நொய்யல் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள இடத்தில் கூடுதலாக கோயம்புத்தூரில் ஒரு புதிய இருவழி ஆத்துப்பாலம் கட்டும் பணி மற்றும் ஏற்கெனவே உள்ள பாலத்தினையும் பழுதுபார்க்கும் பணியானது கோயம்புத்தூர் புறவழிச்சாலை அமைக்கும் பணியுடன் சேர்க்கப்பட்டது. இத்திட்டத்திற்காக மைய அரசு, மாநில அரசு மற்றும் எல். & டி. நிறுவனம் ஆகியோர் முக்கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளனர். இவ்வொப்பந்தத்தின்படி, மேற்கண்ட ஆத்துப்பாலம் கட்டும் பணி டிசம்பர் 1998–ல் முடிக்கப்பட்டு அன்றிலிருந்து சுங்கவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஒப்பந்தப்படி, ஏற்கெனவே ஆத்துப்பாலம் அமைந்துள்ள இடத்தில் கூடுதலாக ஒரு புதிய இருவழிப்பாலம் அமைத்தல், பழைய பாலத்தை பராமரித்தல், இருபாலங்களின் அணுகுசாலை மற்றும் பாலத்திற்கு அருகே உள்ள சாலை சந்திப்பினை மேம்படுத்துதல் போன்ற இதர பணிகளையும் செய்து 20 வருடங்களுக்கு ஒப்பந்தக்காரர் உரிய முறையில் பராமரிப்பு செய்ய வேண்டும்.

போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும்பொருட்டே, கூடுதலாக ஒரு பாலம் கட்டப்பட்டு போக்குவரத்து போவதற்கும் மற்றும் வருவதற்குமாக தலா ஒரு பாலம் என வழிவகை செய்யப்பட்டு சுங்கவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செய்து முடிக்க எல். & டி. நிறுவனத்தினர் பணத்தை முதலீடு செய்துள்ளதால், நிறுவனத்தினர் சுங்கவரி வசூல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுங்கவரி வசூல் செய்வதை நிறுத்தம் செய்வது மைய அரசு மற்றும் எல். & டி. நிறுவனம் ஆகியோருடன் மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

சுங்கவரி வசூல் செய்வதை நிறுத்தம் செய்வதற்கு தமிழக அரசு மற்றும் மைய அரசு கொள்கை ரீதியான முடிவு எடுக்க வேண்டும். ஆத்துப்பாலத்தில் சுங்கம் வசூல் செய்வது ஒப்பந்தத்தில் ஓர் அங்கம் என்பதால், இதனை நிறுத்துவது குறித்த இறுதி முடிவினை மைய அரசுதான் மேற்கொள்ள வேண்டும். மேலும் சுங்க வரி வசூலினை நிறுத்துவதால் ஏற்படும் நஷ்ட ஈடாக எல். & டி. நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை முழுவதையும் மைய அரசுதான் அளிக்க வேண்டும்.



2005 ஏப்ரல் 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேலும் இது தொடர்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஆற்றுப் பாலம் அகலப்படுத்தப்பட்ட அதே கால கட்டத்திலே, சென்னையிலே 10–க்கும் மேற்பட்ட பாலங்கள் பல கோடி ரூபாய் முதலீட்டிலே கட்டப்பட்டும் ஒரு பாலத்திற்குக்கூட சுங்க வரி வசூலிப்பானது நடத்தப்படாத நிலையிலே, கோவை மாநகரிலே ஒரே ஒரு பாலம், அதுவும் ஆத்துப்பாலம் பகுதியிலே 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த பழைய பாலத்தை வெறுமனே 1 1/2 கோடி ரூபாய் முதலீட்டிலே அகலப்படுத்தும் பணியை மட்டும் செய்துவிட்டு, அதற்காக ஒட்டுமொத்த கோவை மக்களையும் ஒரு தனியாரிடம் 21 ஆண்டுகளுக்கு அடகு வைத்திருப்பது எத்தகைய அநீதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிய வேண்டும். அதுமட்டுமல்ல, இதைக் காட்டிலும் கொடுமையிலும் கொடுமை என்னவென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முழு பேச்சை அரங்கேற்றப் பார்க்காதீர்கள். என்ன கேள்வி என்று கேளுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சொந்த ஊருக்குள் நாங்கள் வந்து போவதற்கே ஒவ்வொரு முறையும் கப்பம் கட்டி வருகிறோம். இதனால் எங்களுடைய பல தொழில்கள் இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் ஊருக்கு நான் வரும்போதும் கட்டிவிட்டுத்தான் வருகிறேன். (சிரிப்பு) நீங்கள் என்ன என்று சொல்லுங்கள்.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** ஆகவே, இந்தச் சுங்க வரி வசூலிப்பானது, கோவை மக்களின் ஜீவாதார உரிமைகளைப் பறிக்கக்கூடிய ஒரு செயலாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த சுங்க வரி வசூலைத் தடுக்கவோ, தவிர்க்கவோ ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 8

இருக்கின்றது. அந்த வழக்கையே அங்கு தொடுத்திருப்பவர் நமது மாண்புமிகு உறுப்பினர் திருமதி மஹேஸ்வரி அவர்கள்தான். (சிரிப்பு) ஆகவே, நான் விரிவாக அந்த வழக்குக்குள் செல்ல முடியாத சூழ்நிலை இருந்தாலும், கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் அந்தப் பாலம் – அப்போது அவர்கள் இங்கே ஆட்சியில் இருந்தார்கள். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை எண் 47–ன்கீழ்தான் அந்தப் பாலம் வருகின்றது. இதற்கு நம்முடைய அரசு பொறுப்பாகாது என்பதனை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கம்தான் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கின்றது. அந்தக் கட்சியில் – கூட்டணியில் இருக்கின்ற அமைச்சர்தான் அங்கே மத்திய அமைச்சராகவும் இருக்கின்றார்கள். இதற்கு முழுப் பொறுப்பும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்குத்தான் முக்கியத்துவம், பொறுப்பு இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர, சோழ, பாண்டியன், மூவேந்தர்களைப் போல மூன்று அமைச்சர் பெருமக்களைப் பெற்றிருக்கும் பெருமை வாய்ந்த மாவட்டம் எங்கள் கோவை மாவட்டம். ஆகவே, இப்போது இந்த அநீதி களையப்படவில்லையென்று சொன்னால், எப்போது இது களையப்பட இயலும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டுமென்றால் மூன்று பேரையும் மத்திய சர்க்காருக்கு transfer பண்ணுவோம். (சிரிப்பு)

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய மாநில அரசுகள் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள Tripartite Agreement என்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, மத்திய அரசோடு கலந்து பேசி, பரிந்துரை செய்து ஏதேனும் one time grant கொடுத்தேனும் இந்த சுங்க வரி வசூலிப்பைத் தவிர்த்து, சொந்த மண்ணிலே அந்நியப்பட்டிருக்கும் கோவை மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவாரா என்பதோடு, மத்திய அரசு தாமதிக்கும் பட்சத்தில் ஒட்டுமொத்த ஈட்டுத் தொகையையும் நமது தமிழக அரசே செலுத்தி கோவை மக்களை மீட்க முயற்சி எடுப்பாரா என்பதையும் அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களே கடந்த தி.மு.க. ஆட்சியிலே அப்போது பொறுப்பிலே இருந்தவர்கள்தான் என்பதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், கொள்கை அளவில் இந்தப் பிரச்சினைக்கு முடிவு, தீர்வு காணப்பட வேண்டுமென்றால், அது மத்திய அரசின் பராமரிப்பிலும், கட்டுப்பாட்டிலும் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையின் பொறுப்பில் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய அரசியல் செல்வாக்கினை, மத்திய அரசிற்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–10

## (இ) மதுரை மேற்கு, இந்திரா நகர் மற்றும் சொக்கிகுளம் பகுதிகளில் விடுபட்ட மக்களுக்கு பட்டா வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மேற்கு தொகுதியில் இந்திரா நகர், சொக்கிகுளம் போன்ற பகுதிகளில் விடுபட்டுள்ள மக்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

மதுரை வடக்கு வட்டம், அண்ணாநகர் பகுதி, சொக்கிகுளம் கிராமம் புல எண் 874–ல் 288 வீடுகள் கட்டி ஆக்கிரமிப்புகள் உள்ளன. இந்திரா நகர் பகுதி, சொக்கிகுளம் கிராமம் புல எண் 457/1–ல் 114 வீடுகள் உள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 8

வடக்கு மதுரை கிராமம் புல எண் 497/7,8,9–ல் 380 வீடுகளும், புல எண் 497/6–ல் 700 வீடுகளும் உள்ளன. மேற்கண்ட புலங்கள் அனைத்தும் மறுகால் ஓடை, வண்டிப்பாதை, கண்மாய் என நிலை வகுபாடு செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் நில ஒப்படை செய்ய தடை ஆணை உள்ளது. 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் அரசாணை (நிலை) எண் 168, வருவாய்த் துறை, நாள் 27–3–2000–ன் செயலாக்கம் 2001 ஆண்டுடன் முடிவடைந்து தற்பொழுது அமலில் இல்லை. பிரஸ்தாப புலங்கள் கண்மாய், புறம்போக்குகள் என்பதால் பட்டா வழங்கப்படவில்லை. மதுரை மாவட்டம், மதுரை மேற்கு தொகுதியில் இந்திரா நகர், சொக்கிகுளம் போன்ற பகுதிகள் ஆட்சேபகரமான புறம்போக்குப் பகுதிகளாக இருப்பதால், அப்பகுதிகளில் விடுபட்டுள்ள மக்களுக்கு பட்டா வழங்க இயலாது.

வடக்கு மதுரை கிராமம், புல எண் 497/7,8,9 மற்றும் 197/6 மற்றும் சொக்கிகுளம் கிராமம், புல எண் 874 மற்றும் 4571/1 ஆகிய புலங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு குடிசைவாழ் பகுதிகளுக்கான சாலை, நடைபாதை, கிணறு, தெரு விளக்கு, குடிநீர் வசதி போன்ற ஆதார அடித்தளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிய கிரயத்தின்பேரில் கிரயப் பத்திரம் வழங்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினை நான் படித்துப் பார்த்தேன். அதில் மதுரை சொக்கிகுளத்தில், குடிசை மாற்று வாரியத்தால் அடித்தளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, விரைவில் கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்கின்ற செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதேநேரத்தில் இந்திரா நகர்ப் பகுதி, கண்மாய்ப் புறம்போக்கு என்பதால், பட்டா வழங்குவதற்கு நிலம் ஒப்படை செய்ய தடையாணை உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.



2005 ஏப்ரல் 8] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

மதுரையைப் பொறுத்தவரையில், 39 area-கள் குடிசை மாற்று வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு முன் நுழைவு அனுமதி கொடுப்பதற்கு, அனுமதி கொடுக்கப்பட்டது. அதில் சொக்கிகுளத்தைப்போல் இந்திரா நகர்ப் பகுதிக்கும் அந்த அனுமதி உள்ளது. சொக்கிகுளத்தில் அடித்தளப் பணிகளைச் செய்து வருவதைப் போலத்தான் இந்திரா நகர்ப் பகுதியிலும் குடிசை மாற்று வாரியம் அடித்தளப் பணிகளைச் செய்து வருகிறது. இதில் 22–11–2003–ல்கூட அன்றைய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நில நிர்வாக ஆணையருக்கு இந்திரா நகர்ப் பகுதியில் அடித்தளப் பணிகளைச் செய்து வருகிற குடிசை மாற்று வாரியத்திற்கே இடத்தைக் கொடுத்துவிடலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள். P.W.D –யும் N.O.C. கொடுத்து இருக்கிறது. 39 area-களில் 10 area-களுக்கு இதுவரை குடிசை மாற்று வாரியம் தேர்ந்தெடுத்து Revenue Department-ன் மூலமாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. 1988–லிருந்து இந்தப் பகுதிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தால் அடித்தளப் பணிகள் செய்து வருகின்ற காரணத்தினால், இந்தச் சட்டம் இந்தப் பகுதிகளுக்குப் பொருந்தாது என நான் கருதுகிறேன். எனவேதான் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, புதூர் Bus stand அருகிலே உள்ள முத்துராமலிங்கபுரத்திற்கு 2003–ல் பட்டா கொடுத்திருக்கிறோம். இதுவும் ஓடைப் புறம்போக்குதான். தாமரைத் தொட்டி அருகில் உள்ள மண்மேலை மேடுப் பகுதியில் 200 பேருக்கு பட்டா கொடுத்துள்ளோம், இப்போது அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவும் கோசாகுளம் கண்மாய்தான். மதுரை Law College-க்கு அருகில் உள்ள 250 பேருக்கு நாம் பட்டா கொடுத்துள்ளோம், அம்மா அவர்களினுடைய பொற்கால ஆட்சியிலே. இதுவும் சம்பக்குளம் tank புறம்போக்குதான். ஏன், மதுரை மாநகராட்சி அலுவலகமே கண்மாயிலேதான் கட்டப்பட்டு இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஒரு சதுர அடிக்கு எவ்வளவு என்று அரசு நிர்ணயித்துள்ளதோ, அத்தனை தொகையையும் அந்த மக்கள் கட்டியும்கூட, ஏன் பட்டா கொடுக்கவில்லை, மற்ற பகுதிகளுக்கு எல்லாம் கொடுக்கிறார்களே, ஏன் உங்களால் வாங்கித் தர முடியவில்லை என்று மக்கள் என்னைப் பார்த்து கேள்வி கேட்கின்றபோது, பதில் சொல்லமுடியாமல் நான் தவித்துக்கொண்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என் தொகுதி மக்களின்மீது கருணை கொண்டு அந்த 39 ஏரியாக்களிலே இந்த ஏரியாவும் வருகின்ற காரணத்தினால் பட்டா கொடுப்பதற்கு மறு ஆய்வு செய்வாரா என பணிவன்புடன் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய புல எண் 874 சொக்கிகுளம், அண்ணா நகர் பகுதி, புல எண் 4571/1—ன்கீழ் சி.பி. குளம் இந்திரா நகர் பகுதி புல எண் 497/7, 8, 9—ல் கரும்பாலை இந்திரா நகர் பகுதி புல எண் 497/6—ன்கீழ் கரும்பாலைப் பகுதிகளில் குடியிருந்து வருகின்ற குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நுழைவு முன் அனுமதி பெற்று 1988—1989—ல் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டப் பணிகளுக்கு பொதுப் பணித் துறையின் மூலம் தடையின்மைச் சான்றும் வழங்கப்பட்டு இருக்கிறது. இவ்வினங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் பொருட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு அரசின் ஆய்வுக்கு தற்போது பெறப்பட்டு இருக்கின்றது. நில நிர்வாக ஆணையர் அவர்கள் நில ஆய்வு செய்தபின் அரசு நில உரிமை மாற்றத்தினை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கியவுடன், உரிய கிரயத்தின் பேரில் கிரயப் பத்திரம் வழங்க, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தொகுதி மக்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு நல்ல செய்தியை, இனிப்பான செய்தியை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள், அதிகாரிகளை ஒரு பார்வை பார்த்தால் போதும்; ஒரு நிமிடத்தில் இந்தப் பணி முடிந்துவிடும். எனவே, ஒருமாத காலத்திற்குள், இந்தப் பணியை முடித்துவிட்டு, அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, இந்தப் பட்டாவை வழங்குவார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 தினங்களுக்கு முன்பாகத்தான், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டிருக்கின்றது. விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## (ஈ) ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, சில பிரிவுகள் மற்றும் மருத்துவர்கள் இல்லாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சக்ரபாணி.

***திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில், அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, கட்டட வசதி, தேவையான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

**(1) அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேறுப் பிரிவு**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, 10 படுக்கை வசதிகள் கொண்ட சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம், ஆய்வகம் மற்றும் அல்ட்ரா ஸ்கேன் ஆகிய வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில், நாள் ஒன்றுக்கு சராசரியாக 2 உள் நோயாளிகள், 253 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு என தனித் தனிப் பிரிவுகள் இயங்கவில்லை.

**2. இரத்த சேமிப்பு வங்கி**

இம்மருத்துவமனைக்குச் சில கிலோ மீட்டர் தொலைவில், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, பழநி மற்றும் கொடைக்கானல் ஆகிய அரசு வட்ட மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட்டு வருவதால், இரத்த சேமிப்பு வங்கி தனியாக இம்மருத்துவமனைக்கு ஏற்படுத்த தற்பொழுது அவசியம் எழவில்லை.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2005 ஏப்ரல் 8

**3. கட்டட வசதி**

மேலும், இம்மருத்துவமனைக்குப் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 2.75 இலட்சம் செலவில் நுண்கதிர் அறை கட்டும் பணி துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம், இம்மருத்துவமனைக்கு, 30 படுக்கைகள் வசதி கொண்ட சிகிச்சைப் பிரிவு, கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்ய, தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**4. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள்**

ஒட்டன்சத்திரம் வட்ட மருத்துவமனைக்கென ஒப்பளிக்கப்பட்ட 2 உதவி மருத்துவர்களும் 4 செவிலியர்களும் பணிபுரிந்து வருவதால், காலியிடம் ஏதுமின்றி இம்மருத்துவமனை நன்கு செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள அரசின் நிதி நெருக்கடி நிலையில், தனியாக அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு ஏற்படுத்துதல், கூடுதல் பணியாளர்கள், கட்டடங்கள் கட்டுவது போன்றவற்றை நடைமுறைப்படுத்த சாத்தியமில்லை.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திலே, வருங்காலத்தில், ஒட்டன்சத்திரம் மருத்துவமனை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒட்டன்சத்திரம் நகரம், வளர்ந்து வரக்கூடிய நகரம். தேசிய நெடுஞ்சாலை எண் 209 கோவை–திண்டுக்கல் சாலையிலும், அதேபோல, மெட்டூர், பலக்கனூத்து, ஒட்டன்சத்திரம், தாராபுரம், காங்கேயம், ஈரோடு செல்கின்ற மாநில நெடுஞ்சாலை எண் 37–லும் ஒட்டன்சத்திரம் அமைந்திருப்பதாலும், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்திலே அமைந்திருப்பதாலும், தினசரி ஆயிரக்கணக்கான வாகனங்கள், அந்த ஊருக்கு வந்து செல்கின்றன. அதேபோல், தைப் பூசம், பங்குனி உத்திரம் போன்ற சமயங்களிலே, பழநிக்குச் செல்கின்ற பக்தர்கள், இலட்சக்கணக்கிலே அந்த வழியாகச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள தல புராணங்களையெல்லாம் சொல்ல வேண்டாம்.



2005 ஏப்ரல் 8]

**திரு. ஆர். சக்ரபாணி:** விபத்து ஏற்பட்டால், அந்த விபத்தில் சிக்கியவர்களை, கோயம்புத்தூர் அல்லது மதுரைக்குக் கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையிலே, இந்த ஆண்டே 30 படுக்கைகளைக் கொண்ட கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும், அவசர சிகிச்சைப் பிரிவையும், மகப்பேறு மருத்துவப் பிரிவையும் ஏற்படுத்தித் தருவதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலுள்ள மருத்துவமனையைக் குறித்து, இங்கே பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் கேட்கின்ற அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே, தற்சமயம் மருத்துவர்களும், செவிலியர்களும் பணிபுரிகின்றார்கள். அதேபோன்று, கடந்த ஆண்டு அந்த மருத்துவமனைக்கு குறிப்பாக, ஓர் எக்ஸ்-ரே மெஷின் வழங்கப்பட்டிருக்கிறது. வருகின்ற நிதியாண்டிலே, ஏற்கெனவே உறுப்பினர் அவர்களுக்குக் கூறியதுபோல, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றலாம்; இந்த ஆண்டு முடியாது. உலக வங்கியிடம், கிட்டத்தட்ட 597.15 கோடி ரூபாய் நிதியை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். உறுப்பினர் தெரிவித்த அந்த மருத்துவமனைக்கு மட்டும் கிட்டத்தட்ட 1 கோடியே 12 இலட்சம் ரூபாய்க்கு ஒரு வரைவு மதிப்பு தீட்டப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வருகின்ற ஆண்டு உறுப்பினருடைய மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த மருத்துவமனையினுடைய தரம் உயர்த்தப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 மாவட்டங்களை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திண்டுக்கல் மாவட்டம், இப்போது, மருத்துவத் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், இந்த ஆண்டு முன்னுரிமை கொடுப்பாரா என்பதை அறிய விரும்புவதுடன், அங்கே அறுவை சிகிச்சை வசதி இருக்கிறது; ஆனால், அங்கே மயக்க மருத்துவர்கள் இல்லாததால், அறுவை சிகிச்சை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. பல் மருத்துவர்கள் இருந்தும், அங்கே அதற்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாமல், பல் சிகிச்சை மருத்துவர்கள் அங்கே அதற்கான சிகிச்சை

செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆண்டுதோறும் அந்த மருத்துவமனைக்கு உணவுக்காக 45 ஆயிரம் ரூபாய் அரசு வழங்குகிறது. ஆனால், அங்கே சமையல் செய்யக்கூடிய சமையலரும், சமையல் கூடமும் இல்லாததால், ஆண்டுக்கு வருகிற 45 ஆயிரம் ரூபாயும் அரசுக்கே திரும்பச் செல்கிறது. இந்த வசதிகளையெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனைக்கு ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டிலே, உறுப்பினருடைய மாவட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அந்த நிதியாண்டிலே, உறுப்பினர் தெரிவித்த அத்தனைக் குறைபாடுகளும் நீக்கப்பட்டு, அவருடைய கோரிக்கைகள் அத்தனையும், அந்த நிதியின் மூலமாக — நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது — அவை அத்தனையையும் நிறைவேற்றித் தர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

### (உ) பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமி ராஜாபுரம் குடியிருப்புகள் அனுபவிப்பாளர்களுக்கு கிரயம்செய்து கொடுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமிராஜாபுரத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு விலைப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



## அறிக்கை

### கோட்டம் - 42 — போகிபாளையம் குடியிருப்பு

சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, கோட்டம் எண் 42, போகிபாளையம் பகுதியில் உள்ள குடியிருப்புகள், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானவையாகும். வேப்பேரி கிராமம், புல எண் 1737/6 மற்றும் 1736/10-ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 109 மனை மற்றும் 2,340 சதுர அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தில், சென்னை மாநகராட்சியினால் 316 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளைப் பயன்படுத்தி வருவோர்களுக்கே, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை பெற்றுக்கொண்டு கிரயம் செய்துகொடுக்க, 1990 ஆம் ஆண்டு அரசின் ஆணை வெளியிடப்பட்டது. (அரசாணை எண் 907, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11-10-1990) ஆனால், மேற்படி குடியிருப்புகளை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை அளித்து, குடியிருப்புகளைக் கிரயம் பெற்றுக்கொள்ள அனுபவிப்பாளர்கள் முன்வரவில்லை. இதுகுறித்து, சென்னை மாநகராட்சி மன்றம், தனது தீர்மானம் எண் 591/99, நாள் 10-7-1999-ல், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கும் சலுகை விலையில் அளிக்க அரசாணை எண் 128, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-3-1997-ல், ஆணையிட்டுள்ள நிகழ்வின் அடிப்படையில், மேற்படி குடியிருப்புகளையும் கிரயம் செய்து கொடுப்பது குறித்து, சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

### கோட்டம் - 45 — குமாரசாமிராஜாபுரம் நிலம்

சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, கோட்டம் எண் 45, குமாரசாமிராஜாபுரம் பகுதி, வேப்பேரி கிராமம், புல எண் 1730/1-ல், 22 மனை மற்றும் 1,469 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலமாகும். இந்நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து, 66 குடியிருப்புகள் ஆக்கிரமிப்பாளர்களால் கட்டப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளைக் கட்டி, சென்னை மாநகராட்சி நிலத்தினைப் பயன்படுத்தி வருவோர்களுக்கே, சென்னை மாவட்ட ஆட்சியரால்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 ஏப்ரல் 8

தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை பெற்றுக்கொண்டு, கிரயம் செய்து கொடுக்க, 1992 ஆம் ஆண்டு அரசின் ஆணை பெறப்பட்டது. (அரசாணை எண் 307, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13–12–1992) ஆனால், மேற்படி குடியிருப்புகள் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தினை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை அளித்து, கிரயம் பெற்றுக்கொள்ள அனுபவிப்பாளர்கள் முன்வரவில்லை. நில மதிப்பு குறித்து, சென்னை மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்த பின்பு, கோரிக்கை அளிப்பதாக நில அனுபவிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, 2–4–2005 ஆம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிலத்தினை, சந்தை விலை மதிப்பில் அல்லாமல், சதுர அடி ஒன்றுக்கு ரூ. 100/– (ரூபாய் நூறு மட்டும்) என்ற மதிப்பில் கிரயத் தொகை செலுத்தி, நிலத்தினைக் கிரயம் பெற்றுக்கொள்ள சிலர் விருப்பம் அளித்துள்ளனர்.

மேற்படி அரசாணையில், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தினை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில் கிரயத் தொகை பெற்றுக்கொண்டு, கிரயம் செய்து கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள், 2–4–2005 அன்று அளித்துள்ள கோரிக்கை குறித்து, மன்றத்தின் கருத்து பெறப்பட்ட பின்னர், நிலக் கிரயம் செய்வது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையை வாசித்துப் பார்த்தேன். அது நிறைவானதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற நேரமாக நான் இதை எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சருக்கும் embarrassment கொடுக்க வேண்டும் என்கின்ற நினைப்பும் எனக்கு இல்லை. விலைப் பட்டா கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து என்று நான் கேட்டிருந்தேன். சொல்லியிருக்கின்ற பதிலிலே அங்கே இருக்கின்ற குடியிருப்புகளைக் கிரயம் செய்து கொடுப்பது குறித்து என்று இருக்கின்றது. இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற குடியிருப்புகள் என்பது



2005 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

1931 ஆம் ஆண்டு மாநகராட்சியிலே பணி செய்கின்ற துப்புரவுப் பணியாளர்களுக்காக அன்றைக்கு இருந்த வெள்ளைக்கார ஆணையாளர் Conron Smith என்பவர் அரசிடமிருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் மானியம் வாங்கி 316 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். அந்தத் துப்புரவுப் பணியாளர்களுக்கு அந்த வீடுகளின் அடிமனைப் பட்டாவைக் கொடுத்துவிட்டால், அவர்கள் அதை மேலும் அபிவிருத்தி செய்வார்கள் என்கின்ற கோரிக்கையிலே பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாக நிலுவையிலே இருந்து வருகின்றது. ஆட்சிகள் பல மாறிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கேள்வியைக் கேளுங்கள். என்ன என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இது முக்கியம் வாய்ந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியம் வாய்ந்தது என்றால், ஏதாவது மானியக் கோரிக்கையில் பேச வேண்டும். முக்கியம் வாய்ந்ததை கவன ஈர்ப்பில் கொண்டுவரக் கூடாது. ஒரு கேள்வி கேட்பதற்குதான் அனுமதி; என்ன என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** கவன ஈர்ப்பில் ஒரு முக்கியமான செய்தியை அமைச்சருக்குச் சொல்ல விரும்புகிறேனே தவிர, அரசாங்கத்தைக் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. கேள்வியாகக் கேளுங்கள். இதுவரையில் மற்ற உறுப்பினர்கள் பின்பற்றிய அதே நெறிமுறைதான் உங்களுக்கும்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இந்தப் பிரச்சினையை அதிகார வர்க்கம் தவறான அணுகுமுறையிலே எடுத்துச் செல்கின்றது. இந்த வழக்கமான நடைமுறையிலே எடுத்துச் சென்றால் இந்தப் பிரச்சினைக்கு இன்னும் பல ஆட்சிகள் மாறினாலும் தீர்வு காண முடியாது என்று நான் கருதுகின்றேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால்—இந்த ஒரு பிரச்சினை மட்டும் அல்ல, சென்னையில் இதைப்போல 17 பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன—மாநகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர், பயனாளிகள் என்று முத்தரப்பு நேரடிப் பேச்சுவார்த்தை பேசி இதற்கு முடிவு காண வேண்டும் என்பதுதான் ஒரு தீர்வாக இருக்க முடியும். அதற்கான நடவடிக்கையை அமைச்சர் எடுக்க முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

[2005 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பட்டாவுக்குரிய இடம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இடத்திற்கு உண்டான மதிப்பீட்டை நிர்ணயம் செய்து அந்தத் தொகையைக் கட்டச் சொல்லியிருப்பதன்பேரில்—அவர் பணம் செலுத்தாமலேயே அந்த இடத்திற்கு இலவசமாகப் பட்டா வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கூறியிருந்தார். அவர் கேட்டுக்கொள்கின்ற அடிப்படையிலே மாநகராட்சி மன்றத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** 30-வது வருடத்திலே கட்டிய வீடுகள் இன்றைக்கு இல்லை. இல்லாத வீடுகளுக்குச் சந்தை விலையிலே கிரயம் பேசுவது என்பது சரியான முறையல்ல. அதற்கு அடிப்படையாக இருக்கின்ற அடிமனைகளுக்கு இலவசமாகப் பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே நீண்ட காலமாக இருக்கின்றார். 30 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தப் பகுதியினுடைய நிலையைப் பற்றி நன்றாகத் தெரியும். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பகுதியிலே மிகவும் மோசமான நிலையில் இருந்த இடம்கூட, இன்றையதினத்திலே 27 இலட்சம் ரூபாய் செலவிலே மிக நல்ல பூங்காவாக அங்கு அமைக்கப்படுகிறது. அது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலிக்கிறது என்று சொன்னாலே, அதன் மூலமாகக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறி அமைகிறேன்.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன? Zero hour எல்லாம் முடிந்துவிட்டது. திரு. பால் மனோஜ் பாண்டியன்.



2005 ஏப்ரல் 8] [பேரவைத் தலைவர்]

***திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவை வணங்கி, 2003-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் நகராட்சி நிர்வாகம் குறித்த முப்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-25

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள்.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 175 முதல் 178 வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7-4-2005 ஆம் நாளன்று முன்மொழியப் பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன் மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன், கொஞ்சம் இருங்கள்.

[2005 ஏப்ரல் 8

# 4. விதி 110-ன்கீழ் அறிக்கை

## உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிமையாக விளங்குவது சட்டமன்றம். சட்டமன்றத்தின் மரியாதைக்குரிய உறுப்பினர்கள் மக்களின் மேம்பாட்டிற்காகச் சட்டங்களை நிறைவேற்றுவதோடு மட்டும் அல்லாமல், மக்களுக்கும் அரசுக்கும் இடையே பாலமாகச் செயல்பட்டு, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கடமை ஆற்றி வருகின்றனர். தங்களது கடமைகளை மேலும் செம்மையாகவும், சிறப்பாகவும் செய்திட ஏதுவாக, தங்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் சலுகைகளை உயர்த்தித் தர வேண்டும் என்று, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த அவையில் பல முறை கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ப. அரசன் மற்றும் திரு. ஜெக. வீரபாண்டியன் ஆகியோர் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளனர். மேலும், தி.மு.க., பா.ம.க., காங்கிரஸ், பாரதிய ஜனதா ஆகிய கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 'மாநிலச் சட்டமன்ற' மானியக் கோரிக்கைமீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டில் இதேபோன்று வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு 13-9-2001 அன்று சட்டப் பேரவையில் 'மாநிலச் சட்டமன்ற' மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எனது ஆணையின் பேரில், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு அரசுக் கொறடா மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குச் சம்பளம் மற்றும் சலுகைகளையும்,



2005 ஏப்ரல் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு மருத்துவப் படியையும் உயர்த்தி அறிவித்தார். மேலும், இந்த உயர்வுகள் 15-9-2001 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்றும் அறிவித்தார்.

எனினும், அன்றைக்கு தமிழக அரசின் நிதிநிலை மிகவும் மோசமாக இருந்த காரணத்தால், சட்டமன்றத்தில் செய்யப்பட்ட இந்த அறிவிப்பைச் செயல்படுத்த இயலவில்லை. எனது அரசு முனைப்புடன் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால், தற்போது நிதிநிலை ஓரளவு சீர்பட்டு, முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டுள்ளது. இந்நிலையில் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கடமையைக் கருத்தில்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட சம்பளம் மற்றும் சலுகை உயர்வுகளைத் தற்போது வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இதன்படி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுவரும் ஈட்டுப் படி - Compensatory Allowance - 3,500 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் ஆகவும்; தொலைபேசிப் படி 2,750 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாகவும்; தொகுதிப் படி 875 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும்; தபால் படி 875 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும்; தொகுப்புப் படி - Consolidated Allowance - 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாகவும் உயர்த்தப்படும். இதனால் சட்டமன்ற உறுப்பினர்கள் தற்போது பெற்றுவரும் 2,000 ரூபாய் சம்பளம் உட்பட்ட ஒட்டுமொத்த மாத ஊதியம் - total emoluments - 12,000 ரூபாயிலிருந்து 16,000 ரூபாயாக உயரும்.

மேலும், சட்டமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும், குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தினப் படி 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்படும்.

சட்டமன்ற உறுப்பினராய் இருக்கும்போது இறந்துவிடும் உறுப்பினர்களின் சட்டப்படியான வாரிசுதாரருக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினரின் எஞ்சிய பதவிக் காலம் முடிய மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுவரும் குடும்பப் படி - Family Allowance - 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்படும். சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் மருத்துவப் படி 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 8

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா ஆகியோரின் தற்போதைய மாதச் சம்பளம் 6,500 ரூபாயிலிருந்து 7,000 ரூபாயாகவும், ஈட்டுப் படி 3,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும். மேலும், எதிர்பாராச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு 2,500 ரூபாயும், தொகுதிப் படியாக மாதம் ஒன்றுக்கு 2,000 ரூபாயும் வழங்கப்படும். எனவே, பேரவைத் துணைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், அரசு தலைமைக் கொறடா ஆகியோரின் ஒட்டுமொத்த மாத ஊதியம் 9,500 ரூபாயிலிருந்து 17,500 ரூபாயாக உயரும்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோருக்குத் தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் ஈட்டுப் படி 3,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தப்படும். மேலும் எதிர்பாராச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாயும், தொகுதிப் படியாக மாதம் ஒன்றுக்கு 2,000 ரூபாயும் வழங்கப்படும்.

இதனால், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோர் தற்போது பெற்று வரும் 7,000 ரூபாய் சம்பளம் உட்பட்ட ஒட்டுமொத்த மாத ஊதியம் – total emoluments – 10,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயரும்.

இம்மாமன்றத்தில் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளவாறு 15–9–2001 முதல் இந்த உயர்வுகள் அமல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1.58 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகும். இந்த உயர்வுகள் 15–9–2001 முதல் முன் தேதியிட்டு வழங்கப்படுவதால், நிலுவைத் தொகைக்காக 5.60 கோடி ரூபாய் செலவு ஆகும்.

மேலும், சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்த நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன். இதன்படி ஓராண்டுக்குமேல் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றிய முன்னாள் உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளேன். இந்த ஓய்வூதிய உயர்வு 1–4–2005 முதல் அமல்படுத்தப்படும். இந்த ஓய்வூதிய உயர்வினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் ஆகும்.



2005 ஏப்ரல் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இன்று நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்புகள் மூலம் சட்டமன்றத்தில் எனது அரசு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அந்த 110 விதியின்கீழ் படிக்கப்பட்ட அறிக்கையின்மீது நான் எதுவும் கேட்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறபோது—அவர்களுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அவர்கள் அறிவிப்பார்கள், அதில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகமும் அதில் வெட்டுத் தீர்மானம் கொடுத்து, சம்பளத்தை உயர்த்தும்படி கேட்டது என்று சொல்வதை, அது தவறான செய்தி என்றுதான் நான் அதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ப. ரங்கநாதன் அவர்கள் தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் தானே! அவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இன்னும் முழுமையாக இணையவில்லை என்று தெரிகிறது. இந்த மகிழ்ச்சியான சூழ்நிலையில் திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் நினைந்தூட்டும் தாயாக, தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தை நடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடிகள், அமைப்பு சாராத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல எங்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கும், சலுகைகளை அறிவித்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலையிலே திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முக்கியமான...

[2005 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன் என்ன?

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. தி. வேல் முருகன் பேசுங்கள்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை**
—தொடர்ச்சி

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிக முக்கியமான துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த அவையில் என்னைப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த எங்கள் தமிழினப் போராளி, மக்கள் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கும்...

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

### உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஊதிய உயர்வு, படிகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 ஏப்ரல் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உயர்வு தேவையில்லை என்று இப்போது கூறினார். தேவையில்லை என்று உண்மையிலேயே அவர் கருதினால், அவருக்கு வழங்கப்படும் இந்தக் கூடுதலான ஊதிய உயர்வை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த உயர்வு அனைத்தையும், முதல்வர் கேட்டுக்கொண்டதுபோல் அவர்களுடைய நிதியிலே இணைத்துக்கொள்வார்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஊதிய உயர்வுகளில் அகில இந்திய அளவில் எங்களுடைய கட்சி என்ன நிலைப்பாட்டை எடுக்கிறதோ அதைத்தான் இங்கே அறிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது சம்பந்தமாக இப்போது எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை. இது நாட்டு மக்கள் வெளியிலே தொகுப்பு ஊதியம், மதிப்பு ஊதியமும் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. வேண்டாம். வேண்டாம். போதும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் இந்தச் சம்பளம் விஷயத்தில் அகில இந்திய ரீதியாக அவர்கள் கட்சி என்ன முடிவை மேற்கொள்கிறதோ அதே முடிவைத்தான் அவர்களும் பின்பற்றுவார்கள் என்று தெரிவித்தார். அப்படியானால், மேற்கு வங்காள மாநிலத்தில், கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறும் மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் வெறும் 1,500 ரூபாய்தான். எல்லாப் படிகளையும் சேர்த்தால் ஒட்டுமொத்தச் சம்பளம்–total emoluments 5,900 ரூபாய்தான். ஆகவே, இந்தியா முழுவதற்கும் ஒரே கொள்கை என்றால் 5,900 ரூபாய்க்குமேல் நீங்கள் பெறுகின்ற சம்பளத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை**

—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் முடிந்தது. திரு. வேல் முருகன். *(கூச்சல்–குழப்பம்)*

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக மிகச் சிறப்பாக–பாரதப் பிரதமர் அவர்களாலும், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களாலும், அனைத்து பத்திரிகைகளாலும் பாராட்டப்படுகின்ற வகையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற எங்கள் மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலையிலே நான் பேசுவதற்கு வந்திருக்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த ஆவலான எதிர்பார்ப்பை கேட்டுக்கொண்டு இருக்கின்ற இந்தநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இனிப்பான செய்தியை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்ததற்காக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் நன்றி சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லி, சில செய்திகளை அரசின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வருவதற்குக் காத்திருந்தேன், நேரம் கிடைக்கவில்லை. அதற்கான வாய்ப்பு இன்றைக்குத் தரப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சி–பண்பாடுத் துறையிலே நேற்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பு அறிவிக்கின்றபோது, தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாடுகளைக் காப்பதற்காகப் பல அமைப்புகளை உருவாக்கி, மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றைப் போற்றி வருகின்றனர் என்றும், அவர்களுக்காக ரூபாய் 5 இலட்சம் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அந்த வரவேற்பை பாட்டாளி மக்கள்



கட்சியின் சார்பாகவும், தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாகவும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழருடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கேலிக்கூத்தாக்குகின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி ஒரேயொரு விஷயத்தை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படி நல்ல பல திட்டங்களை அறிவிக்கின்ற நம்முடைய அரசு, இன்றைக்கு சின்னத் திரை, பெரிய திரை என்று சொல்லக்கூடிய இந்த ஊடகங்களில் தமிழ்நாட்டினுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் கேலிக்கூத்தாக்குகின்ற, கேவலமான, இழிவான ஆபாசமான, வன்முறையான, வக்கிரமான சில காட்சிகளைத் திரைப்பட ஊடகங்கள் இன்றைக்கு இளம் மகளிர் மனதிலே கேடு விளைவிக்கின்ற காட்சிகளெல்லாம் தமிழ்நாட்டினுடைய திரைப்படத் தொழிலில் இடம் பெற்றிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு பெண்ணாக இருக்கின்ற காரணத்தினாலும்....

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கும், என் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கும், இதற்குப் பதில் அளிக்கும் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்ததற்கும் நான் உண்மையிலேயே நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் இப்போது என்ன சொன்னார்? இன்றைக்கு வெளிவருகின்ற தமிழ்த் திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகள், ஆபாசக் காட்சிகள், விரும்பத்தகாத அம்சங்கள் நிறைந்திருக்கின்றன என்றார். உண்மையாக இருக்கலாம். நான் தற்போது வெளிவருகின்ற தமிழ்த் திரைப்படங்களைப் பார்ப்பதில்லை. எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அது சரியாகத்தான் இருக்கும். அப்படியானால் இந்த ஆபாசக் காட்சிகள், வன்முறைக் காட்சிகள், ஆட்சேபணைக்குரிய காட்சிகள் எல்லாம் இடம் பெறாமல் செய்ய வேண்டியது யாருடைய பொறுப்பு? மத்திய அரசு அமைக்கும்,

நியமிக்கும் தணிக்கைக் குழுவின் பொறுப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மத்திய அரசு நியமித்திருக்கும் தணிக்கைக் குழுவில் யார் இருக்கிறார்கள்? பெரும்பாலும் தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைக்குத் தணிக்கைக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, உங்கள் ஆட்சேபணையை அங்கே தெரிவிக்க வேண்டும். இது மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட விஷயமல்ல. இன்றைக்கு தமிழ்த் திரைப்படங்களில் அதிகமான அளவில் ஆபாசக் காட்சிகளும், வன்முறைக் காட்சிகளும், விரும்பத்தகாத காட்சிகளும் இடம் பெறுகின்றன என்றால், அதற்கெல்லாம் அனுமதி வழங்கிய மத்திய அரசின் தணிக்கைக் குழு, தி.மு.க. உறுப்பினர்கள் நிறைந்த தணிக்கைக் குழுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவிலே, நடிகர், நடிகைகளுக்கு விருது வழங்குகிற விழாவிலேயே முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தையெல்லாம் வலியுறுத்தி, அவர்களுக்கு வேண்டுகோளாக எல்லாம் வைத்தார்கள். ஆக, முதலமைச்சர் அவர்கள் எந்த வகையிலே அந்தக் கடமையைச் செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தணிக்கைத் துறை அதைப் பரிசீலித்து, அதிலே வரக்கூடிய ஆபாசக் காட்சிகள், வன்முறைக் காட்சிகள், அவற்றைத் தவிர்க்க வேண்டியது, அவர்களுடைய கடமை. (குறுக்கீடு) திரு. பரிதி, என்ன?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல மத்திய Censor Board–லே தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இப்போதுதான் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இனிமேல் இதுபோல் வராமல் பார்த்துக்கொள்வார்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைக்கு வருகிறேன். மாநில அரசின் மொத்த வருவாயில் கேளிக்கை வரியைத் தவிர்த்து, ஏனையவற்றின் வரி வருவாயில் 8 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இந்த 8 சதவீதத்திற்குப் பதிலாக 20 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல 2004 ஆம் ஆண்டு திரையரங்குகளில் கேளிக்கை வரி சதவீதம் குறைக்கப்பட்டதனால், சுமார் 20 கோடி ரூபாய் வருவாய் குறைந்துள்ளது. இதன் விளைவாக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்க வேண்டிய நிதி



குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், கிராமப்புற வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புக்கும் என மத்திய அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக மாநில அரசுக்கு நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இப்படிப் பெறப்பட்ட நிதி உதவிகளை மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், அந்த நிதி பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று பரவலான ஒரு குற்றச்சாட்டு இருந்துவருகிறது. அதேபோல், அரசமைப்புச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி பெற்ற நிறுவனங்களாக அமைக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கட்சியினுடைய கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் தன் சுய வருமானம் மூலம், தங்களுக்குள்ள சுய அதிகாரம் மூலம் தாங்களே மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து அமல்படுத்திக்கொள்ள அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் தலைவர்களை நீக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உள்ள அதிகாரம் திரும்பப்பெற வேண்டும். இதற்குச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கடந்த சில ஆண்டுகளாக பரவலாக எதிர்க் கட்சியிலே இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக, அவருக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தக் கவுன்சிலர்களை விலைபேசி வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையின் காரணமாகப் பல்வேறு உள்ளாட்சிப் பிரதிநிதிகளுடைய பதவிகள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள பல ஏரி, குளங்களின் கொள்ளளவு குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் ஆக்கிரமிப்புகள் பெருமளவிலே ஏற்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, ஒரு செய்தியைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்குப் பத்திரிகைகளிலேயெல்லாம் தலைப்புச் செய்திகளாக வந்திருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏரி உடைக்கப்பட்டு, 8 நபர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். நாமக்கல் மாவட்டத்திலே, அதைப்போல திருச்சியிலே இரண்டு நபர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். இந்த ஏரிப் பராமரிப்பிலும், தூர்வாருவதிலும், ஏதோ

மேலோட்டமாகச் செய்யாமல், அதிலே முழுவதுமாக அரசு கவனம் செலுத்தி, ஆழப்படுத்தித் தூர்வாருவீர்கள் என்று சொன்னால், இப்போது பெய்திருக்கின்ற இந்த மழை நீரை நாம் சேமிப்பதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். அதையும் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படி இந்த இயற்கைச் சீற்றத்தால் இறந்திருக்கக்கூடிய அந்த மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2 இலட்சம் வீதம் வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் இந்த நேரத்திலே வைக்கின்றேன்.

அதேபோல இந்த அரசுக்கு நன்றி சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு நான் மணல் குவாரிகளை அரசே எடுத்து நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, எடுத்து நடத்தி இன்றைக்கு வெற்றிகரமாக அந்த நிதி அரசுக்கு வருவதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அதேபோல மழை நீர் சேமிப்புத் திட்டத்தை எங்கள் சின்ன ஐயாவினுடைய பசுமைத் தாயகத்தின் சார்பாகக் கோரிக்கையாக வைத்தபோது, அதையும் பரிசீலித்து, அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதேபோல சுண்டல் விற்கின்ற குழந்தைகளுக்கு எல்லாம் மாலைநேரக் கல்வியை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் சொன்னபோதுகூட முதலமைச்சர் அவர்களுக்கும் எனக்கும் ஒரு சுவையான விவாதம்கூட அன்றைக்கு ஏற்பட்டது. அதை இந்த அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது.

என்னுடைய தொகுதியிலே முந்திரித் தொழிற்சாலை வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். இந்த நிதி ஆண்டிலே ரூ.10 கோடியிலே அது அமைக்கப்படுமென்று அறிவித்ததற்காகவும், – ஆக இவற்றிற்கெல்லாம் இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பாராட்டுவதற்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேநேரத்தில் தண்ணீர் – இன்றைக்கு உலக யுத்தம் என்று ஒன்று வருமென்று சொன்னால் அது நீருக்காக வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அறிவியல் அறிஞர்களும், கட்டுரையாளர்களும் கருத்து சொல்கின்ற இந்த நேரத்தில், இன்றைக்கு இந்தத் தண்ணீரை பல்வேறு இடங்களிலே பல்வேறு தனியார் நிறுவனங்கள் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து அந்த நீரை உறிஞ்சி பாக்கெட்டுகளிலும், கேன்களிலும், பாட்டில்களிலும் அடைத்து பல்வேறுவிதமான விலை நிர்ணயம் செய்து கொள்ளை அடித்துக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதைக் கட்டுப்படுத்தி அந்தத்



தண்ணீரை அரசே எடுத்து நடைமுறைப்படுத்தி அதற்கு விலை நிர்ணயம் செய்து விற்பதற்கு முன்வருமென்று சொன்னால் பல நூறு கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதென்ற செய்தியை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், ஒரு லிட்டர் பாலினுடைய விலை தமிழ்நாட்டிலே 10 ரூபாய். ஆனால், 1 லிட்டர் தண்ணீரினுடைய விலை இன்றைக்கு 15 ரூபாய். இந்தக் கொடுமை, தண்ணீரைக் காசு கொடுத்து தனியார் நிலையங்களிலே வாங்குகின்ற இந்த அவலம் போக்கப்பட வேண்டுமென்பதற்காக, அதுவும் பாதுகாப்பான குடிநீராக இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. ஏனென்றால் 10 மாதங்களுக்கு முன்பே அதைப் பாட்டிலில் அடைத்து கடைகளில் வைத்து விடுகிறார்கள். பேருந்தில்போய் உட்கார்ந்துகொண்டு குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்று சொல்லி, ஒரு பாட்டிலை கடையிலே போய் வாங்க வேண்டுமென்று சொன்னால் தேதி பார்த்து அது எப்போது தயாரிக்கப்பட்டது, எப்போது முடிகிறது என்று பார்ப்பது இல்லை. குடிக்கிறோம். அதிலே நூற்றுக்கணக்கான கண்ணுக்குத் தெரியாத விஷக்கிருமிகள் உள்ளடங்கி, இன்றைக்கு மனிதனுடைய உடலிலே பாதிப்பு ஏற்படுவதற்கு, பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதைக்கூட நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டபோது அன்றையதினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, raid செய்து அந்தத் தேதி முடிந்த பாக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். ஆனால், இன்றைக்கு அது நடைமுறையில் இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. அதையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாண்புமிகு ... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 3 மணித் துளிகளில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று அறிவித்தார்கள். இதுவரையில் இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திலே 12 T.M.C. தண்ணீர், கிருஷ்ணா நதி மூலமாக நமக்கு வந்ததில்லை. 2 T.M.C.தான் வந்திருக்கிறது. நான் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை சென்று அன்றைய முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவைப் பார்த்ததன் விளைவாக அந்த

2 T.M.C. அடி தண்ணீர் தமிழ்நாட்டுக்கு வந்தது. அதேபோல ஆட்சி மாறியிருக்கிறது. இன்றையதினம் திரு. இராஜசேகர ரெட்டி அவர்கள் அங்கே முதலமைச்சராக இருக்கின்றார். மீண்டும் ஒருமுறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களைச் சந்தித்து நீர் கேட்பார்களேயானால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இதைப் பற்றி நான் சொன்னதை மரியாதைக்குரிய உறுப்பினர் சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். அவர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர முதலமைச்சராக இருந்தபோது ஒருமுறை அவரைச் சந்தித்தேன் என்று குறிப்பிட்டார். அப்படியல்ல. முதலில் நான் முதலமைச்சராகப் பதவி ஏற்றதும் அப்போது ஆந்திர முதலமைச்சராக திரு. ஜனார்தன் ரெட்டி அவர்கள் இருந்தார்கள். அவரைச் சந்தித்து கிருஷ்ணா நதிநீர் விடுவிக்க வேண்டுமென்று கேட்டேன். அவருக்குப் பின்னர், திரு. விஜய பாஸ்கர ரெட்டி அவர்கள் ஆந்திராவின் முதலமைச்சராக இருந்தார். அவரையும் நான் சந்தித்து கிருஷ்ணா நதிநீரை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதன்பிறகு மரியாதைக்குரிய திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் ஆந்திராவின் முதலமைச்சராக இருந்தார். அவரையும் சென்று பார்த்து கிருஷ்ணா நதிநீரை உரிய அளவில் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதன் பின்னர், திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர முதலமைச்சரான பிறகு அவரையும் சென்று சந்தித்தேன். 2 முறை சந்தித்தேன். தண்ணீரை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அண்மையில் திரு. இராஜசேகர ரெட்டி அவர்கள் ஆந்திர முதலமைச்சரான பிறகு அவரையும் சென்று சந்தித்திருக்கிறேன். அவரையும் கேட்டுக்கொண்டு அவர் அதற்காக நான் கேட்டுக் கொண்டதன்பேரில் 272 T.M.C. அடி தண்ணீரைக்கூட விடுவித்திருக்கிறார். ஆகவே, என்னைப் பொறுத்தவரை செய்ய வேண்டிய முயற்சிகளை, கடமை உணர்வுடன், சிரத்தையுடன் செய்துகொண்டே வருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-50*

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு 1989 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணை வெளியிட்டதிலிருந்து இதுவரையில்—அன்றைக்கு இந்த ஆழிப்பேரலை ஏற்பட்டபோது, நம்முடைய அரசின் செயல்பாடுகளைப் பார்வையிட, W.H.O.-வைச் சார்ந்த, World Health Organisation-னுடைய Director General, Dr. Lee அவர்கள் நேற்றைய முன்தினம் எங்களுடைய மாண்புமிகு மத்திய அமைச்சரோடு கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும், சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்களும் வருகை தந்தார்கள். அவர்களைப் பாராட்டுகின்ற வகையிலே அந்தச் சுனாமி என்கின்ற கடற்சூழ் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களையும் துப்புரவுகளையும் வழங்கியதைக் கருத்தில் கொண்டு, அவர்களுடன் பேசிக்கொண்டு மனமாரப் பாராட்டியதை நான் பக்கத்திலே இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படிப் பாராட்டுகின்ற அளவிற்கு அரசுக்குப் பெருமையைத் தேடித் தருகின்ற வகையிலே அந்தச் செயலை அரசு திட்டியிருந்தாலும்கூட, அதை நடைமுறைப்படுத்தியது யார் என்று சொன்னால், நகராட்சிகளிலே பணிபுரிகின்ற அந்தத் துப்புரவுப் பணியாளர்கள்தான். சொந்த உறவினர்களுடைய உடலையே மூன்று நாட்களுக்குப் பிறகு அழுகிவிட்டால் தொட்டுத் தூக்குவதற்குப் பயப்படுகின்ற இந்தச் சமூகத்தில் அந்தத் தொழிலை இன்றைக்குச் செய்து வருகின்ற அந்த நகராட்சிப் பணியாளர்களை—இந்த அரசாணையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் அவர்களை அரசு ஊழியர்களாகக் கருத வேண்டும். இல்லையென்று சொன்னால், கர்நாடகத்திலே இருக்கின்ற அரசு, அந்த அரசாணையைப் போட்டு அவர்களுக்கு அரசுக் கருவூலத்திலிருந்து சம்பளம் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, இப்படி இந்த அனைத்துக் கழிவுகளையும் அகற்றுகின்ற... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறேன் பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் வேண்டும். பிரச்சினை என்பது முக்கியம் அல்ல.

**திரு. தி. வேல் முருகன்:** ஆதலால் அவர்களை நீங்கள், தயவுசெய்து இந்த அரசு கருணையுள்ளத்தோடு அந்த நகராட்சித் துப்புரவுப் பணியாளர்களையும், நகராட்சி ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நகராட்சி ஆணையாளர் பதவிகள் தமிழகத்திலே பல்வேறு நகராட்சிகளிலே காலியாக உள்ளன என்ற செய்தி வந்துள்ளது. அதேபோல் நகராட்சிகளிலே பணிபுரிகின்ற நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஊழியர் பதவிகள் கீழ் மட்டத்திலேயிருந்து மேல் மட்டம் வரைக்கும் இன்றைக்குக் காலி இடங்களாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற செய்தி இன்றைக்கு வந்திருக்கிறது.

அதேபோல் அரசு ஊழியர்களுக்கு விபத்திலே காயம் ஏற்பட்டாலோ, அல்லது அவர்கள் ஏதாவது ஒரு உறுப்பை இழந்தாலோ தனியார் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று, அவர்களுக்குச் செலுத்த வேண்டிய அந்தத் தொகையை அரசிடத்திலேயிருந்து claim செய்வதற்கு அரசு வழிவகை செய்கிறது. ஆனால், இந்த நகராட்சி ஊழியர்களுக்கு அதுபோன்ற எந்தச் சலுகையும் கிடையாது. அந்தச் சலுகையை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

அதேபோல அரசினுடைய வீட்டுவசதி வாரியத்தில் இருக்கின்ற குடியிருப்புகளிலே இந்த நகராட்சி ஊழியர்களுக்கு இடம் இதுவரையிலும் ஒதுக்கப்படவில்லை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் தாங்கிக் கொண்டு செயல்படுகின்ற, இந்த மக்களுக்கு சுகாதாரமான வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும். நாமெல்லாம் இன்றைக்கு, சென்னை மாநகரத்திலே சுகாதாரத்தோடு வாழ்கிறோம் என்று சொன்னால், அதற்கு அடித்தளமாக இருக்கின்ற அந்த நகராட்சி ஊழியர்களுக்கு இந்த அரசு கருணையுள்ளத்தோடு -- எத்தனையோ 110 வருகிறது என்று சொன்னாலே, நாட்டுமக்களுக்கு நல்ல திட்டங்களை இன்று அறிவிக்கப்போகிறார் முதலமைச்சர் என்ற ஒரு நிலை இன்றைக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி -- ஏதாவது 110–லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மக்களுக்கு ஒரு நல்ல திட்டத்தை அறிவிப்பதற்கும், அவர்களுடைய வயிற்றிலே பால் வார்ப்பதற்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** ஒரே ஒரு second. பேச்சை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல நம்முடைய தமிழ்நாடு அரசு மூலமாக அந்த நகராட்சிகளிலே



தணிக்கையாளர்கள் தணிக்கை செய்கின்றபோது பல ஆண்டுகளாக பல நகராட்சிகளிலே கோடிக்கணக்கான ரூபாய் நிலுவையில் இருக்கிறது. உதாரணத்திற்கு இன்றைக்கு விருத்தாசலம் நகராட்சியிலே மட்டும் பல ஆண்டுகளாக- நான் இந்த அரசிலே மட்டும் என்று சொல்லவில்லை- 20 ஆண்டுகாலமாக பார்த்தோம் என்றால் 7 கோடி ரூபாய் தணிக்கை செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்படாமலே இருக்கிறது. அதேபோல், நம்முடைய Accountant-General என்று சொல்லக்கூடிய மத்திய தணிக்கைத் துறை தணிக்கை செய்கின்றபோதுகூட பல்வேறு தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்தத் தணிக்கைத் துறை பதில் கேட்கின்றபோது சில துறைத் தலைவரிடத்திலேயிருந்தும் துறைச் செயலகத்திலேயிருந்தும் சரியான reply, சரியான பதில் தருவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளிய அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய இந்தத் துறை மிக முக்கியமான துறை. இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு, இந்தத் துறையிலே இருக்கின்ற தவறுகளை எல்லாம் களைய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, ஒரேயொரு செய்தியை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு செய்தி.

2005–2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 50–ல் 'சென்னை மாநகர மக்களுக்கு 2004 மே திங்களில் நாள் ஒன்றுக்கு 205 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க முடிந்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 66–லே புதிய வீராணம் திட்டத்தின் மூலம் அதன் முழு அளவான நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னை நகருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நேற்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது சொன்னார்கள். இன்றைக்கு 'தினத்தந்தி'–யிலே முதல் செய்தியாக, முதல் பக்கச் செய்தியாக வந்திருக்கிறது. 265 மில்லியன் லிட்டர் நாங்கள் தண்ணீர் தந்திருக்கிறோம் என்று. என்னுடைய கேள்வி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படுகின்ற நீரின் அளவு 840 மில்லியன் லிட்டர் கொள்ளளவு என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அப்படியென்று சொன்னால், இந்த வீராணம் திட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு எந்தத் திட்டத்தின் மூலமாகவோ இந்த சென்னை நகர மக்களுக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படுகின்ற நீரின் அளவு எவ்வளவு? அதற்கு அரசு செலவிடுகின்ற தொகை எவ்வளவு என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு) திரு. கேசி. கருணாகரன். (குறுக்கீடு) திரு. வேல் முருகன், முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

### உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை— தொடர்ச்சி

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அவைக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டார். அப்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராகிய திரு. ரங்கநாதன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார் என்று குறிப்பிட்டேன். அந்த வெட்டுத் தீர்மானத்தில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிவித்தால் சுவையாக இருக்கும் என்று கருதுகிறேன். திரு. ப. ரங்கநாதன் அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானம், "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் சம்பளம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறார். ஆகவே, வெட்டுத் தீர்மானம் மட்டும் கொடுக்கவில்லை. ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று மட்டும் அவர் கோரவில்லை. 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கம்யூனிஸ்ட் உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் பேசுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஊதிய உயர்வு தேவையே இல்லை. இந்தியா முழுவதிலும் என்ன கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறதோ, அதே கொள்கையைத்தான் கம்யூனிஸ்ட் கட்சி



சட்டமன்ற உறுப்பினர்களும் கடைப்பிடிப்பார்கள் என்று தெரிவித்தார். அப்படியானால், மேற்கு வங்காளத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒட்டுமொத்தச் சம்பளம், total emoluments, 5,900 ரூபாய் என்பதைக் குறிப்பிட்டு, 5,900 ரூபாய்க்கு மேல் இங்கே என்ன வழங்கப்படுகிறதோ, அதை கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மேலும், ஒரு வேண்டுகோள். இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஊதிய உயர்வு, with retrospective effect - ஆக வழங்கப்பட்டுள்ளது. அதாவது, அறிவிக்கப்பட்டுள்ள நாள் முதலாக 15-09-2001 முதல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் இந்தியா முழுவதும் ஒரே கொள்கையைக் கடைப்பிடிப்பதால், நீங்கள் என்றைக்கு இங்கே சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்றீர்களோ, அன்றுமுதல் with retrospective effect - நீங்கள் 5,900 ரூபாய்க்குமேல் வாங்கிய சம்பளத்தை எல்லாம், நீங்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்) திரு. வேல் முருகன், இல்லை, வேண்டாம், வேண்டாம். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. 20 நிமிடங்களாகப் பேசியாகி விட்டது. நேரமில்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் (குறுக்கீடுகள்)...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் மேலும் சுவையான தகவல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்கள் மேலும் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்திற்கு இலவசமாகக் குளிர்சாதனப் பெட்டி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறார். இதைப்பற்றி திரு. துரைமுருகன் அவர்கள் என்ன கருதுகிறார் என்று நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

## 3. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை** —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இருங்கள். திரு. தி. வேல் முருகன், வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் முடித்துவிடட்டும்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நமது கிராமம் திட்டம்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. கருணாகரன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடிப்பதாக இருந்தால் அனுமதிக்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** சரி, சரி. வாக்கியத்தை நிறைவு செய்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒரு கோடி ரூபாயை சட்டமன்ற உறுப்பினர்களே மக்களிடத்திலே சென்று குறை கேட்கின்றபோது, ஆயிரக்கணக்கான மனுக்களை பொதுமக்கள் தருகின்றபோது, அந்த மனுக்களுக்கு ஏற்றவாறு நிதியை ஒதுக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த சட்டமன்ற உறுப்பினர் நிதியை, வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு, அதை மாற்றியமைப்பதற்கு ஆலோசிக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைத்து, (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். ஒரேயொரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள், காலையிலே zero hour-ல் ஒரு பிரச்சினையைக் கிளப்புவதற்கு முற்பட்டார். நேற்றையதினம், திருவள்ளூர் மாவட்டத்திலே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதற்கெல்லாம் அனுமதி மறுக்கப்படுகிறது. (குறுக்கீடு)





## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

### உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய உயர்வு வழங்குதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மானியக் கோரிக்கையின் மீதான விஷயத்திற்குள், விவாதத்திற்குள் வருவதற்கு முன்னால், ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். இந்த ஊதிய உயர்வு சம்பந்தமான பிரச்சினையிலே, எங்களுடைய கட்சியின் நிலையைத்தான் திரு. நன்மாறன் சொன்னார். எங்கள் கட்சி அனுமதித்தால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. எங்களுடைய கட்சி அனுமதித்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய மொத்தத் தொகையையும் வழங்குவதற்கு, எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே இல்லை. இந்த நேரத்தில் நான் ஒரு விஷயத்தை தயவுசெய்து,...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சி அனுமதித்தால் வழங்குவதற்கு ஆட்சேபணை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். இப்போது ஏற்கெனவே திரு. நன்மாறன் அவர்கள், இந்த ஊதிய உயர்வே தேவையில்லை என்றாரே, கட்சியின் அனுமதியைப் பெற்றுத்தான் அதை இங்கே சொன்னாரா? (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-00*

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை. இல்லை. இதுபோன்ற அரசாங்க ரீதியிலே வழங்கப்படுகிற (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) அரசாங்கம், (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, இருங்கள், இருங்கள். நான் பேசுகிறேன்.

[2005 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், பேசி முடித்துவிடட்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதாவது, இன்னும் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், அரசு வழங்குகிற ரூ.12,000 ஊதியத்தை, எங்கள் உறுப்பினர்கள் சல்லிக் காசை நாங்கள் கையிலே தொடுவது கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. promise–ஆக. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், நான் பதிவு செய்கிறேன். உங்களை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** யாரையும் வேண்டாமென்று சொல்லவில்லை. எங்கள் நிலையைச் சொல்வதற்கு எனக்கு உரிமையுண்டு. ரூ.12,000 மொத்தத் தொகையை கட்சிக்கு வழங்கிவிடுகிறோம். மாதாந்திரம் பில் வாங்குகிறோம் கட்சியிலிருந்து; முழுநேர ஊழியர்களுக்கு கட்சி allowance ரூ3,000 தருகிறது. அதில்தான் நாங்கள் வாழ்க்கை நடத்துகிறோம். இப்போது நான் சொல்கிறேன், வெட்டுத் தீர்மானம் நான் தந்திருக்கிறேன். இந்த நிதி முழுவதையும் நாங்கள் தரத் தயார். எங்களுக்கு, அமைச்சர்களுக்கு வழங்குவதுபோல், இலவசமாக தொகுதியிலே வாகனம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். நாங்களெல்லாம் two wheeler-லே தான் போகிறோம். Two wheeler-லே போய்தான் நாங்களெல்லாம் வேலை செய்து கொண்டிருக்கிறோம். கார் கிடையாது. ஆகவே, அதை அரசு அனுமதித்தால், மொத்தத் தொகையையும் நாங்கள் தருவதற்குத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அடுத்து நான் விஷயத்திற்கு வருகிறேன். ஆகவே, உங்களுக்கு வழங்கியதில் எங்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி. எந்த உறுப்பினருக்கும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள் - -அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்- -வாங்கிக்கொள்ளுங்கள். ஆட்சேபணையே இல்லை. எங்கள் நிலையைத்தான் நாங்கள் சொன்னோம். அடுத்து, மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், ஏன் வேண்டாமென்று சொன்னார் என்பதற்கான காரணத்தை இப்போது தெளிவுபடுத்தி இருக்கிறார். (குறுக்கீடு)



2005 ஏப்ரல் 8]

**திரு. கே.சி. கருணாகரன்:** அவ்வளவுதான், அவ்வளவுதான். (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எங்களுக்குத் தெரியாத மிகப் பெரிய ஒரு உண்மையை இப்போது அவர் போட்டு உடைத்ததற்கு நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஊதிய உயர்வு வேண்டாமென்று ஏன் சொல்கிறார்கள் என்று இப்போதுதான் புரிகிறது. அது எப்படியும் அவர்கள் கைக்கு எட்டப்போவதில்லை, கட்சித் தலைமையிடத்திற்குத்தான் செல்லப்போகிறது, அதுதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய முறையிலே அல்ல. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் கருணாகரனோ அல்லது நானோ சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலே அல்ல. இந்தச் சபை துவங்கிய காலத்திலேயிருந்து, திரு. ஜீவானந்தம் காலத்திலிருந்து, திரு. ராமமூர்த்தி காலத்திலிருந்து, இந்த அவையிலிருந்த பல்வேறு மூத்தத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள் எல்லாம் இருந்த காலத்திலிருந்து கட்சியினுடைய கட்டுப்பாட்டின் கீழ்தான் நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறோம். எங்கள் நிலையைத்தான் நாங்கள் தெளிவுபடுத்தினோமே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குறையாக ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் குறை சொல்லவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** எந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டாமென்று நாங்கள் வாதிடவே இல்லை. ஆகையால், எங்களுக்காக நாங்கள் கேட்பதில்லை என்கிற முடிவைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே தவிர, இன்னும் சொன்னாலும்கூட, ஒரு உறுப்பினர் யாராக இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற நடைமுறையிலே மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம், (குறுக்கீடு) சேவை செய்வதற்கு.

[2005 ஏப்ரல் 8

## 3. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை** —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்– தொடர்ச்சி. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்ற மானியக் கோரிக்கைமீது நான் இப்போது என்னுடைய விவாதத்தைத் துவக்குகிறேன். கடந்த பிப்ரவரி மாதம், 4 ஆம் தேதி, இந்த அவையிலே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிறபோது, நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டபோது, முதலமைச்சர் அவர்கள் அதற்கு அப்போதே பதிலளித்தார்கள். அதாவது, கோவை மாநகராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுப் பகுதிகளில் இரண்டு இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதிலே உள்ள நிபந்தனைகளை நான் வலியுறுத்தியபோது, முதல்வர் அவர்கள் தலையிட்டு, நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை கோவைக்கு அனுப்புகிறேன். அதன்மீது அறிக்கை பெற்று இறுதியான தீர்ப்பை வழங்குகிறேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நேற்றும் இன்றும் பல நூற்றுக்கணக்கான தொலைபேசித் தகவல்கள் எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. இரண்டு இலட்சம் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையின் மீது நியாயமான தீர்ப்பை நீங்கள் வழங்குவீர்கள் என்று மிகப் பெரிய அளவிலே எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். அவசியம் நீங்கள் அதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற எந்த ஒரு கோரிக்கையாக இருந்தாலும், அதைப் பரிசீலனை செய்து, அதற்குரிய



நடவடிக்கை எடுப்பதன்பேரிலே, என்னை கோவைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் அடிப்படையிலே, கோவையிலே பார்க்கப்பட்ட அந்தப் பணிகளெல்லாம், அங்கே இருக்கின்ற நிலைப்பாடுகளை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்குரிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கூடிய விரைவிலே, பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமர்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்தப் பிரச்சினையில், இந்த அரசு அநேகமாக இந்த நிதிநிலை அறிக்கையில் இறுதிப்படுத்துகிறபோது மாநில முதல்வர் அவர்கள் அவசியம் நல்ல தீர்ப்பு வழங்குவார்கள் என்று நான் மட்டுமல்ல, கோவை மாநகர மக்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

அடுத்து, நம்முடைய ஆட்சியின் அதிகாரத்தைப் பரவலாக்கும் வகையில் உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல் போன்றவற்றுக்காக பல்வேறுகட்ட சட்டத் திருத்தங்களும், வழிகாட்டும் நெறிமுறைகளும், நிதி ஆணைக் குழுக்களின் பரிந்துரைகள் இருந்தபோதும், அவற்றை முழுமையாக அமலாக்காமல் உள்ளாட்சிமன்ற அமைப்புகள் பலவீனப்பட்டுள்ளன.

மாநில சுயாட்சி கோருகிற நாம் பஞ்சாயத்துக்களுக்கான தன்னாட்சி உரிமையை வழங்குவதில் தயக்கம் காட்டி வருகிறோம் என்றே நான் குற்றம் சாட்டக்கூட விரும்புகிறேன். அதாவது பஞ்சாயத்துக்களுக்கான அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே இந்த அரசின் கவனத்திற்கு நான் ஒன்றிரண்டு விஷயங்களைக் கொண்டுவருவது அவசியம் என்று கருதுகிறேன் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தலைமை ஆசிரியர் இல்லாதபோது மாணவர்கள் போடுகிற கூச்சலைப்போல் தெரிகிறது. மன்னிக்க வேண்டும். வேறு வழியில்லை. (சிரிப்பு) சில சந்தர்ப்பங்களில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்கூட வெளிநடப்புச் செய்வதுபோல் தோன்றுகிறது. ஆகவே, அமைதி காக்க வேண்டும். இது ஒரு தேசிய மற்றும் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறதனாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை திரு. கருணாகரன், இதையெல்லாம் நான் சொல்ல வேண்டியதை நீங்களே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு) சரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்த அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட வரைக்கும் உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கான வகையிலே பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், நடைமுறையில் அவை அமலாக்கப்படாமல் தொடர்ந்து பிரச்சினைகள் இருந்துவருவதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல நிதி ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினையிலும்கூட முதல் நிதி ஆணைக் குழு 1996–2001–ல் அமைக்கப்பட்டது. அதிலே உள்ளாட்சிமன்ற அமைப்புகளுக்கு முதல் வருடம் 8 சதவீதம், இரண்டாவது வருடம் 9 சதவீதம், மூன்றாவது வருடம் 10 சதவீதம் என்று கடைசியில் 12 சதவீதம் மாநில வருவாயிலிருந்து உள்ளாட்சிமன்ற அமைப்புகளுக்குத் தருவது என்று அது வழி காட்டுதல் கொடுத்தது. ஆனால், அதை அந்தக் காலத்திலே இருந்த அரசாங்கமும் அமலாக்கவில்லை. இரண்டாவது நிதி ஆணைக் குழு 2001–2006 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அந்த ஆணைக் குழுவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஒவ்வொரு ஆண்டுக்கும் முறையே 2001–வது வருஷத்தில் 8 சதவீதம், அடுத்து 9 சதவீதம், கடைசியில் 10 சதவீதமாக உயர்த்திக் கொடுப்பது என்று இரண்டாவது ஆணைக் குழு சிபாரிசு செய்தது. அந்த சிபாரிசை அ.தி.மு.க. அரசு அமலாக்கவில்லை. ஒரு விஷயத்தை நான் இங்கே சொல்லுகிறபோது இதன் அரசியல் பிரச்சினையை நீங்கள் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால் எதிரும் புதிருமாக விவாதிக்கிற தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் இதுபோன்ற பிரச்சினைகளை அமலாக்குவதில் ஒரே மாதிரியான நிலை எடுக்கிறது. மாறுபட்ட நிலையே கிடையாது. ஒன்றாவது நிதிக் குழுவை தி.மு.க. அரசு அமலாக்கவில்லை. இரண்டாவது நிதிக் குழுவின் ஆணையை அ.தி.மு.க. அரசு அமலாக்கவில்லை. ஆனால், சண்டை மட்டும் வலுவாக நடந்துகொண்டிருக்கிறது. இது என்ன சூட்சமமோ எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இம்மாதிரியான நிதிப் பிரச்சினைகளில் இரண்டு அரசாங்கங்களும் ஒரே மாதிரியான நிலையை எடுக்கிறது என்பதைத்தான் நான் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்து, இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான கூடுதல் நிதியை ஒதுக்கி அவற்றின்மூலம் செய்ய வேண்டிய வேலையை அரசு ஒரு பகுதி செய்கிறது.



சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதி மூலமாகவும் செய்யப்படுகிறது. இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த நிதியை 82 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியோடு சந்தோஷப்பட்டார்கள். நான் உட்பட மகிழ்ச்சியடைந்தோம். ஆனால், நேற்றையதினம் முதல்வர் அவர்கள் அறிவித்தபோது 25 இலட்ச ரூபாயை தொகுப்பு வீடுகளுக்குச் செலவழிக்க வேண்டும், இந்த நிதியிலே என்று சொன்னபோது பிரதிபலிப்பு அவ்வளவு நல்லதாக இல்லை. நான் இங்கிருந்து பார்த்தேன். நிதி அமைச்சர் அங்கு பார்க்க முடியாத நிலையிலே – இந்தப் பக்கம் எங்களைப் பார்த்துக்கொண்டிருந்தீர்கள். அந்தப்புறத்தினுடைய சலசலப்பு என்னமோ அவ்வளவு சந்தோஷமாக இல்லை. இல்லை, அதற்கு என்ன காரணம்? ரூபாய் பதினெட்டு இலட்சத்தைக் கூடுதலாகத் தந்து இருபத்தி ஐந்து இலட்சத்தைத் திருப்பி எடுத்துக்கொண்டது, கொடுப்பதுபோல் கொடுத்து, எடுப்பதுபோல் எடுத்துக் கொண்டது என்ன நியாயம்? ஏனென்று சொன்னால், மக்களுக்குத்தான், இது உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டியதுதான்...

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு முதல்–மறைந்த புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட அந்தத் தொகுப்பு வீடுகளை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகச் சீர் செய்வதற்கு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டதன்பேரில், மத்திய, மாநில அரசின் நிதியின் மூலமாக அதைச் செய்வதற்குண்டான வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், அந்த ஏழை மக்களுக்கு இன்றையதினம், ஒரு வீடானது ரூபாய் 34,000 மற்றும் ரூபாய் 36,500 அளவிலே கட்டிக் கொடுக்கப்படுகிறது. அந்தக் காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு, அவர்களுக்கு சீர்திருத்தம் செய்வதற்குக்கூட, கச்சா வீடுகள் மூலமாகவும் சீர்திருத்தம் செய்யவில்லை என்ற குறைபாடுகளை அந்த ஏழை மக்கள் கேட்டதன் அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்படி இருக்கின்ற வகையிலே, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருக்கின்ற காரணத்தினால், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக ஒரு வழிவகையினை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எவ்வாறு செய்யப்பட்டாலும், அது ஜனங்களுக்குப் போகிறது என்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னது சரிதான். ஆனால் இதை சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து செய்வதைவிட, அந்த நிதியை உள்ளாட்சி அமைப்புகளுக்கே தந்து அல்லது அரசாங்கம் நிதியை ஒதுக்கீடு செய்து, அந்த அமைப்புகள் செய்வதுதான், உள்ளாட்சிகளுக்கான உரிமைகளிலும், அதிகாரங்களிலும் நாம் நியாயம் வழங்குகிறோம் என்று அர்த்தப்படுவதற்காகத்தான் நான் நினைவுபடுத்துகிறேன். அதேபோல, மற்றொரு விஷயம் என்னவென்றால், ஏற்கெனவே நில வரி இரத்து செய்யப்படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பை உள்ளாட்சிகளுக்கு அரசு ஈடுகட்ட வேண்டும். இரண்டாவது நிதி ஆணைக் குழு சொல்லியிருக்கிறது. 33.30 கோடி ரூபாய் நில வரியை இரத்து செய்ததனால், 33.30 கோடி ரூபாய் வருவாய் இழப்பு உள்ளாட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த இழப்பை அரசு தரவேண்டும். எப்படி அது வேலை செய்யும்? அதேபோல, கனிமம் கிரானைட்டிலிருந்து வரும் வருவாயை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கிட அரசு உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று நிதி ஆணைக் குழு சொல்லியிருக்கிறது. அதை வழங்கவில்லை. ஊராட்சிகளுக்கு வரும் வருவாயில் பெரும் பகுதி, தெருவிளக்கு, குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கே செலவிடப்படுகிறது. ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியவில்லை. ஊராட்சிகளால் சுயமாக ஒரு திட்டத்தை உருவாக்கி அமலாக்க முடியாது. நேற்றையதினம் இரண்டாவது அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதாவது, இந்த ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டோம், பாராட்டுகிறோம், வரவேற்கின்றோம். ஆனால், இதை எங்கிருந்து கொடுப்பார்கள்? யார் கொடுப்பார்கள்? இந்த உயர்வை அந்த உள்ளாட்சிமன்ற அமைப்புகள்தானே கொடுக்க வேண்டும்? ஏற்கெனவே மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியாததனால் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. கே.சி. கருணாகரன்:** அடுத்து, அந்த நிதியை யார் கொடுப்பது? இந்த உயர்வை அந்த உள்ளாட்சி மன்றங்கள் தலையில்தான் சுமத்தப் போகிறீர்கள். ஆகவே, உயர்த்தப்பட்ட ஊதிய உயர்வு எவ்வளவு



தொகையோ அதை மானியமாக, நிதியுதவியாக மாநில அரசு அவற்றிற்கு வழங்க வேண்டும், உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, இரண்டாவது நிதி ஆணைக் குழு, மத்திய அரசு மாநிலத்திற்கு அளிக்கும் நிதியில், 5 சதவிகிதம் நிதியை மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும் என சிபாரிசு செய்தது. ஆனால், இதையும் தரவில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய வரி வருவாயில் 30.5 சதவிகிதத்தை மாநில அரசுக்கு மத்திய அரசு தருகிறது. ஆகவே, மாநில அரசாங்கம் அதே அளவிற்கான நிதியை உள்ளாட்சிமன்ற அமைப்புகளுக்குத் தருவதன் மூலமாகத்தான் இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியும், அவை தன்னாட்சியுடன் செயல்பட முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் அழுத்தமாக வலியுறுத்துகிறேன்.

அடுத்து, நான் இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பாராட்டையும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது, ஒரு குறையையும் சொல்ல வேண்டியிருக்கிறது. அது என்னவென்று சொன்னால், கோயம்புத்தூர் மாவட்டத்திலே ஓடந்துறை ஊராட்சி, இந்தியாவில் முதன்முறையாக மரக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கிறது. இந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி, 9 கிராமங்களுக்கு குடிநீர் supply–யை மோட்டார் பம்புசெட்டின் மூலம் இயக்கிக்கொண்டிருக்கிறது. சென்னியம்பாளையத்தில் sewerage, toilet கழிவுகளின் மூலமாக சாண எரிவாயு உற்பத்தி செய்து, அதன்மூலம் மோட்டார் பம்பு இயக்கி, அந்த toilet–க்குத் தேவையான தண்ணீரை பம்ப் செய்து, supply பண்ணுகிறது. அதுமட்டுமல்ல. சமையல் கேஸாகவும் அங்கன்வாடி மையங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதேமாதிரி, சீலிக்காம்பட்டி, கணக்காம்பாளையம், சிங்கயம்புதூர் ஆகியவை முழுச் சுகாதாரம் பெற்ற கிராமங்களாகக் கண்டறியப்பட்டு, தேசிய விருதுகள் பெற்றுள்ளன. அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் அமலாக்கியதில், தமிழகத்திலேயே கோவை மாவட்டம்தான் முதலிடம் வகிப்பதாகக் கண்டறியப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் தங்கப் பதக்கம் பரிசு தரப்பட்டிருக்கிறது. அதேபோல, மின்சார மாற்று, அதாவது மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி, 400–க்கும் மேற்பட்ட சோலார் விளக்குகளை, இந்தியாவிலேயே முதன்முறையாக கோவை மாவட்டம் செயல்படுத்தி, தேசிய விருதினைப் பெறவுள்ளது. இவற்றிற்காக அந்த மாவட்டத்தின் சார்பில், பரிசு வழங்கிய அரசுக்கு நன்றி தெரிவிக்கவும், பாராட்டுத் தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–15

அதே நேரத்தில் இது ஒரு புறம் இருக்க, மறுபுறம் நம்முடைய மேல்புறம் பற்றி ஒரு புகார் இருக்கிறது. குமரி மாவட்டம் மேல்புறம் ஒன்றியத்தில் உள்ள ஒரு குறைபாடு. அது என்னவென்று சொன்னால், (குறுக்கீடு) நான் முடித்துக்கொள்கிறேன், முடித்துக்கொள்கிறேன். புலியூர் சாலை ஊராட்சியில் கடந்த 2003–2004 ஆம் ஆண்டு ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 13 வீடுகளில், இரண்டு வீடுகள் மாத்திரமே கொடுத்து 11 வீடுகள் போலி ஜாதிச் சான்றிதழ் வாங்கி, பிற வகுப்பினர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அது ஒரு குற்றச்சாட்டு. இரண்டாவது, புலியூர் சாலை ஊராட்சியில், இன்னமும் 25–க்கும் அதிகமான குடியிருப்புகளுக்கு கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. மாங்காடு ஊராட்சியில் 45 வீடுகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும். முழுச் சுகாதாரமும் தன்னிறைவும் பெற்ற ஒன்றியமாக அது மாற்றப்பட வேண்டும். அடுத்து, இந்த குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக..(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முடித்துக்கொள்கிறேன். ஒரேயொரு நிமிடம். குடிநீர் வடிகால் வாரியம் சம்பந்தமாக, இரண்டு விஷயங்களை நான் ஏற்கெனவே இங்கு கிளப்பியிருந்தேன். ஒன்று கோவை மாவட்டத்தில் திருடப்பட்டுள்ள தண்ணீர் திருட்டு. வகைமாறி கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தண்ணீர் விநியோக ஏற்பாடு. நிர்வாக முறைகேடு. இவை பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் புகார் கொடுத்துள்ளேன். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அதேபோல..

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்ற கூட்டத் தொடரிலே கூறியதைப் போல அந்த நேரத்திலே அந்தத் தவறைச் செய்தவர்கள்மீது போலீஸ் துறை மூலமாகவும் மற்றும் துறை நடவடிக்கையின் மூலமாகவும், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திலே முறைகேடாக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று கூறினார். அது சம்பந்தப்பட்ட பெயர்களையும், எந்த 13 வீடுகள் என்று குறிப்பிட்டுக்



கொடுத்தார்கள் என்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கருணாகரன், சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முடிவிற்கு வந்துவிடுகிறேன். முடிவிற்கு வந்துவிடுகிறேன். அடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ஊழியர்கள் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய தொகுப்பு ஊதியத்தை மதிப்பு ஊதியமாக மாற்ற வேண்டுமென்று சொல்லியும், நிரந்தரம் செய்யப்படாதவர்கள், நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லியும், ஏற்கெனவே வழங்கப்பட்ட சில சலுகைகள், உரிமைகள் இப்போது மறுக்கப்பட்டு வருவதாகவும், நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாகவும், குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள் சொல்கிறார்கள். அதனை கணக்கில் எடுத்து நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்திக்கடவு–அவினாசி கூட்டுக்குடிநீர்த் திட்டம் வெறும் கானல் நீராக, தேர்தல் கனவாக ஆகிவிடுமோ என்று நாங்கள் அச்சப்படுகிறோம். அது பாசனத் திட்டமல்ல, குடிநீர்த் திட்டம், குடிநீர்த் திட்டம், குடிநீர்த் திட்டம் என்று தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துகிறோம். பாசனத் திட்டம் என்று பதிவு செய்யப்பட்டிருந்தால், அதை மாற்றி இரத்து செய்து குடிநீர்த் திட்டமாக மாற்றி அதனை அமல்நடத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை, அரசானது நிறைவேற்றுவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

முற்பகல் 11–20

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிமன்றம் என்பது ஜனநாயக முறை வடிவத்தில்,

பாராளுமன்றம், சட்டமன்றம் அடுத்து, மூன்றாவதாகத் திகழ்வது உள்ளாட்சி மன்றமாகும். இது அடிப்படை ஜனநாயக அமைப்பாகும். இது சுயேச்சையாகச் செயல்படும் தன்மை வாய்ந்தது. பெரும்பாலான நிதியினை மத்திய–மாநில அரசுகளுக்கு அளிக்கக்கூடிய பகுதியாக இது திகழ்கிறது. இந்த அமைப்பின் நிதி ஆதாரங்கள் அனைத்தையும், மத்திய–மாநில அரசுகள் பகிர்ந்துகொள்கின்றன. இதனால், இந்த மக்களுக்கு நேரடியாக தேவைகளை நிறைவேற்றும் இந்த அமைப்பு, நிதியின்றி எலும்புக்கூடாக மாறி, தன் தேவைக்கு சுயமாக நிதி திரட்ட முடியாத அமைப்பாக மாறிவிடுகிறது. இதனால் மக்களின் தேவைகளானாலும் சரி, இந்தத் துறையில் பணியாற்றிடும் அடித்தட்டு ஊழியர்களின் பிரச்சினைகளானாலும் சரி, தீர்க்க முடியாமல் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட கலெக்டரால் தினக்கூலிப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு 2,400 ரூபாய் வரை சம்பளம் பெற்று வந்த ஊழியர்கள், தொகுப்பு ஊதியம் என்ற பெயரில் 1,700, 1,000 ரூபாய் என்று குறைக்கப்பட்டு கீழான நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆண்டிற்கு 10 சதவிகிதம் சம்பள உயர்வு என்று அறிவிக்கப்பட்டும், எந்த நடவடிக்கையும் இல்லை. இப்போது முதலமைச்சர் அவர்கள் ஊதிய உயர்வு அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், இதுபோன்று மாநிலம் முழுவதும் இருக்கின்ற — விழுப்புரம் உள்ளிட்ட மாநிலம் முழுவதும் இருக்கின்ற — தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு, ஊதிய உயர்வினைக் கொடுப்பதோடு, அவர்களை பணி நிரந்தரமும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று நிர்வாகமானது இவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கலாம் என்று தயாராக இருந்தாலும், ஆணையர் அவர்கள் ஆட்சியருக்கு ஆணை வழங்கிட பிரேரணைகளை அனுப்பியும், அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் பரிசீலனையில் இருப்பதால், அவற்றைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 25–30 ஆண்டு காலம் பணிசெய்துள்ள இவர்கள், இரண்டொரு ஆண்டுகளில் பணி முடித்துப் போகும் இவர்கள், செல்லும்போது எந்தத் தொகையுமின்றி வெறுமனே செல்ல உள்ளார்கள். சாப்பிட்டுவிட்டு கை கழுவிவிட்டவர்களாக இருக்கிறார்கள். அடுத்த வேளை சோறு என்பது இவர்களுக்கு இல்லவே இல்லை என்று ஆகிவிட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், சத்துணவு ஊழியர்களுக்கு இறுதியில் 50 ஆயிரம் ரூபாய் வழங்குவதைப் போன்று, இவர்களுக்கும் ஓய்வு பெறும்போது அரசு, 50 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்திலுள்ள 611 பேரூராட்சிகளில் தமிழக அரசால் 14–6–2004 முதல் 562 பேரூராட்சிகள், சிறப்பு ஊராட்சிகள் என்றும், 30 ஆயிரம் மக்கட்தொகையைக் கொண்ட 49 பேரூராட்சிகள் 3 ஆம் நிலை பேரூராட்சிகள் என்றும் வகை செய்யப்பட்டன. இது என்ன நோக்கத்திற்கு பிரிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. மக்களுக்கு இதனால் என்ன பயன் என்றும் புரியவில்லை. இதனை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டுவந்து நிறுத்தி, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் பஞ்சாயத் ராஜ் காலி இடங்களுக்கு நியமனம் செய்யப்பட்ட பகுதிநேர எழுத்தர் பணியில் நியமனம் செய்யப்பட்ட இவர்கள், மக்கட்தொகை அடிப்படையில் ஊதியமும், பிறகு 2001 ஆம் ஆண்டு தொகுப்பு ஊதியமுமாக 800 ரூபாயும் பெற்றுவந்த இவர்கள் தினக் கூலிப் பணியாளர்களைவிட குறைந்த சம்பளம் பெற்று வந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர்களுக்கு இது போதாது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)**

ஊராட்சிகள் மூலம் வசூலிக்கப்படும் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி, விளம்பர வரி, கடை வரி மற்றும் ஊராட்சி வரிகள் அனைத்தும் வசூலிப்பது, இருசால் கட்டுதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் இவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தமிழகத்தில் உள்ள உள்ளாட்சிக்கு உட்பட்ட ஊராட்சிகள், சிறப்பு நிலை ஊராட்சிகள், 3 ஆம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள், Pump Operator–கள், பதிவுரு எழுத்தர்கள், ஊராட்சி உதவியாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், மின்னாளர்கள், அலுவலக உதவியாளர்கள், Fitter–கள், Pump house காவலர்கள், குழாய் திறப்பாளர்கள், தோட்டப் பராமரிப்பாளர்கள், குடிநீர், மீன் மார்க்கெட் காவலர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், N.M.R. உள்ளிட்ட அனைவருக்கும் Timescale அடிப்படையில் சம்பள உயர்வு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பணியிடங்களில் நிரப்பப்படாத காலி இடங்கள் இருப்பின் உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Norms Committee–படி மக்கள்தொகைக்கேற்ப புதிய நியமனங்களை உருவாக்க வேண்டுமென

கேட்டுக்கொள்கிறேன். துப்புரவுத் தொழிலில் காண்ட்ராக்ட் முறை என்ற பெயரில் தனியாருக்கு விடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறந்தவர் குடும்ப வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறைப் பணியாளர்களுக்கு Gratuity சட்டத்தை அமல்படுத்துவதோடு, Bonus, Pension போன்றவற்றை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஜாதிச் சான்று வழங்குவது, வீடு, நிலம் பட்டா வழங்குவது, Mines, கற்கள், மணல் எடுப்பது, Civil சம்பந்தப்பட்ட வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவது ஆகிய அதிகாரங்கள் அனைத்தையும் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்றும் மன்றங்களாக இவை மாறிவிடக்கூடாது என்பதை இந்த அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்பட்ட T.V. சரியாக இயங்குவதில்லை. அமைச்சர் அவர்கள் அவை இனி முறையாக இயங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், பழுது ஏற்பட்டிருப்பதை எல்லாம் அரசாங்கமே அவற்றை எடுத்து சரிப்படுத்தி கிராம மக்களுக்கு T.V. பார்க்கிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதா மாதம் சம்பளமும், உரிய காலத்தில் சீருடையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியான அரூரில் துப்புரவுத் தொழிலாளர்கள் அள்ளிக்கொண்டு போகின்ற குப்பைகளை வேறு ஒரு ரோட்டு ஓரத்திலே கொட்டுவதும், மீண்டும் அவற்றை அள்ளுவதுமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான இடம் இல்லாத காரணத்தால் அவர்கள் அவதியுறுகிறார்கள். எனவே, அரூருக்கு ஒரு குப்பை கொட்டுகிற இடத்தை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் சட்டத் திருத்தம் 85–ஐ தமிழ்நாடு அரசு Article 164–A பிரிவின்படி ஒவ்வொரு துறையிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட வேண்டுமென்று அரசு 27 மார்ச் 2002–ல் அறிக்கை வெளியிட்டுள்ளது.



இந்த முறையை கர்நாடகம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் அமல்படுத்துகின்றன. ஆனால், தமிழகம் இதில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அதை கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள 4 தலைமைப் பொறியாளர்களில் ஒருவர்கூட S.C./S.T. இல்லை. அதேபோன்று மேற்பார்வைப் பொறியாளர் 26 இடங்களில் 3 இடங்கள் தவிர, இன்னும் 2 இடங்கள் நிரப்பப்படவே இல்லை. நிர்வாகப் பொறியாளர் 144 இடங்களில் 8 இடங்களைத் தவிர, இன்னும் 19 இடங்கள் நிரப்பப்படவே இல்லை. இவர்களுக்குப் பதவி உயர்வும் இல்லை. எனவே, இப்படிப்பட்ட துறைகளின்மீது அவசியம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரசுத் துறைகள், வாரியங்கள் மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துத் துறைகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று அரசாணை எண் 19, 28–11–2001–ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை எந்தத் துறையிலும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசாணை எண் 9–ன்படி "A" Group பிரிவில் பணியாற்றும் நிர்வாகப் பொறியாளர்கள் பதவிக்கு நேரடியாக நியமனம் செய்யப்படலாம் என்று வாரிய சட்ட விதி TWAD Board Service Regulation இருந்தும் இதுவரை நடவடிக்கை இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். அந்த அரசாணை பத்தி 6–ல் துறைகளில் காலியாக உள்ள S.C./S.T. பணியிடங்களை அதாவது, பின்னடைவுப் பணிகளைக் கணக்கிட்டு அந்தந்தப் பிரிவில் பணியாற்றும் கீழ்நிலைப் பணியாளர்களைக்கொண்டு பதவி உயர்வு செய்யலாம் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்தும், துறை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே, அரசாணையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆதார சுருதியாக விளங்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஒரே நேரத்தில் நிறைவேற்றி, அந்த மக்கள் புளோரைடு இல்லாத தண்ணீரைக் குடிக்கிறார்கள் என்ற நிலையை இந்த அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாப்பாபட்டி, கீரிப்பட்டிக்கு தலா மூன்று பேர்கள் இப்போது தேர்தலில் போட்டியிட பதிவு செய்திருக்கிறார்கள். நாட்டாமங்கலம், கொட்டகாச்சியேந்தல் போன்ற பகுதிகளுக்கு தேர்தல் நடத்த வேண்டும். அங்கு தேர்தல் நடத்த முடியவில்லை என்றால்

பக்கத்தில் இருக்கிற பஞ்சாயத்துகளோடாவது இணைத்து அந்தத் தேர்தல் நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அங்குத்தி சுனையில் நீர்த்தேக்கம் அமைக்க இந்த அரசு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, 60 இலட்சம் ரூபாயில் நீர்த்தேக்கம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தும்கூட, இதுவரை நிறைவேற்றவே இல்லை. இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் 500 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெறுவதும், பல ஊராட்சிகளுக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் உதவும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உலகமயமாக்கலின் நோக்கமே, தனியார் துறையை ஊக்குவிப்பதும், பொதுத் துறையையும், அரசு நிர்வாகத்தையும் செயலிழக்க வைப்பதுமாகும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், துணைத் தலைவரவர்களே. சுய உதவிக் குழுக்கள் மூலம் நிறைவேற்ற உள்ள பல பணிகளில், உதாரணமாக உற்பத்திப் பொருள்களை விற்பனைக்கு சந்தைப்படுத்துதல் போன்றவற்றையெல்லாம் பார்க்கும்போது, உலகமயமாக்கலின் வழிகாட்டுதல் இதில் அடங்கி உள்ளதோ என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது.

அடுத்து, சுயஉதவிக் குழுக்கள் சுயமாக தொழில் தொடங்குவது, வங்கிகளில் கடன் பெறுவது, கடனைத் திருப்பிச் செலுத்துவது, ஆணுக்கு நிகராக பெண்கள் ஊதியம் ஈட்டுவது என்பவையெல்லாம் வரவேற்க வேண்டிய அம்சங்களாகும். இவர்கள் பதிவுபெற்ற சங்கமாக செயல்படுவார்கள் என்று குறிப்பேட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இந்த அமைப்பு தொழிற்சங்க விதிப்படி செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள காடுகள், மலைப் பகுதிகளில் நிறைய மூலிகைகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் மூலிகைப் பண்ணைகளை அமைக்க வேண்டும் என்பதோடு, தீர்த்தமலை காட்டில் ஏராளமான மூலிகைகள் நிறைந்திருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

10 ஆண்டுகளாக குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு, சிறப்புப் பள்ளியில் சேர்த்து, தமிழ்நாடு பாடத் திட்டத்தின்கீழ் பாடம் கற்பித்து வரும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள்



மிகக் குறைந்த ஊதியம், அதாவது 1,500 ரூபாய் மட்டுமே பெற்று வருகின்றார்கள். இவர்களது பணி, நிரந்தரம் இல்லாமல் இருக்கிறது. பணி முடிந்தவுடன் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கும் இவர்களுக்கு, சத்துணவு மையங்களிலோ, வேறு துறைகளில் காலியாக உள்ள இடங்களிலோ இவர்களை நிரப்பி, அவர்களின் வாழ்க்கையை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று, மாநிலத்தின் பல்வேறு இடங்களில், குறிப்பாக சேலம், திருச்சி, கோவை, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய இடங்களில் சாலைப் பணியாளர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை மீண்டும் இந்த அரசு பரிசீலித்து பணியைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

அரசாணை எண் 125–ன்படி, முன்பு இருந்த பேரூராட்சிகள், சிற்றூராட்சிகள் ஆகியவற்றில் நிரந்தர காலி இடங்களில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களில், 133 பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்களில் பதிவுரு எழுத்தர்களாக 26 பேரும், அலுவலக உதவியாளர்களாக 47 பேரும், துப்புரவுப் பணியாளர்களாக 33 பேரும், அலுவலக இரவுக் காவலர்களாக 27 பேரும் பணியாற்றுகிறார்கள். இவர்கள் பணியை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த சித்தேரி மலைப் பகுதியைச் சேர்ந்த நரிப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு வரை மட்டும் இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென்று இரண்டு இலட்சம் ரூபாயை அரசுக்குச் செலுத்தியிருந்தார்கள். அதற்கு கருத்துருவும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பள்ளியை தரம் உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது சொந்த ஊரான கொடுகாரன்பட்டி கிராமத்தில், 8 ஆம் வகுப்பு வரை இருக்கிற பள்ளியின் தரத்தை உயர்த்தி 10 ஆம் வகுப்பு வரை உள்ளதாக, அந்தப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தளி ஒன்றியத்தைச் சேர்ந்த...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** உரையை முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு கோரிக்கைகள், எனது தொகுதி கோரிக்கைகள் மட்டும். தளி

ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டி ஒன்றியம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு இந்தத் தொகுதியைப் பற்றி மிக நன்றாகத் தெரியும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் நீங்களே அனைத்துத் திட்டங்களையும் கொடுக்கிறீர்கள். எனவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 17–4–2001 அன்று அரசாணை எண் 59–ஐ வெளியிட்டது. அரசின் ஆணைப்படி, ஊட்டி பழங்குடி ஆராய்ச்சி மையம், குரும்பர், குரும்பா, லம்பாடி, நரிக்குறவர், ஈரோடு–மலையாளி, காணிக்காரன், குறவர்கள் உள்ளிட்ட 23 பிரிவினரைச் சேர்த்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். ராஜா (குறுக்கீடு) உரையை முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க தமிழக அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிங்காரப்பேட்டையை அடுத்துள்ள அங்குத்தி சுனையில், எனது தொகுதியில் இருக்கிற அந்த ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கெடப்பாரை ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதோடு, சிங்காரப்பேட்டை பெரிய ஏரியை தூர் வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

*முற்பகல் 11–30*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி, நகராட்சி மானியக் கோரிக்கைகளிலே பாரதிய ஜனதா கட்சியினுடைய கருத்துகளை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகள் ஜனநாயகத்தின் வேர்கள். மக்களுக்கு நெருக்கமான, நேரடியான நிர்வாகத்தைத் தருகின்ற அமைப்புகள். அதனால்தான் அதற்கு Local Self-Government என்றும் பெயர். தன்னாட்சி பெற்ற அமைப்புகள். அது ஜனநாயகத் தலைமையை உருவாக்குகின்ற நாற்றங்காலாக—ஏனென்றால் மூதறிஞர் இராஜாஜி போன்றவர்கள்



நகர்மன்றத் தலைவராக இருந்து Governor-General வரை வளர்வதற்கு—உள்ளாட்சி அமைப்புகள் அனுபவத்தைத் தருகின்ற அமைப்புகள். ஆகவே, அதற்கான நிதி ஆதாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எப்படி மத்தியிலிருந்து மாநிலத்திற்கு நிதி ஆதாரம் அதிகரிக்கப்பட வேண்டுமென்பது நியாயமான கோரிக்கையோ, அதுபோல உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நிதி ஆதாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, இரண்டாவது மாநில நிதி ஆணையத்தில் ஊராட்சிகளுக்கு 2005–2006–ல் 9 சதவீதம் நிதிப் பகிர்வும், 2006–2007–ல் 10 சதவீதமும் இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை அவ்வாறு பகிர்ந்து அளிக்கப்படவில்லை. 8 சதவீதமாகவே அது இருக்கிறது. அதை 12 சதவீதமாக அதிகரிக்க வேண்டுமென நான் அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ஆட்சி முறைதான் எல்லா விதத்திலும் நம் நிதி, நீதி, நிர்வாகம் அனைத்தையும் செய்து வந்தது. இப்போது எல்லாமே Collector–இடம் concentrated–ஆக இருக்கிறது. ஆக, இந்த Local Self-Government–க்கு இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தம் 73, 74–ல் சொல்லியுள்ளபடி, Schedule 11-ல் குறிப்பிடப்பட்டிருக்கின்ற 29 துறைகளுக்கான அதிகாரங்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மக்களுடைய பங்கேற்பு உள்ளாட்சிகளுடைய நிர்வாகத்திலே அதிகமாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் கிராம சபைக் கூட்டங்கள் சில தேதிகளிலே கட்டாயமாக நடத்த வேண்டும் என்று அரசு குறிப்புக் கொடுத்திருக்கிறது. ஆனால், இந்த கிராம சபைக் கூட்டங்களிலே மக்களுடைய பங்களிப்பு குறைவாக இருக்கிறது. அதை ஊக்கப்படுத்துவதற்கு மக்களிடையே பிரச்சாரம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், பல்வேறு மக்கள் நலப் பணிகள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராம சபையின் மூலமாக நடத்தப்படுகின்றன. எனவே, இந்த B.P.L. list தயாரிப்பதை, கிராம சபையின் முன்பாக வைத்து அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், இதிலே பல்வேறுவிதமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. வெளிநாட்டிலே இருக்கக்கூடியவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே இருப்பவர்கள், வசதி பெற்றவர்கள்கூட அந்த list-லே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே, கிராம சபையிலே இதற்கு ஒப்புதல் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல நெடுஞ்சாலைத் துறையிலோ அல்லது ஒன்றியங்களிலோ இல்லாமல் வகைப்படுத்தப்படாத 12,000 கிலோ மீட்டர் சாலைகள் இருக்கின்றன. அவற்றை ஒன்றியங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று ஒன்றியத்திடம் ஒப்படைத்திருக்கிறது அரசு. ஆனால், அதற்கான அதிகப்படியான நிதி இல்லை என்று சொன்னால் அந்தச் சாலைகளை ஒன்றியம் எப்படிச் செப்பனிட முடியும்? எனவே, இதற்கு அதிகப்படியான நிதி, ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதை நான் அரசின் முன்பாக வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, குடிநீர் ஊரணிகள் புனரமைத்தலைப் பொறுத்தவரை இங்கே மிகப் பெரிய குறைபாடாக இருப்பது, பல ஊரணிகளிலே தூர்வாரப்படாமலும், ஆக்கிரமிப்புகளும் உள்ளன. இப்போது காரைக்குடியை எடுத்துக்கொண்டால் அம்மனுக்குத் தெப்பம் விடவேண்டுமென்றால்கூட நாம் லாரியில் தண்ணீர் கொண்டுவந்து விட்டு தெப்பம் விடவேண்டியிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. மெயினான வரத்துக் கால்வாய்கள் பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே ஊரணிகளுக்கோ, குளங்களுக்கோ தண்ணீர் வருவதில்லை. அதிலேயும் கழிவுநீரைக் கொண்டுபோய் ஊரணியில் விடுகிறார்கள். இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், காரைக்குடியிலே, கொப்புடையம்மன் கோயில் குளத்தை 7,20,000 ரூபாய் செலவில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 2001–லே தூர் வாரினோம். 50 வருடங்களாகத் தூர் வாராதது. அதிலே நகராட்சி சாக்கடையைக் கொண்டுபோய் விட்டது. நான் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தேன். எனக்கு உத்தரவாதம் கொடுத்தார்கள். சுத்தப்படுத்தினார்கள். திரும்பவும் கழிவுநீரை விட்டிருக்கிறார்கள். சாக்கடையாக மாறி இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி பொறுப்பற்ற நகராட்சி நிர்வாகத்தினால் அதிலேயும் குறிப்பாக காரைக்குடியிலே பல்வேறு பிரச்சினைகள் இதன் மூலமாக உருவாகி இருக்கின்றன.

அதேபோல தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக சிறப்புத் தேவைகள் பணிகளுக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. இதிலே தளி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அங்கே அந்த மாவட்டத்திலே நக்சலைட் problem–மும் இருக்கின்ற காரணத்தினாலே அதற்கு அதிகமாக 10 கோடி ரூபாய் அரசாங்கம் நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11–35

நகராட்சிச் சொத்துக்கள் தனியாருக்குத் தாரைவார்க்கப்படுவது அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இதில் குறிப்பாக ஒரு deep routed corruption–ஐப் பற்றி நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மதுரையிலே A.S.O.-வாக இருந்தவர் retire ஆனது 1996–லே. ஆனால், அவர், அன்றைக்கு 1996–லே அரசாங்க நிலங்கள் அனைத்திற்குமே பட்டா கொடுத்தார் என்று சொல்லி – ஏனென்றால், தனியார் நிலங்களுக்குப் பட்டா கொடுத்திருந்தால் அவர் உடனே வழக்குக்குப் போய்விடுவார்– நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்கு 1996–லே இருந்த A.S.O. பட்டா கொடுத்ததற்காக இன்றைக்கு 2003–2004–லே அது புற்றீசல் போல கிளம்பிக் கொண்டேயிருக்கின்றது. பார்த்தால், திடீரென்று அரசாங்க இடங்களெல்லாம் தனியாருக்குப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்று இன்றைக்கு இரசீது போடுகின்றார்கள். 8 வருடங்கள் கழித்து இன்றைக்கு எப்படி இரசீது போட முடியும்? எனவே இதனுடைய S.R. No.-ஐ verify செய்து, அந்த குறிப்பிட்ட A.S.O.--பெயர், தனி நபர் பெயரைச் சொல்ல வேண்டுமென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தனியாகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். 8 ஆண்டுகள், 9 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த A.S.O.--பெயராலே பட்டாக்கள் வருகின்றன. அதற்கு இன்றைக்கு வரி இரசீது போடச் சொல்லி நிர்ப்பந்திக்கின்றார்கள். தனியாருக்கு 13 இடங்களிலே இந்த மாதிரியாக பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற பட்டியலை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் copies வைத்து நான் அனுப்பியிருக்கின்றேன்.

அதேபோல காரைக்குடியில் ஒரு பள்ளிக்கூட இடத்திற்கு பரிவர்த்தனைக்காக அதனுடைய value–வைக்கூட 1 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக இடம் கொடுப்பதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு நேற்றைய முன்தினம் அதற்கான G.O.-வை cancel செய்திருக்கின்றார்கள். ஆகவே, அரசுக்கு இதுதொடர்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்றால், கொஞ்சம்கூட நியாயம் இல்லாத பரிவர்த்தனை அது. 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இடத்திற்கு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கு அந்த இடத்தை பரிவர்த்தனை செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அது நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல காரைக்குடி சூடாமணிபுரம் வீடு கட்டும் சங்கத்தினுடைய ஊழல். N.G.O. colony வீடு கட்டும் சங்கத்தினுடைய ஊழல் பற்றி ஏற்கெனவே என்னுடைய உண்ணாவிரதப் போராட்டத்தின்போது, ஒரு வாரத்தில் இது தீர்க்கப்படும் என்று மாவட்ட ஆட்சியரால் உறுதி அளிக்கப்பட்டது. அதில் குறிப்பாக, சூடாமணிபுரத்தில் R3, R4, R5, R6, R7 இது 2000–லே அப்பொழுது Municipal Secretary ஆக இருந்த Mrs. Malathy. I.A.S. அவர்களுடைய ஆணையின்படி நகராட்சிக்கு Gift Deed மூலமாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஆனால், அங்கிருந்த ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் காரைக்குடி Municipality எடுக்கவில்லை. அதுமாத்திரமல்ல, ஒரு வருந்தத்தக்க விஷயம். காரைக்குடி Municipal Chairman ஆட்களை கூப்பிட்டுக்கொண்டு வந்து கமிஷனர் வீட்டுக்குப் போய், உன்னை சுடுகாட்டுக்கு அனுப்பிவிடுவேன் என்று சொல்லி, நிர்ப்பந்தப்படுத்தி கையெழுத்து வாங்கக்கூடிய அளவிற்கு ஒரு Municipal Chairman போவார் என்று சொன்னால், ஒரு அராஜகமான நிருவாகம். எனவே, காரைக்குடி Municipality-ஐ தயவுசெய்து suspend செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். இதுமாதிரியாக நான் எங்கும் கேள்விப்பட்டதில்லை. மக்களின் நியாயமான, எந்தவிதமான கோரிக்கையையும் attend பண்ணுவதில்லை. ஆனால், எல்லா Government land-ஐயும் தனியாருக்கு எழுதிக் கொடுப்பதற்கு அந்த நகராட்சிக்கு என்ன அவ்வளவு அக்கறை என்று எனக்குத் தெரியவில்லை.

அதேபோல செம்பையூற்றைப் பொறுத்தவரை, காரைக்குடியில் இன்றைக்கு எந்த நகராட்சியில் problem இருக்குமென்று சொன்னால்— ஒரு காலத்தில் என்னுடைய தகப்பனார் 1955–1956–லே அங்கு பேராசிரியராகப் பொறுப்பேற்றபோது தண்ணீரில்லாத காடு என்றே காரைக்குடிக்கு அன்றைக்குப் பெயர். யாரையாவது தண்ணீரில்லாத காட்டுக்கு அனுப்புவோம் என்றால் காரைக்குடிக்கு தண்ணீரில்லாத காட்டுக்கு அனுப்புவோம் என்று சொல்வார்கள். ஆனால், செம்பையூற்று அங்கு கண்டுபிடிக்கப்பட்டு அது வந்ததிலிருந்து, இன்றைக்கு தண்ணீர் problem இல்லாத நகராட்சி உண்டு என்றால், அது காரைக்குடி நகராட்சி. ஆனால், அந்த செம்பையூற்றுப் பகுதியிலிருந்து ஒரு நாளைக்கு 15 இலட்சம், 16 இலட்சம் லிட்டர் தண்ணீர் தனியார் Industry-க்குக் கொண்டு



போகின்றார்கள். இதை உடனடியாக அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** இன்னும் இரண்டு, மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன. நான் சீக்கிரம் பேசி முடித்துவிடுகின்றேன். அதேபோல இடப் பட்டாக்களைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் இருக்கின்றவர்களுக்கு 2 இலட்சம் பேருக்கு பட்டாக்கள் வழங்குவதற்கு ஏற்கெனவே கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கின்றது. நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், நகராட்சியிலே அரசாங்க இடங்களிலே மக்கள் பல ஆண்டுகளாக, 50, 60 ஆண்டுகளாக குடியிருக்கின்றார்கள். சாலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தந்தி இணைப்பு கொடுக்கப்பட்டு, telephone connection கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதுமாதிரியாக ஏற்கெனவே 50, 60 ஆண்டுகளாக குடியிருக்கக்கூடிய இடத்தை regularise பண்ண வேண்டும். அதற்கு அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல மயிலாடுதுறை நகராட்சியிலே பாதாள சாக்கடைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக அங்கு சாலைகள் சேதமடைந்திருக்கின்றன. அவற்றைச் செப்பனிடுவதற்கு நகராட்சியிடம் நிதிவசதி இல்லை. எனவே, அங்கு பாதாள சாக்கடைப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற காரணத்தால், பாதிக்கப்பட்டிருக்கின்ற சாலைகளைச் செப்பனிடுவதற்கு அரசு விசேஷ நிதி வழங்க வேண்டும்.

தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ஓராண்டு காலத்திற்கு முன்பாகவே அறிவித்தார்கள். ஆனால், அந்தப் பேருந்து நிலையம் அமைக்கின்ற பணி இன்னும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை. அதைப்போல ஓசூர், தளி ஆகிய நகராட்சிகளில் வீட்டு வரி அதிகமாக வசூலிக்கப்படுகின்றது. எனவே, இதுபற்றியும் அரசாங்கம் review செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகின்றேன், வணக்கம்.

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல காரைக்குடி பகுதியிலே நகராட்சி இடத்தை மற்றவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியிலே ஒரு சில இடங்களில் அவர்கள் வாடகைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். காலியிடம் தீர்மானம் போட்டு கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், எந்த ஒரு நகராட்சி இடத்தையும் பட்டா போட்டுக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணங்கள், நீர் நிலை ஆதாரத்தைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே வரத்துக் கால்வாய்கள் எல்லாம் சீர் செய்யப்பட்டு, நீர் நிலையை உயர்த்துவதற்குண்டான வழிவகை செய்யப்படும். அதில் சாக்கடை நீர் கலந்து விடுகிறது என்று சொன்னார். அதற்கு மாற்று வழி ஏற்பாடு செய்து, அந்தப் பகுதியிலே இன்றையதினம் அது திருப்பி விடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியே பதிலுரையைத் தொடங்குங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, மக்களை நேசிக்கும் மகத்தான தலைமை நீங்கள்! உங்கள் எதிர் நிற்கும் கூட்டமதோ கட்சிகளின் எண்ணிக்கையால் களிப்படைந்து நிற்கிறார்கள். மக்கள் சக்திமுன், மனத் திமிர் கொண்டோரெல்லாம் மண்டியிட்டு இறுதியிலே உயிர்ப் பிச்சை கேட்பதுதான் உலகம் கண்ட உண்மையாகும்! மக்கள் சக்தி பெற்ற அம்மா! உங்கள் முன்னால் கட்சிகளை வைத்து, காட்சிகளை அரங்கேற்ற நினைப்பவர்கள் இறுதியிலே இலவு காத்த கிளியைப் போல ஏமாற்றமடையப் போவதுதான் எதிர்காலம் காணப் போகும் உண்மையாகும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றாந்தாய் என்று மாசு மொழி பேசும் சிறுமதியாளரையும் நேசிக்க மட்டுமே நெஞ்சாரத் தெரிந்த பாசத்தைப் பொழிந்திடும் பாராளும் தலைமையே! தமிழ் பாராளும் தலைமையே! எங்கள் தாயே! மக்கள்



தந்த வாய்ப்பை, தம் மக்களுக்குத் தந்த வாய்ப்பாய் சுரண்டிக் கொழுத்து, கூடவே சுற்றத்தையும் வாழ வைக்கும் தலைவர்கள் வாழும் நாட்டில், சொந்த நலனை சுத்தமாய்க் களைந்தெறிந்து தம் மக்களாய் தமிழ் மக்களைக் காத்திட தினம் உழைக்கும் தியாகத்தின் திருவுருவே! தீந்தமிழின் தனிப் புகழே! நாடு நாடு என நாடு காக்க நாழிகையும் போக்கிடாது, நானிலமே வாழ்த்திடவே நாளெல்லாம் உழைத்திடும் நாடாளும் நல்லவரே!

நற்றமிழ்ப் பெருமை காக்க நான்காம் தமிழ் கண்டவரே! ஏழை மக்கள் வறுமையினால் கோழை மக்கள் ஆகிடாது வீர மக்கள் வழியினர்தான் தம் தமிழ் மக்கள் என்றே அள்ள அள்ளக் குறைந்திடாத அட்சய பாத்திரமாய் தெள்ளு தமிழ் நாடாளும் தெற்குத் திசை சீமை கண்ட பன் மொழியின் இருப்பிடமே! பைந்தமிழின் இருப்பிடமே!

தமிழ்க் காப்பியங்கள் பல உண்டு. அவற்றிலெல்லாம் கண் பதித்துத் தேடினாலும் காணக் கிடைக்காத தலைமையாக வருங்கால வல்லுநர்கள் வரையப் போகும் காப்பியத்தின் தலையாய தலைமையாய், திகழப் போகும் சிறப்புமிக்க எங்கள் தலைமையே! தாயே!

வாழ்வதற்கு வசதி கேட்டு சிலரை ஆள்வதற்கு அனுமதித்தால், மக்கள் சாவதற்கு வசதியாக நிதிநிலையை மோசமாக்கி, நிம்மதியைக் குலைத்திட்டார்கள். அம்மா ஆள்வதற்கு வந்த பின்னரே மக்கள் வாழ்வதற்கே வசதியாக தம் சுக வாழ்வுதனைத் துறந்து, நோய் பிடித்த நிதிநிலையைச் சீராக்கி வான்புகழ தமிழகத்தை வாழ வைக்க நாளும் உழைக்கின்றார்கள்! நாடு போற்ற அரசாளும் நம் அம்மா! இரும்பென்றாலும் கரும்பென்றாலும் இணை கூற இவ்வுலகில் இருக்கின்ற ஒரே தலைமை நீங்கள் தானம்மா!

இத்தனை பெருமைமிக்க எங்கள் தாயே! உங்கள் பொற்பாதம் வணங்கி எந்தன் உரையைத் துவக்குகின்றேன்.

இந்தியாவின் உயிர் கிராமங்களில்தான் வாழ்கின்றது என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். அவரின் வழியில் அடியொற்றி ஆட்சி நடத்திடும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் கிராமங்கள் மறுமலர்ச்சி பெற்று மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் உருவாக்கிட வழிவகுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையில், கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தப்

பணிகளினுடைய எண்ணிக்கை 11 இலட்சத்து 83 ஆயிரத்து 690 ஆகும். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே மக்களின் நல்வாழ்விற்கு நாள்தோறும் 20 மணி நேரம் விழித்திருந்து, ஆக்கப் பணிகள் பலவற்றை நிறைவேற்றிட உழைத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களின் நான்காண்டு கால சீர்மிகு ஆட்சியிலே 19 இலட்சத்து, 29 ஆயிரத்து, 672 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996–1997 முதல் 2000–2001 வரை முந்தைய தி.மு.க. ஆட்சியிலே ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூபாய் 5,015.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் 2001–2002 முதல் 2005–2006–க்கான ஐந்தாண்டுகளிலே ரூபாய் 9,279.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட ரூபாய் 4,263.95 கோடி அதிகமாகும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சியிலே கிராமப்புற மக்களின் மேம்பாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மேற்கொள்ளப்படும் முனைப்பான செயல்பாட்டிற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். ஊரக வளர்ச்சிக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகின்ற சீரியத் திட்டங்கள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக இருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

முற்பகல் 11–45

மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட தூய்மை கிராம இயக்கம் தமிழ்நாட்டில் ஊரக சுகாதாரம் பற்றிய ஒரு புரட்சியை ஏற்படுத்தி, தேசிய அளவில் மாநிலத்திற்கு பெரும் புகழ் சேர்த்துள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு தூய்மையான கிராம விருது வழங்கும் திட்டத்தின்கீழ், 15 கிராம ஊராட்சிகளுக்கு, தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூபாய் 75 இலட்சம் வழங்கப்பட்டது. இதற்கு அடுத்த கட்டமாக இன்றையதினம் மத்தியிலே ஆளுகின்ற அரசால், 'நிர்மல் கிராம புரஸ்கார்' விருதானது அறிவிக்கப்பட்டது. அந்த விருதானது அறிவிக்கப்பட்ட பிறகு, நம்முடைய தமிழகமானது அதிலே கலந்துகொண்டிருக்கின்ற நிகழ்விலே 12 கிராம ஊராட்சிகளும், 10 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு ஊராட்சி ஒன்றியமும், அதில் விருதுகளைப் பெற்றன. அப்படி



அவர்கள் 39 கிராம ஊராட்சிகளுக்கு விருது வழங்குகின்ற வகையிலே மூன்றில் ஒரு பங்கு விருதைப்பெற்று நம்முடைய தமிழகமானது இன்றையதினம் தேசிய அளவிலே முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. ஒரே ஒரு ஊராட்சி ஒன்றியம் நம்முடைய தமிழகத்திலே இன்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் அதிலே விருது பெற்றிருக்கிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விருதை மத்திய அரசானது வழங்குவதற்கு முன்பாகவே மாண்புமிகு அம்மாவுடைய எண்ணத்தில் தோன்றிய தூய்மையான கிராம இயக்கம் என்ற விருதை அதற்கு முன்பாகவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தோற்றுவித்து நம்முடைய தமிழகத்திலே வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினால் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்கள் அடைந்துள்ள சாதனைகளும், வெற்றிகளும் வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பார்வையாளர்களை ஈர்த்துள்ளது. ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களிலிருந்தும், இலங்கை மற்றும் வங்காளதேசம் போன்ற அயல்நாடுகளிலிருந்தும் பார்வையாளர்கள் ஊரக சுகாதாரம் குறித்து தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ள சிறப்பு முயற்சிகளைப் பற்றி பார்வையிட்டு, தகவலறிந்திட தங்களது குழுக்களை நம்முடைய தமிழகத்திற்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

2003–2004 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு ரூபாய் 93.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதன் காரணமாக 2004–2005 ஆம் ஆண்டிலே இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு 29 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டு, ரூபாய் 120.40 கோடியாக இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் அவசரகால நிகழ்வுகளுக்காக 2004–2005 ஆம் ஆண்டு ரூபாய் 543.750 இலட்சத்தினை மைய அரசு கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல் இத்திட்டத்தின் சேமிப்பிலிருந்து மைய அரசின் கூடுதல் உதவித் தொகையாக 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 351.01 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையைப் பார்க்கின்றபோது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசானது தமிழகத்திலேயே மத்தியிலேயிருந்து வரக்கூடிய நிதியை முழுமையாகப்

பயன்படுத்தி, அந்த நிதியினைப் பெறுவதற்குண்டான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டதன் காரணமாக கூடுதல் நிதியைப் பெறுகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்துகொள்வார்கள் என்பதை நினைவுகூர்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 15–8–2004 அன்று அனைத்து 12,618 ஊராட்சிகளிலும் செயல்படுத்த 'நமது கிராமம்' என்ற புதிய திட்டத்தை ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலே அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும், தலா ரூபாய் 1.10 இலட்சம் வீதம் அனைத்து 12,618 ஊராட்சிகளுக்கும் மொத்தம் ரூபாய் 140 கோடியை அம்மாவுடைய அரசு நேரடியாக வழங்கியுள்ளது. மேலும், ஊராட்சிகளின் செயலாக்கத்தின் அடிப்படையில் ஊராட்சிகளுக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபாய் 5.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், இத்திட்டம் தொடர்ந்து ஆண்டுதோறும் செயல்படுத்தப்படும்.

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ், அனைத்துப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரகச் சாலைகள் ரூபாய் 552 கோடி செலவிலே 4,197 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்ட நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் சாலையின் தரம் அடிப்படையிலே இம்மாநில அரசின் செயல்பாடானது மத்திய அரசால் பாராட்டப்பட்டு முந்தைய ஆண்டின் ஒதுக்கீடான ரூபாய் 80 கோடிக்கு மேல் இந்த ஆண்டு ரூபாய் 118 கோடி, அதாவது முதலில் ஒதுக்கியதைவிட 47 சதவிகிதம் உயர்த்தப்பட்டு, 2004–2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடனுதவி பெற்ற சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதிலே அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தருணத்திலே நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது, தேசிய அளவிலே மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திருப்பிச் செலுத்துகின்ற கடன் 78.17 சதவிகிதமாக வசூலிக்கப்பட்டிருந்த நிலையிலே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை அது 97.42 சதவிகிதமாக உள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



(மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முக்கியத்துவத்தைக் கொடுத்து, அவர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான பயிற்சிகளையும் அளித்து இன்றைய நிலையிலே அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்துகின்ற வகையிலே, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குகின்ற வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதிலே தேசிய அளவில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாகத் திகழ்கின்றது என்று மத்திய அரசு அறிவித்துள்ளதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். காற்றாலை மின் உற்பத்தியிலே தமிழ்நாடு, இந்தியாவிலேயே தொடர்ந்து முதலிடம் வகித்து சாதனை படைத்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள ஒடந்துறை ஊராட்சி, தாவர எரிவாயு கலனை நிறுவி, குடிநீர் விநியோகத்திற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற வகையில், இந்த ஊராட்சி இந்தியாவிலேயே முதன்மை ஊராட்சியாகத் திகழ்கின்ற வாய்ப்பைப் பெறுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழி ஊராட்சி மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் சூரிய சக்தி சுடுகாற்று அமைப்பினை நிறுவி, அதன் மூலம் மீன்களை சுகாதாரமான முறையிலே பதப்படுத்தி, உலர் மீன்களாக மாற்றி, நல்ல விலைக்கு விற்று வருகின்றார்கள். இதன்மூலம் அவர்கள் வாழ்வு மேம்பாடு அடைந்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக உள்ளாட்சி அமைப்புகளுடன், சுயஉதவிக் குழுக்களும் இணைந்து பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைப்புடன் செயல்படுத்துவது, மற்ற மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்னோடி நடவடிக்கையாகும் என்று புதுடெல்லியிலே நடைபெற்ற தேசிய அளவிலான ஊரக வளர்ச்சி முகமை கருத்தரங்கிலே பாராட்டப்பட்டிருப்பது பெருமைக்குரிய தகவலாகும். மாநில நிதிக் குழு மானியம் முன்பு காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் இந்த நிதியினை வழங்க வகை செய்துள்ளார்கள். 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம்

ஆண்டு வரையிலான காலத்திற்கு ரூபாய் 3,780 கோடியே 80 இலட்சம் ரூபாயை உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மானியமாக வழங்க 2-வது மாநில நிதிக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால், அம்மாவின் அரசு மொத்தம் ரூபாய் 4,388 கோடியே 90 இலட்சத்தை விடுவித்துள்ளது. இது, 2-வது மாநில நிதிக் குழு பரிந்துரைத்த தொகையினைவிட, அம்மா அவர்களுடைய அரசு விடுவித்த தொகை ரூபாய் 608 கோடியே 10 இலட்சம் கூடுதலாகும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து மற்றும் ஒன்றியங்களிலிருந்து பெற்ற கடன் தொகையான ரூபாய் 150.36 கோடி மற்றும் எஞ்சிய நிலுவைத் தொகை ரூபாய் 198.29 கோடிக்கு, அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்தப்பட்ட வகையிலே ஊராட்சிகளின் மின் கட்டணம் தொடர்பான சுமையினை மாண்புமிகு அம்மா அவர்கள் குறைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 13-10-2004 அன்று கிராம ஊராட்சிகளில் கணினி மயமாக்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள 1,113 கிராம ஊராட்சிகளுக்கும், 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 29 உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கும் ரூபாய் 10.37 கோடி செலவிலே கணினி வழங்கப்பட்டது. கிராம அளவில் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலே மின்னணு நிர்வாகம் நடைபெற முன் முயற்சிகளை மேற்கொண்டு, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளை அங்கீகரித்து அவற்றின் நிர்வாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்த ரூபாய் 108 இலட்சத்தை, 4 மடங்காக உயர்த்தி, இந்த ஆண்டு ரூபாய் 443 இலட்சமாக வழங்கியுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2004-2005 ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையிலே ஒரு கொள்கையாக அறிவிக்கப்பட்ட "மாதிரி கிராம பயிற்சி மையம்" 13-10-2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, தேனி மாவட்டம், அரண்மனைப்புதூர் கிராம ஊராட்சித் தலைவருடன்



வீடியோ கான்பரன்சிங் நிகழ்ச்சியிலே பங்குபெற்றதன் மூலம் செயலாக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே உள்ள தகவல் பரிமாற்றம் மற்றும் சிறந்த செயல்பாடுகள் குறித்த பகிர்வுகளுக்கு உதவிடும் வகையிலே ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மின்னணு தொடர்பானது தேசிய அளவில், சிறந்த முன்னோடி நடவடிக்கையாக உள்ளது என்று தலைமை இயக்குநர், தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத் அவர்களால் பாராட்டப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதற்கொண்டு, பாராளுமன்ற நிதிகளைச் செயல்படுத்துவதாகட்டும், சட்டமன்ற உறுப்பினர் நிதியைச் செயல்படுத்துவதாகட்டும், எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும் ஆக்கபூர்வமாக செயல்படுத்துகின்ற வகையிலே 8-9-2004 அன்று தெரிவிக்கப்பட்ட அறிக்கையின் பேரிலே பாராளுமன்ற உறுப்பினர் நிதியைப் பயன்படுத்துவதில் தமிழகம் மிகவும் சரியான முறையிலே பயன்படுத்தவில்லையென்று இங்கே ஆஸ்கர் பெர்னான்டஸ் மூலமாக டி.ஆர். பாலு அவர்கள் சென்னையிலே ஒரு அறிக்கையைவிடச் செய்தார். ஆனால், அதில் உண்மை நிலவரம் என்ன என்பதைக் கண்டறிகின்றபோது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தமிழகமானது சிறந்த முறையிலே அதில் பணியாற்றுகிறது என்பதை விளக்குகின்ற வகையிலே நம்முடைய செயல்பாடானது 93.76 சதவீதம் பாராளுமன்ற உறுப்பினர் நிதியைப் பயன்படுத்தி, இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஆய்விற்குப் பிறகு அறிந்துகொண்ட ஆஸ்கர் பெர்னான்டஸ் அவர்கள் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டுச் சென்றார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

நகராட்சி நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு மக்களுக்குப் பயன்தரக்கூடிய ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வகையிலே தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கிய ஒப்பற்ற திட்டமாகிய 15 அம்சத் திட்டத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தில் திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்றுவது குறித்தும், மக்கும் மற்றும் மக்கா கழிவுகளை மறு சுழற்சிக்குப் பயன்படுத்துவது குறித்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நகராட்சிப் பகுதிகளிலே திடக் கழிவு மேலாண்மை திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்த தேவையான நிலங்களை வாங்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகராட்சிகளுக்கு ரூபாய் 4 கோடியே 75 இலட்சத்தை அனுமதித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டமாக, மதுரை, கும்பகோணம், தஞ்சாவூர், திருநெல்வேலி, மயிலாடுதுறை, திருச்சி, கரூர் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெரு விளக்கு, பேருந்து நிலையம், சாலைகள், பாலங்கள் பராமரித்தல், உரம் தயாரித்தல், குப்பை சேகரித்தல் போன்ற உள்ளாட்சி நிறுவனங்களின் அத்தியாவசியப் பணிகள் சிறப்பாக அமையும் வகையில் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு செம்மையாகச் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், திருநெல்வேலி மாநகராட்சி பேருந்து நிலையம், திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி, தென்காசி, பல்லவபுரம், இராஜபாளையம் போன்ற நகராட்சிகளில் தெரு விளக்குகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களும் கணினிமயமாக்கப்பட்டு வரியினங்கள், கணக்கு முறைகள், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், உரிமம் வழங்குதல், மதிப்பீடு தயாரித்தல் போன்ற நடைமுறைகள் துரிதப்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்குப் பயன் கிடைக்கின்ற வகையிலே நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு



தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து நகராட்சிகளும் தொடர்புடைய மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்துடன் பரந்த பரவல் வலைதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 2004 டிசம்பர் மாதத்தில் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் உண்டான ஆழிப்பேரலையின் சீற்றத்தால் கடற்கரையோரப் பகுதிகளான நாகப்பட்டினம், வேதாரண்யம், கடலூர், பரங்கிப்பேட்டை, குளச்சல், திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் போன்ற நகர்ப்புறப் பகுதிகள் அதிகமாக பாதிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர்செய்யவும், உடனடி நிவாரண நடவடிக்கைகள் எடுக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரையின்படி மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சிறப்புச் சிற்றூராட்சிகள் தங்களுடைய பணியாட்கள், வாகனங்கள் மற்றும் மருந்துகள் போன்றவற்றை அனுப்பி வைத்தன.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறியாளர்கள், மருத்துவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் உள்ளடக்கிய அலுவலர்கள் இரவு பகல் என்றும் பாராமல் 15 நாட்களுக்கு மேலாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு சடலங்களை அகற்றும் பணி, மருத்துவப் பணி மற்றும் சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டனர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள் எதிர்பார்க்காத வண்ணம், சிறப்பாக பணியாற்றியமைக்காக நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் 3,861 பேருக்கும் மற்றும் சிறப்புச் சிற்றூராட்சிகளைச் சேர்ந்த 938 துப்புரவுப் பணியாளர்களுக்கும் அவர்கள் ஆற்றிய பணிகளைப் பாராட்டி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஒவ்வொருவருக்கும் தலா ரூபாய் 2,500 மதிப்பூதியம் அளித்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மக்கள் நல அரசு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உலகுக்கே ஒரு முன்னுதாரணமாக நமது புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் திகழ்கின்றார்கள். மாதங்களாகிவிட்ட நிலையிலும் இப்பணிகளை எவ்வாறு விரைந்து முடிப்பது என ஆலோசனை வழங்க, அம்மா அவர்களது அரசில், உயர் அரசு அலுவலர்களாக பதவி வகிப்பவர்களை எங்கள் நாட்டுக்கு அனுப்பி வையுங்கள், தமிழ்நாட்டில் எவ்வாறு இந்த நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நாங்களும் அறிந்துகொள்கிறோம் என்று உதவி கேட்ட பிற நாடுகளுக்கு தனது அதிகாரிகளை அனுப்பி, உலக நாடுகளுக்கே வழிகாட்டும்

தலைவியாக நமது அம்மா அவர்கள் திகழ்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறப்புச் சிற்றூராட்சிகளில் ரூபாய் 6 கோடி செலவினத்தில் 12,000 புதிய தெரு விளக்குகளும், ரூபாய் 18.72 கோடி மதிப்பீட்டிலே 720 இடங்களிலே ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் தற்போது 71 சிறப்புச் சிற்றூராட்சிகளிலே செயல்படுத்தப்படுகிறது. அண்மையில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் புதுடெல்லியிலே நடைபெற்ற சுகாதார கிராமங்களுக்கான பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசினால், வேலூர் மாவட்டத்திலுள்ள காந்தி நகர் சிறப்புச் சிற்றூராட்சியிலே செயல்படுத்தப்பட்டுவரும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள் என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*நண்பகல் 12–00*

அதேபோல, தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் ஒரு முன்மாதிரித் திட்டமாக பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்றைய தினம், சிறப்புச் சிற்றூராட்சிகளிலே, மேலும் 150 இடங்களிலே இவ்வாறு செயல்படுத்துவதற்குண்டான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் சிறப்புச் சிற்றூராட்சியிலே சிக்கனமான முறையிலே, திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம், ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு, பிற பகுதிகளிலும் பின்பற்றத்தக்க வகையிலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினால் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தினை 26–8–2004–ல் உலக வங்கியினர் பார்வையிட்டு, பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள்.

562 சிறப்புச் சிற்றூராட்சிகளுக்கும், கணினி வழங்கப்பட்டு சிறப்புச் சிற்றூராட்சிகளின் பணி செம்மையாக நடைபெற அம்மா அவர்களுடைய அரசு செயலாற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நிதிநிலையில் மிகவும் நலிவடைந்த 100 சிறப்புச் சிற்றூராட்சிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தலா ரூ.5 இலட்சம்



வீதம், மொத்தம் ரூ.5 கோடி மானியமாக வழங்க அம்மா அவர்களினுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

10 சிறப்புச் சிற்றூராட்சிகளிலே வரி வசூல், குடிநீர் வழங்கல், பராமரிப்பு ஆகிய பணிகளுக்காக முழுமையாகப் பெண்களைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, gas stove போன்ற உபகரணங்கள் பழுதுபார்த்தல் ஆகியவை தொடர்பான பயிற்சியினை அளிக்க, சில சிறப்புச் சிற்றூராட்சிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலே சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, மகளிர் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனித சமூகம் நோயின்றி, ஆரோக்கியத்துடன் வாழ பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அவசியமாகும். இந்த உன்னதக் கருத்தினை தன்னகத்தே கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குப் பார்வையுடன் குடிநீர்த் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதியின் அளவைக் கணக்கெடுக்கும்போது அம்மாவினுடைய அரசு 6 மடங்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்து, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடந்த நான்கு ஆண்டு காலத்திலே 26,503 குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலே குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 6,500 குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலே குடிநீர்த் திட்டங்களானது செயல்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 8,287 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் இத்தகைய 2,000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

அதிக ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து, கையிறைப்பான் மூலம் குடிநீர் எடுப்பதிலே மக்கள் படும் இன்னல்களை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள், சிறுமின் விசைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். கடந்த 4 ஆண்டு காலத்திலே 34,796 கையிறைப்பான்கள், சிறுமின் விசைத் திட்டங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு மட்டும் 10,000 கையிறைப்பான்கள் சிறுமின் விசைத் திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன என்பதையும் இந்த அவையிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுவரை, கடந்த 4 ஆண்டு காலத்திலே, ரூபாய் 1,361 கோடி மதிப்பீட்டிலே, 192 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்பதையும் மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துவதிலே, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் முதன்மை வகிக்கிறது என்பதனை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் பெருமையும், பெருமிதமும் அடைகின்றேன்.

5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியிலே ரூ.455.01 கோடி செலவிலே, 188 நகர்ப்புற குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஆனால், அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் 4 ஆண்டு காலத்திலே ரூபாய் 649 கோடி மதிப்பீட்டிலே, 250 நகர்ப்புற குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்த நிலையிலே மக்களுக்குத் தங்கு தடையின்றி குடிநீர் வழங்க, வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.590 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி, போர்க்கால அடிப்படையிலே பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதனால் குடிநீர்த் தட்டுப்பாடு பெரிதும் தவிர்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, அரசு மேற்கொண்ட சீரிய, செம்மையான நடவடிக்கைகளை ஐக்கிய பன்னாட்டுக் குழுமத்தில் அங்கம் வகிக்கும் உலகச் சுகாதார நிறுவனம் வெகுவாகப்



பாராட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 2005–2006 ஆம் ஆண்டில் குறைந்த அளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

5,000 மின் விசைத் திட்டங்கள் தேவைப்படும் இடங்களில் அமைக்கப்படும். 'சுவஜல்தாரா' திட்டத்தின்கீழ் 362 குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். குறைந்த அளவு குடிநீர் வசதியுள்ள 50 நகரங்களில், குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 60 நகரங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் 40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 17 குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை நகரிலே வசிக்கும் சுமார் 60 இலட்சம் மக்கள் தொகைக்குத் தேவையான குடிநீர் அளவு நாளொன்றுக்கு 840 மில்லியன் லிட்டராகும். தொடர்ந்து கடந்த இரண்டு, மூன்றாண்டுகளாக நிலவிய வறட்சி காரணமாக குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டது. குறிப்பாக, 2004 ஆம் ஆண்டில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனை மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசும் சென்னைக் குடிநீர் வாரியமும் போர்க்கால நடவடிக்கை எடுத்து, குறைந்தபட்ச குடிநீர் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்தது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் வறண்டுவிட்ட நிலையிலும், தெலுங்கு–கங்கை திட்டத்தின்கீழ் குடிநீர் வராத நிலையிலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள சுமார் 120 முதல் 150 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குடிநீர் ஆதாரங்களிலிருந்து தினமும் சுமார் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் லாரிகள் மூலமாகக் கொண்டுவரப்பட்டு, 13,000 லாரி நடைகள் மூலமாக தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள சுமார் 14,600 குடிநீர்த் தொட்டிகளை நிரப்பியும், தெருக்களில் நேரடியாகவும் விநியோகம் செய்யப்பட்டது. இதனால் ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவிலான தினசரி குடிநீர் கிடைத்த காரணத்தினால் கடந்த ஆண்டு முழுவதும்

எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு, திறமையாக சமாளிக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் சரித்திர சாதனைக்கு இது ஒரு சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டில், 2004-2005-ல் புதியதாக 3,000 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டன. மேலும் 1,757 இந்தியா மார்க் 2 பம்புகள் மக்களின் தேவைகளுக்காக அமைக்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1-10-2004 அன்று ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, சென்னை நகருக்கு தெலுங்கு-கங்கை திட்டத்தின்கீழ் கிருஷ்ணா நதிநீரை வழங்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில், ஆந்திர மாநில அரசானது 28-11-2004 முதல் 8-3-2005 வரை, கிருஷ்ணா நீரை கண்டலேறு அணையிலிருந்து விடுவித்து, 2.717 T.M.C. தண்ணீரானது தமிழக எல்லைக்கு வந்து சேர்ந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட திட்டம்தான் புதிய வீராணம் திட்டம். இத்திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கியபோது இது வீணான திட்டம் என்று சிலர் வீம்பு பேசினார்கள். இத்திட்டம் நிறைவேறாது என்று சிலர் ஆரூடம் கணித்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் நினைத்ததை முடிப்பவர் என்பதை நிரூபிக்கும் வகையில் 18 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் துவக்கப்பட்ட புதிய வீராணம் திட்டத்தை, 16 மாதங்களிலேயே வெற்றிகரமாக நிறைவேற்றி மாற்றாரும் வியந்து போற்றிடும் வகையில் மாபெரும் சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2004 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி முதல் சென்னை நகருக்கு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் குடிநீர் வர ஆரம்பிக்கப்பட்டது. வீராணம் ஏரியில் தண்ணீர் நிரம்பியவுடன், 13-10-2004 முதல் தினமும் 180 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர் சென்னை நகருக்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியால் 13-10-2004 முதல் சென்னை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய் மூலம் குடிநீர் வழங்க முடிந்தது.



சென்னை நகரில் தற்போது இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 600 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இது தவிர, தினசரி 45 மில்லியன் லிட்டர் நீர் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 15 மில்லியன் லிட்டர் நீர் மொத்த நுகர்வோருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

குழாய்கள் மூலம் நீர் கிடைக்காத பகுதிகள் மற்றும் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு 3,000 லாரி நடைகள் மூலமாக தண்ணீர்த் தொட்டிகளை நிரப்பியும், தெருக்களில் நேரடியாகவும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

சென்னை மாநகரின் கடும் குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுடன்கூடிய புதிய வீராணம் விரிவாக்கத் திட்டப் பணியினை 14-12-2004 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது திருக்கரங்களால் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் குறைவாக மழை பெய்யும் ஆண்டுகளில் வீராணம் ஏரியில் கோடைக் காலங்களில் போதுமான நீர் கிடைக்க வாய்ப்பில்லாமல் போகும்பட்சத்தில், சென்னை மாநகருக்கு தொடர்ந்து குடிநீர் வழங்க வேண்டுமென்று முனைப்புடன் செயல்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொள்ளிடம் நீர்ப் படுகையில் உள்ள ஆற்றின் உட்பரப்பு நீரை எடுத்து, சேத்தியாத்தோப்பிற்குக் கொண்டு சென்று, நீர் ஏற்றம் செய்து புதிய வீராணம் திட்டத்தினை 12 மாத கால அவகாசத்தில் முடிக்கவும் திட்டமிட்டார்கள். இதன் மூலம் வீராணம் ஏரியில், போதுமான நீர் இல்லாத காலங்களில் தினசரி 150 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகருக்குக் கிடைக்கும். இந்நிலையில், இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் இப்பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் பாதிப்புக்கு உள்ளாகும் என்று உண்மைக்குப் புறம்பான அச்சத்தை விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்த ஒரு சிலர் முனைந்ததன்பேரில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி அமைச்சர், துணை சபாநாயகர், உயர் அதிகாரிகள் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் புதிய வீராணம் திட்டம் அமல்படுத்தப்படும் கொள்ளிடக் கரைப் பகுதியில் அமைந்துள்ள இத்திட்டம் பற்றி அச்சம் தெரிவித்த 39 கிராமங்களுக்கும் 24-12-2004 மற்றும் 25-12-2004 ஆகிய தேதிகளில் நேரடியாகச் சென்று, அப்பகுதி விவசாயிகளைச் சந்தித்து இத்திட்டம் குறித்த விவரங்களையும் இதனால் இப்பகுதி விவசாயிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்ற விவரங்களையும் எடுத்துரைத்தனர்.

இப்பகுதியிலுள்ள விவசாயிகளிடம் இவ்வாறு கலந்து பேசியபோது, விவசாயிகள் தரப்பிலிருந்து ஒரு சில கருத்துகள், அரசின் கவனத்திற்கும், செயல்பாட்டிற்கும் வைக்கப்பட்டன. ஏழை எளிய விவசாயிகள்மீது என்றும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த விவசாயிகளின் கோரிக்கைகளை விரிவாகப் பரிசீலனை செய்து, 3 முக்கிய ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்கள்.

*பிற்பகல் 12–10*

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ஏலக்குறிச்சி அருகிலும், அறங்கோட்டை அருகிலும் மற்றும் வாழக்குறிச்சி அருகிலுமாக 3 தடுப்பணைகள், ஒவ்வொன்றும் சுமார் ரூபாய் 2.5 கோடி மதிப்பில் உடனடியாகக் கட்டப்படும். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தங்கள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனம் பெறும் டி. பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள விவசாயிகளில், 31–12–2004 வரை மின் இணைப்புக் கோரி பதிந்துள்ள விவசாயிகளின் நிலுவையில் உள்ள 4,986 விண்ணப்பங்கள் உடனடியாக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மின் இணைப்புகள் வழங்கப்படும்.

இதேபோன்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு மற்றும் பாபநாசம் பகுதிகளில், கொள்ளிடம் ஆற்றின் கரையில், ஆயில் இன்ஜின்களைப் பயன்படுத்திவரும் விவசாயிகளுக்கும் மின் இணைப்புகள், முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக வழங்கப்படும். இதற்கென ரூபாய் 32.86 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டு உடனடியாக அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கொள்ளிடம் ஆற்றில் கல்லணைக்கும் கீழ் அணைக்கும் இடைப்பட்ட ஆற்றுப் பகுதியில், மணல் எடுப்பதைத் தடுத்து நிறுத்திட உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தபடி, தற்போது மணல் எடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி, அந்தப் பகுதியிலே மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா



அவர்கள் நிறைவேற்றுகின்ற வகையிலே கூறியவுடன், உடனடியாக இரண்டு மாத காலத்திலே அந்தக் கோரிக்கைகளை இன்றையதினம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆனாலும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பாதிப்பாக இருக்கின்ற வகையிலே இன்றையதினம் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். உதாரணத்திற்கு, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த காடுவெட்டி குரு அவர்கள் 'அந்தப் பகுதியிலே நீதிமன்றத்தின் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அனுமதி அளித்தாலும் — அரியலூர் அருகே விக்கிரபாண்டி கூட்டத்தில் அவர்கள் பேசியது — அங்கேயிருந்து வருகை புரிகின்ற அதிகாரிகளை நான் முன் நின்று ஆம்புலென்சில்தான் ஏற்றி அனுப்புவேன்' என்று பேசியிருக்கின்றார். ஆகவே, மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக விவரம் அறிந்தவர்கள்.

என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோள். இன்றையதினம் அந்தப் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற தண்ணீரை நாம் ஆழ்துளைக் கிணறு அமைத்து உறிஞ்சி எடுப்பதில்லை. அந்த நிலத்தடி நீரிலே, அந்தப் பகுதி, கொள்ளிடம் பகுதியிலே கீழ் அணைக்கும் கல்லணைக்கும் இடைப்பட்ட தூரத்திலே 25 மீட்டர் மணல் பரப்பு இருக்கிறது. அந்த இடத்திலே 6 collecting wells போடுகின்றோம், நீர் சேகரிப்புக் கிணறுகள்தான் போடுகின்றோம். ஆகவே, அந்தத் தண்ணீரை நாம் சென்னைக்கு எடுத்து வராவிட்டாலும், அந்தத் தண்ணீரானது கடலுக்குத்தான் சென்று சேரும் என்பது இங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அந்தப் பகுதியிலே இருக்கின்ற தண்ணீரை, நீர் சேகரிப்புக் கிணறு மூலமாகச் சேகரித்துத்தான் எடுக்கின்றோம். அப்படியிருக்கின்றபோது நீதிமன்றத்தின் மூலமாக அம்மா அவர்களுடைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அனுமதி தந்தாலும்கூட, இப்படி மக்களிடையே புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) தங்களால் இயற்ற முடியாத திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுகின்றார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தடையாக யாரும் இருக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) சென்னை நகரின் நீர் ஆதாரங்கள் பெரும்பாலும்...

**திரு. தி. வேல் முருகன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு second ஒரேயொரு second.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உரையை முடித்த உடனே கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பேசி முடித்த உடனே கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** சென்னை நகரின் நீர் ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்தே அமைந்துள்ளன. பருவமழை குறைகின்ற ஆண்டுகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக, நம்பத்தகுந்த நீர் ஆதாரமாக கடல் நீரை குடிநீர் ஆக்கும் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இதில் பொதுத் துறையும், தனியாரும் பங்குபெறும் கூட்டமைப்பின் மூலம் ஒப்பந்ததாரர்கள் முடிவு செய்யப்படவுள்ளார்கள். தகுந்ததொரு தொழில்நுட்பத்தில், ஒப்பந்ததாரரது சொந்த நிதியில் வடிவமைத்து, கட்டி, இயக்கி, பின்னர் திருப்பிக் கொடுக்கும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இதற்கென்று திறந்த முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் புதிய வீராணம் திட்டம் மற்றும் செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ஆகியவற்றிற்கு சுமார் 92 கோடி ரூபாய் மதிப்பில் "வரியில்லா முனிசிபல் பத்திரங்கள்" வெளியிடப்பட்டுள்ளன. இது மத்திய அரசின் ஒப்புதலோடு வெளியிடப்பட்டுள்ளது. குடிநீர் வாரியத்தின் சிறந்த நிதி நிர்வாகத்தை அங்கீகரிக்கும் விதமாக இந்தப் பத்திரங்கள் வெளியிடுவதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்தியாவில் குடிநீர் வழங்கும் வாரியம் ஒன்றிற்கு, இவ்வாறு வரியில்லா முனிசிபல் பத்திரங்கள் வெளியிட ஒப்புதல் பெறப்பட்டது இதுவே முதலாவது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

முந்தைய ஆட்சிக் காலத்தில் சிங்காரச் சென்னையை உருவாக்குகிறோம் என்று சொல்லி, பல கோடி ரூபாயை வீணடித்து, மக்களுக்குப் பயன்தராத திட்டங்களைச் செயல்படுத்தியதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால், இன்று நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சென்னை



மாநகரில், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை கண்கூடாகக் காண்கின்றோம். இந்தக் குடிசைவாழ் மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்ட நமது அம்மா அவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள இம்மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இம்மக்கள் கழிவுநீர் இணைப்பினைப் பெறுவதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் ரூபாய் 3,300 என்பதை இவர்களைப் பொறுத்தவரையில் ரூபாய் 100/–ஐக் கட்டினாலே கழிவுநீர் இணைப்பு வழங்கப்படும் என்று அந்த மக்களுக்கு 6–1–2003–ல் ஆணையிட்டார்கள். அதன்படி, இதுவரை சென்னை மாநகரில் 100 ரூபாய் கட்டிய 23,904 பேருக்கு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், ரூபாய் 104.20 கோடி செலவில் 315.87 கிலோ மீட்டர் நீளத்திற்கு பேருந்து சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

நீர் தேங்கக்கூடிய 15 இடங்களில் ரூபாய் 21.5 கோடி செலவில் கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கு மேல் பணி பூர்த்தியாகி இருக்கின்றது. ரூபாய் 203.63 கோடியில் 2,148.69 கிலோ மீட்டர் நீளத்திற்கு உட்புறச் சாலைகள் போடப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. ரூபாய் 21.57 கோடி செலவில் 482.26 கிலோ மீட்டர் நீளத்திற்கு நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 39.84 கோடி செலவில் 101 கிலோ மீட்டர் நீளத்திற்கு, மழைநீர் வடிகால் கால்வாய்களில் தூர் வாரப்பட்டுள்ளது. ரூ.3.75 கோடி செலவில் 97.01 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் கால்வாய்களில் தூர் வாரப்பட்டுள்ளது. 30 ஆண்டுகாலமாக தூர் வாரப்படாத கால்வாய்கள் குறிப்பாக, மாம்பலம் கால்வாய் போன்றவை தூர் வாரப்பட்டுள்ளன.

சாதாரண மக்களும் பயன்படுத்தி வந்த மெரினா நீச்சல் குளம் ரூபாய் 50 இலட்சம் செலவில், மேலும் எழிலுடன் சீரமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் 23–10–2004 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை நகரில் குப்பையைத் தரம் பிரிக்கும் திட்டம்469 தெருக்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக 1,566 மூன்று சக்கர சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில், குப்பையை உரமாக்கும் தொழிற்சாலை ரூபாய் 5 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில் 2003–2004 ஆம் ஆண்டில் 10 இடங்களில் சீரமைக்கும் பணி ரூபாய் 72 இலட்சம் செலவில் இடுகாடுகளிலே செய்யப்பட்டுள்ளது என்பதையும், புல்வெளி, உயர் கோபுர மின் விளக்கு மற்றும் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அவை அழகுடன் விளங்கிட வகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை நகரை, பசுமைமிகு நகரமாக்க பூங்காக்கள், சாலையோரப் பூங்காக்கள் மற்றும் போக்குவரத்து தீவு பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளுக்காக ரூபாய் 8 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கடற்கரையை, பசுமைமிகு கடற்கரையாக மாற்ற ரூபாய் 50 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படி, சென்னை மாநகரை பசுமை நகராக்கும் திட்டத்தின் அடுத்த மைல் கல்லாக சென்னை அடையாறு பகுதியிலுள்ள 58 ஏக்கர் பரப்பளவில் திறந்தவெளிப் பூங்கா ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்ட பணிகள் ரூபாய் 6 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இப்பூங்கா பணிகள் நிறைவு பெறும்போது, இது இந்தியாவிலேயே ஒரு பெரிய திறந்தவெளிப் பூங்காவாகத் திகழும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லாத அனைவருக்கும் கல்வி வழங்க, எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் சென்னை மாநகராட்சி மூலம் மொத்தம் 11 கோடியே 18 இலட்சம் செலவில் 272 வகுப்பறைகளும், 18 அறிவியல் ஆய்வுக் கூடங்களும், 3 சத்துணவுக் கூடங்களும், 7 சமையல் கூடங்களும் பல்வேறு பள்ளிகளில் கட்டப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலம் தந்த கற்பகத் தருவாக, தமிழ்நாட்டின் நிலை உயர்த்தும் கருணை வள்ளலாக, அறிவாற்றலும் நிர்வாகத் திறமையும் மிக்க முதலமைச்சராகத் திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொட்டது துலங்கும், அவர்களின் பார்வை பட்டாலே பட்ட மரமும்



துளிர்க்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் குடிநீர் வழங்கும் துறையின், ஆயிரமாயிரம் பணிகள் நாள்தோறும் செயல்வடிவம் பெறுகின்றன என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால், எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற திடமான மனதோடும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற திடமான மனதோடும், தெளிவான சிந்தனையோடும், நடமாடும் தெய்வமாக, தமிழ் நாடாளும் நம் அம்மா அவர்களுடைய சிறப்பான செயலாற்றலால், நிதிநிலையை சரி செய்து, பல துறைகளில் இன்றைக்கு இந்தியாவின் முதல் மாநிலமாகத் தமிழகத்தை திகழச் செய்தார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

பிற்பகல் 12–20

தமிழகத்தின் மக்கள் சக்திமிக்க ஒரு தலைமை, நம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி இம்மண்ணில் என்றென்றும் தொடர இந்த நூற்றாண்டில் இனி வரவிருக்கும் அனைத்துத் தேர்தல்களிலும் அளப்பரிய வெற்றி பெற்று, இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எந்நாளும் இந்நாட்டின் முதல்வராகத் திகழ்வார் என்பது நிச்சயம், நிச்சயம், நிச்சயம் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறையின் மூலமாக நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்து அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதலோடு இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் தேன்கனிக்கோட்டை bus stand–ஐப் பற்றிச்சொல்லி நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று கேட்டார். கடந்த வாரம் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலே அங்கு நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஊரக சுகாதார மேம்பாட்டில் கூட்டாண்மை நிறுவனங்களை ஈடுபடுத்துதல்: புனிதத் தலமாகவும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ள 100 கிராமங்களில் ஊரக சுகாதார மேம்பாட்டினை**

ஏற்படுத்துவதில் கூட்டாண்மை நிறுவனங்களின் பங்கேற்பினைப் பெற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

சுகாதார வசதியை 75 சதவீதத்தினருக்கு அளித்தல்: 2005–2006 ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் 75 சதவீதத்தினருக்கு சுகாதார கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

தூய்மையான கிராம இயக்கத்தின் விருதினை அதிக ஊராட்சிகள் பெறுகின்ற வகையிலே ஊக்குவித்திட, இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டில் அதிகரிக்கப்படும். இதனால், அதிக கிராமங்கள், மாணவர்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் ஆகியோர் தூய்மையான கிராம இயக்கத்தில் ஆர்வத்துடன் ஈடுபட ஊக்குவிக்கப்படுவார்கள். தூய்மையான கிராமத்தை இயக்க, விருதுகள் தகுதியுடைய கிராம ஊராட்சிகள் மற்றும் சிறப்புக் கிராம ஊராட்சிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுகாதாரமான பிளாஸ்டிக் கழிவறை கோப்பைகளின் தயாரிப்பு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஊரக மகளிர் சுயஉதவிக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கு மாவட்டத்திற்கு ஒரு அலகிற்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் ஒரு மின் சலவையகம் மொத்தம் ரூபாய் 14.5 இலட்சம் செலவிலே ஏற்படுத்தப்படும். இதன்மூலம் 580 ஊரக சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு சுய வேலைவாய்ப்பு கிடைக்கும்.

10 மாவட்டங்களிலுள்ள ஊரகப் பகுதியைச் சார்ந்த 5,000 இளைஞர்களுக்கு வாழ்வாதாரத் திறன் அடிப்படையிலான பயிற்சிகள், அடிப்படை கணினி பயிற்சிகள், இதர சேவை தொடர்பான பயிற்சிகள் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டிலே பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட சிறப்புத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும்.

2005–2006 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 5 சுயஉதவிக் குழுக்கள் வீதம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட 3,000 நபர்களுக்குத் தகுந்த நிறுவனங்கள் மூலம் முடநீக்கியல் மருத்துவ சிகிச்சை பயிற்சி மற்றும் ஆயுர்வேத புத்துணர்வுப் பயிற்சி போன்றவை மொத்தம் ரூபாய் 150 இலட்சம் செலவிலே அளிக்கப்படும்.



சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இக்குழு உறுப்பினர்களிடையே விற்பனை செய்வதற்கு மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும், சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற, உள்ளூரிலேயே விற்பனைக்கான தேவை அதிகமாக உள்ள பொருட்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான விற்பனை வாய்ப்புகள் மேம்படுத்தப்படும். மாவட்ட அளவில் உள்ள மாவட்ட விற்பனை மற்றும் விநியோக சங்கம், சுயஉதவிக் குழுக்களிடையேயான தொடர்பமைப்பு ஏற்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படும்.

சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் வகையில் விற்பனை நடவடிக்கைகளுக்கான நேரத்தையும், தூரத்தையும் பெருமளவு குறைப்பதற்கு உதவியாக 3,000 ஊரக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விற்பனையை மேம்படுத்துவதற்காக செல்லிட தொலைபேசிகள் வழங்கப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 சுய உதவிக் குழுக்களுக்கு அவற்றின் விற்பனை செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையிலே செல்லிட தொலைபேசிகள் வழங்கப்படும். பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள், ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

12 கடலோர மாவட்டங்களில் உள்ள 218 கடலோர கிராம ஊராட்சிகளில் தலா ரூபாய் 75,000/– மதிப்பீட்டிலே மொத்தம் ரூபாய் 163.50 இலட்சம் செலவிலே 218 மீன் குட்டைகள் அமைக்கப்படும்.

2005–2006–ல் 500 கிலோ மீட்டர் நீளமுள்ள வண்டிச் சாலைகள் ரூபாய் 6,750 இலட்சம் மதிப்பீட்டிலே, தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படும்.

385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூபாய் 577.50 இலட்சம் செலவில் தலா ஒரு சத்துணவு மையம் அல்லது அங்கன்வாடி கட்டடம் கட்டப்படும்.

ஊரகச் சாலைகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் மாவட்டத்திற்கு ஒன்று மற்றும் மாநில அளவில் ஒன்று என்ற அடிப்படையிலே 30 தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ரூ.166.46 இலட்சம் செலவிலே மத்திய நிதி உதவியின்கீழ் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–25

மாநிலத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளுக்கு மேல் கணினி வசதி உடையவையாக மாறும் வகையில் 2005–2006 ஆம் ஆண்டில் 5,363 கிராம ஊராட்சிகளுக்கும் கணினிகள் வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் கீழ்க்கண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள அமைப்புகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:

தனி நபர் கழிப்பறைகளுடன் இணைத்து அமைக்கப்படும் 3,000 கரிம வாயுக் கலன்கள்; மகளிர் சுகாதார வளாகக் கழிப்பறைகளுடன் இணைத்து அமைக்கப்படும் 30 கரிம வாயுக் கலன்கள்; 10 தாவரக் கழிவு எரிசக்திக் கலன்கள்; திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 5 காற்றாலைகள் அமைக்கப்படும்.

கிராம ஊராட்சிகளில் மின் சக்தி தணிக்கை. கிராம ஊராட்சிகளின் மின் நுகர்வு கட்டணச் செலவினச் சுமையைக் குறைத்திடும் வகையினைக் கண்டறிய முன்னோடி நடவடிக்கையாக அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு கிராம ஊராட்சியில் அவற்றின் மின் சக்தி நுகர்வு குறித்த கணக்கீட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு, விண்கோள் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாக தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மேம்பட்ட ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு உதவும் வகையிலும், தேவையான அளவிற்கு இப்பொருள் குறித்து பயிற்சி அளிக்கக்கூடிய திறனாளர்களை உருவாக்கும் வகையிலும், ஊராட்சி நிருவாகம் குறித்த ஒரு சான்றிதழ் பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவில் மின்னணு நிருவாகத்தைச் செயல்படுத்த சிறப்புக் கவனம் அளிக்கப்படும். இதற்காகச் சிறந்த நிருவாகத்திற்குத் தேவையான கணினி பயிற்சி ஊராட்சிகளுக்கும், இணையதள தகவல் மையங்களை நிருவகிக்கும் பயிற்சி சுயஉதவிக் குழுக்களுக்கும் அளிக்கப்படும்.

குப்பைகளைத் தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கி, வீணாகும் தண்ணீரை மறு சுழற்சிக்கு உட்படுத்தும் திட்டம் பொதுமக்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் பங்கேற்புடன் கோயில் மற்றும் புராதனமிக்க



நகரங்கள் உள்ளடக்கிய மொத்தம் 150 சிறப்புச் சிற்றூராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

10 சிறப்புச் சிற்றூராட்சிகளில் சோதனை முறையில் வரி வசூல், குடிநீர் பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

வீட்டு உபயோகப் பொருட்கள், குழாய் பழுதுபார்த்தல், கொத்துவேலை செய்தல் மற்றும் சிறிய பழுதுபார்த்தல் முதலானவற்றில் மகளிர் குழுக்களுக்கு உரிய பயிற்சி அளித்து, அவர்கள் மூலமாக, முக்கியமான சிறப்பு சிற்றூராட்சிகளில் மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சேவை மையங்கள் நடத்தப்படும்.

2005–2006 ஆம் ஆண்டில் 562 சிறப்பு சிற்றூராட்சிகளிலும் வரி வசூல் மற்றும் அலுவலக நிருவாகம் ஆகிய அனைத்துப் பணிகளுமே கணினிமயமாக்கப்பட உள்ளன. இந்த முயற்சி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முதல் முயற்சியாகும்.

மேலும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கச் சொன்ன அறிவிப்புகளை மாமன்றத்திற்கு அறிவிக்கின்றேன்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டு வந்த இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட பயன்கள் மற்றும் சாதனைகளை நிலைநிறுத்தவும், நகர்ப்புற உள்ளாட்சிகளால் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள செயல்திறன் மற்றும் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், நகர்ப்புற வறுமையைக் குறைப்பதற்கும் உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், 2005–2006–ல் தொடங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் உத்தேச மொத்தச் செலவு மற்றும் முக்கிய விவரங்கள் 1,350 கோடி ரூபாய் – மொத்தச் செலவு; சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு 562.50 கோடி ரூபாய்; நகராட்சி நிருவாக ஆணையரகம் – 787.50 கோடி ரூபாய்; இதில் நகர்ப்புற முதலீடு 720.00 கோடி ரூபாய்; நிறுவன மேம்பாடு 67.50 கோடி ரூபாய். மூலதன மானியம் மில்லியனில் 50 மில்லியன், கடன் 110 மில்லியன், ஐ.டி.சி. 15 மில்லியன். நகராட்சி நிருவாக ஆணையரகம் 175 மில்லியன், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 125 மில்லியன்.

வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிக்கும் முறையை மேம்படுத்தவும், குப்பை சேகரிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், குப்பை கொட்டப்படும் இடங்களில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தவும், செயல் திட்டம் ஒன்று ரூ.238.00 கோடி மதிப்பீட்டில் அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டமானது செம்மையாகச் செயல்படுத்தப்படும்.

2005–2006 ஆம் ஆண்டில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 49 மூன்றாம் நிலை நகராட்சிகளில் பரந்த பரவல் வலைத்தளம் ரூ.38 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தகவல் தொழில்நுட்பத்தின் அடுத்த தலைமுறை மாறுதல்கள், வேலை சார்ந்த மேலாண்மை அமைப்பு, கொடுப்பு வாயில், முன்னோட்ட அடிப்படையில் ஒலி, ஒளி கலந்தாய்வு முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி அமைப்புகளுக்கு புவியியல் தகவல் அமைப்பு, தகவல் திட்டம், பாதுகாப்பு தணிக்கை மற்றும் செயல்பாட்டு மென்பொருள் தணிக்கை ஆகியவை அறிமுகப்படுத்தப்படும்.

தெரு விளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளில் செயல்திறனை மேம்படுத்த சிறப்பு நிலை நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் விருப்பமுள்ள நகராட்சிகளில் இப்பணிகள் தனியார் துறை மூலமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சுய வேலைவாய்ப்பை மேம்படுத்த வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களுக்கான மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.20.36 கோடி வழங்கப்படும்.

பிற்பகல் 12–30

நகராட்சிகளிலுள்ள பூங்காக்கள் மற்றும் பொது இடங்களைப் பராமரித்தல் மற்றும் கடைகள் ஒதுக்கீடு செய்தல் மற்றும் திடக் கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு பணிகளை வழங்குவதில் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும்.

2005–2006 ஆம் ஆண்டில் ரூ.54.17 கோடி செலவிலே ஒருங்கிணைந்த முறையில் குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2005–2006 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 20 நகராட்சிகளில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மைய அரசு ஈடு மானியம் ரூ.45 கோடி பெறப்படும்.

2005–2006 ஆம் ஆண்டில் பெரு நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.38.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இணையான மைய அரசின் ஈடு மானியம் பெறப்பட்டு, சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட நகராட்சிகளில் குடிநீர் வழங்கல், சாலைகள் மற்றும் பாதாள சாக்கடை அமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீர் ஆதாரங்களில் சாக்கடை நீர் உட்புகுவதைத் தடுக்க, தேவையான இடங்களிலே தடுப்புச்சுவர் மற்றும் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3.43 கோடி வழங்கப்படும். நீர் ஆதாரங்களைச் சுற்றி சேரும் குப்பைகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் ஆகியவை முறைப்படி அகற்றப்படும். கோடைக் காலத்தில் உள்ளூர் நீர் ஆதாரங்களை மாற்றுக் குடிநீர் ஆதாரங்களாகப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னை மாநகராட்சி – சாலைகள் மேம்பாட்டிற்காக சுமார் ரூ.106 கோடி செலவிடப்படும். இயந்திரமயமாக்கப்பட்ட உரக்கிடங்கு ரூ.5.25 கோடி செலவில் அமைக்கப்படும். 400 வகுப்பறைகள் மற்றும் 30 ஆய்வுக் கூடங்கள் ரூ.25 கோடி செலவிலே கட்டப்படும். 6 எரிவாயு மயானங்கள் அமைக்கப்படும். 30 முதல் 40 வயதுடைய தாய்மார்களுக்கு கருப்பை புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் உள்ளனவா என்பது கண்டறியப்படும்.

மதுரை மாநகராட்சி – 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.23.20 கோடி செலவிலே பாதாள சாக்கடைப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் சாலை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். தெற்கு வெளி வீதி – செயின்ட் மேரிஸ் பள்ளி சந்திப்பில் ரூ.45 இலட்சம் செலவிலே சுரங்கப்பாதை அமைக்கப்படவுள்ளது. ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் உள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.88.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். முக்கிய சாலை சந்திப்புகளில் உள்ள சாலைத் திட்டுகளில் பூங்காக்கள் அமைத்து அழகுபடுத்த ரூ.26.85 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பழுதடைந்த குடிநீர் விநியோக பிரதான

குழாய்களைப் புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கப் பகுதிகளிலே புதிய குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் அமைக்கவும், ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் ரூ.2.44 கோடி செலவிடப்படவுள்ளது. மாநகராட்சிப் பள்ளியின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஒவ்வொரு மண்டலத்திலும் தலா ஒரு பல்வகை கணினி மையம் ஏற்படுத்த ரூ.3.20 கோடி செலவு செய்யப்படும்.

கோவை மாநகராட்சி – தற்போதைய குடிநீர் விநியோக அமைப்பினை மேம்படுத்தும் வகையிலே பழைய பிரதான குடிநீர் விநியோக மற்றும் பகிர்மான குழாய்கள் ரூ.1 கோடி செலவில் புதுப்பிக்கப்படும். ரூ.1 கோடி செலவிலே உக்கடம் பகுதியில் சுரங்கப்பாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கவுண்டம்பாளையம் மற்றும் சிங்காநல்லூர் பகுதிகளிலே ஒரு நவீன மின் மயானம் ரூ.1.50 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது. வெள்ளலூர் உரக்கிடங்கின் மேம்பாட்டிற்காக ரூ.5.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக புதிய வாகனங்கள் வாங்குவதற்காகவும் மற்றும் உரக்கிடங்கினை மேம்படுத்தவும் ரூ.8.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் Bio–Methanation Project அமைக்க அரசு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ரூ.25 இலட்சம் செலவிலே அனைத்து வசதிகளும் கொண்ட 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனை ஒன்று கட்டப்படும். நகர்ப்புற மக்களின் வறுமையை ஒழிப்பதற்காக 500 நகர்ப்புற ஏழைகளுக்கு சுய தொழில் தொடங்க கடனுதவி அளிக்கப்படும். நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 100 பெண்களுக்கு கடனுதவி அளிக்கப்படும். தற்போதுள்ள பேருந்து நிலையத்தினை மேம்படுத்த 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கம் பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிக்காக ரூ.3 கோடி ஒதுக்கப்படும்.

சேலம் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் எருமாபாளையம், வீராணம் மற்றும் சூரமங்கலம் ஆகிய பகுதிகளில் தற்சமயம் உபயோகத்தில் உள்ள உரக்கிடங்குகளை, தற்காலிக உரக்கிடங்குகளாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், ரூ.2.40 கோடி செலவிலே மல்லமூப்பன்பட்டி கிராமத்தில் 194 ஏக்கர்



நிலப்பரப்பில் நவீன உரக்கிடங்கு அமைக்கப்படவுள்ளது. பெருகிவரும் மக்கள்தொகையினைக் கருத்திற்கொண்டு அனைத்து மக்களுக்கும் நல்லமுறையில் குடிநீர் வழங்க ஏதுவாக இம்மாநகராட்சிக்கு என்று தனியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்த திட்ட முன்மொழிவுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவைக் கழகம் மூலம் தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் தோராய மதிப்பு ரூ.196 கோடி ஆகும்.

திருநெல்வேலி மாநகராட்சி – திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக புதிய வாகனங்களை வாங்குவதற்கும் மற்றும் உரக்கிடங்கு மேம்பாட்டுப் பணிகளுக்குமாக ரூ.5.62 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் திருப்திகரமாக செயல்படுத்தப்பட்டது என்று உலக வங்கியின் மதிப்பீட்டோடு கடந்த நவம்பர் 2004–ல் முடிவுற்றது. இந்தத் திட்டத்தின் வெற்றியின் விளைவாக மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் குறித்து ஏப்ரல் 2005–ல் உலக வங்கியுடன் திட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இத்திட்ட மதிப்பு 435 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். நம்முடைய ரூபாய் மதிப்பில் 1,950 கோடி ரூபாய் தோராயமாக ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்ட காலத்தின்போது 300 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது ரூபாய் 1,350 கோடி வழங்க உலக வங்கி உத்தேசித்துள்ளது.

பிற்பகல் 12–35

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை வலுப்படுத்துவதற்காக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்படும் செலவுகளைக் குறைக்க, குடிநீர் வழங்கல் மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றில் மின்சாரச் சிக்கனம், குடிநீர்க் குழாய் நீர்க் கசிவைத் தடுத்தல், நவீன கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்துதல், உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் 'கட்டுதல், செயல்படுத்துதல், மாற்றுதல்' என்ற முறையில் தனியார் முதலீட்டை அனுமதித்தல், அவற்றில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனமானது, உள்ளாட்சிகளின் ஆணையரோடு இணைந்து பணியாற்றவுள்ளது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம். தனியார் முதலீட்டின் உதவியுடன், திருப்பூரிலே கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தொடங்கப்பட்ட திட்டப் பணிகளில், நடப்பு ஆண்டில் 87 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான முதல் கட்டப் பணிகள் அனைத்தும் திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் 2005–ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வடிகால் திட்டத்தினையும் சேர்த்து அக்டோபர் 2005–ல் முடிக்கப்படும். இத்திட்டமானது ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இம்மாநிலத்தில் பல்வேறு கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் தனியார் துறையின் முதலீட்டினை ஈர்க்கும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். 2005–2006 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட குடிநீர்த் திட்டங்கள் முடித்து பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்டுள்ள 968 ஊரகக் குடியிருப்புகளுக்கும் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தளத்திலேயே புளோரைடு நீக்கும் கலன்கள் அமைத்தல்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூர் ஒன்றியத்தைச் சார்ந்த அத்திப்பட்டு மற்றும் 66 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 33 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 3 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கரூர் மாவட்டத்திலே குளித்தலை மற்றும் தோகைமலை ஒன்றியங்களைச் சார்ந்த 127 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 50 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 10 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்திலே கொளப்பலூர் சிறப்பு ஊராட்சி மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த 41 ஊரகக் குடியிருப்புகளிலே வாழும் 22 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்திலே குஜிலியம்பாறை ஒன்றியத்தில் உள்ள 263 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திண்டுக்கல் ஒன்றியத்தில் உள்ள 217 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 1.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலே 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



மதுரை மாவட்டத்தில் செல்லம்பட்டி மற்றும் வாடிப்பட்டி ஒன்றியங்களைச் சார்ந்த 99 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 53 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 5 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2005–2006 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்:

வேலூர் மாவட்டத்திலே 77 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 11 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அரக்கோணம் நகராட்சிக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியங்களைச் சார்ந்த பேரண்டப்பள்ளி மற்றும் 167 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 4 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில் வெண்ணாந்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 78 குடியிருப்புகளில் வாழும் 40 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 4 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில் 58 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 9 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே நாமக்கல் நகராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 53 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 1 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்திலே வானிப்புத்தூர், பெரியகொடிவேரி, கெம்பநாயக்கன்பாளையம் மற்றும் தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியங்களைச் சார்ந்த 7 ஊராட்சிகளில் வாழும் 76 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலே 95 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 11 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வால்பாறை நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், கடவூர் ஒன்றியங்கள் மற்றும் திருச்சி மாவட்டத்திலே வைய்யம்பட்டி ஒன்றியங்களில் உள்ள 541 குடியிருப்புகளில் வாழும் 1 இலட்சத்து 98 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 49 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருச்சி மாவட்டத்திலே மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 146 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலே விராலிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 99 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 13 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே திருவையாறு, பாபநாசம் சிறப்பு ஊராட்சிகளில் வாழும் 31 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

திண்டுக்கல் மாவட்டத்திலே நிலக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 54 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 46 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 5 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தேனி மாவட்டத்திலே கம்பம், கூடலூர் நகராட்சிகள், காமய்யகவுண்டன்பட்டி, புதுப்பட்டி, உத்தமபாளையம் மற்றும் அனுமந்தன்பட்டி சிறப்பு ஊராட்சிகளில் வாழும் 1 இலட்சத்து 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பிற்பகல் 12–40

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி சிறப்புநிலை ஊராட்சி, நம்புதாளை மற்றும் திருவாடனை ஒன்றியங்களைச் சார்ந்த 21 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 29 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 14 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கமுதி சிறப்புநிலை ஊராட்சிக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.



**சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

சென்னைக் குடிநீர் வாரியம் மேற்பரப்பு நீராதாரங்களில் இருக்கின்ற நீரையும், தெலுங்கு–கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து பெறப்படும் நீரையும் மற்றும் புதிய வீராணம் திட்டத்திலிருந்து பெறப்படும் நீரையும், தீவிரமாகக் கண்காணித்து சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வழங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

சென்னைக் குடிநீர் வாரியம், தகவல் முறை மற்றும் தொழில்நுட்பத் திட்டம், நிலவியல் தொடர்பான தகவல் அமைப்பு தொடர்பு சாதனம், கணினி, மென்பொருள் ஆகியவற்றைக் கையாள்வதன்மூலம் நகரம் முழுவதும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. சாலைகள், தெருக்கள் ஆகியவற்றின் குறிப்புகள் அடங்கிய அடிப்படை வரைபடம், மேற்பரப்பு மற்றும் நிலத்தடியில் உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளோடு தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை மாநகருக்கும், சென்னை நகரின் அருகிலுள்ள நகரமயமாக்கப்பட்ட பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கவும், மேலும், குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும், ரூ.750 கோடி மதிப்பீட்டில் மூன்றாவது சென்னைத் திட்டம் வகுக்கப்பட்டு, உலக வங்கியிடம் உதவி கோரியுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம் கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலிருந்து உட்பரப்பு நீரை எடுத்து, சேத்தியாத்தோப்பிற்கு உந்து விசை மூலமாக அனுப்பி, பின்னர் புதிய வீராணம் திட்டத்திலுள்ள உள்கட்ட அமைப்புகள் மூலம் சென்னைக்கு அனுப்ப, புதிய வீராண விரிவாக்கத் திட்டம் என்கின்ற திட்டம் ரூ.300 கோடி செலவிலே செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலிருந்து 150 MLD உள்பரப்பு நீர் எடுக்கப்படும்.

சென்னைக் குடிநீர் வாரியம், ரூ.124 கோடி திட்ட மதிப்பீட்டிலே நீரின் அளவை அதிகரிக்க கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் பாலாறுகளில் அதிகமாகவுள்ள நீரைத் தேக்கி வைப்பதற்காகத் தடுப்பணைகள் கட்டுவதன் மூலம், சென்னைக் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-II-ஐச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், மக்களுக்குக் குடிக்கத் தகுந்த குடிநீர் வழங்குவதற்காக எல்லாப் பருவ காலங்களிலும் ஒரு நம்பத்தகுந்த ஆதாரமாகக் கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்கும் பணி, பொது மற்றும் தனியார் பங்குபெறும் கூட்டமைப்பின் மூலம் திறந்த முறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையிலே ஒப்பந்ததாரர் முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு ஏதுவாக ஒரு தகுந்த தொழில்நுட்பத்தில் ஒப்பந்ததாரர், அவரது சொந்த நிதியில் வடிவமைத்து, கட்டி, இயக்கி, திருப்பிக் கொடுக்கும் வகையிலே மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டு, 2006 ஆம் ஆண்டு தொடக்கத்திலே படிப்படியாக முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கழிவுநீரைச் சுத்திகரித்து வீட்டு உபயோகமல்லாத பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையை சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ளும். சென்னைப் பெருநகர் பகுதிக்குட்பட்ட நகரப் பகுதிகளிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படும். மேற்காண் திட்டங்களுக்கு வாரியம் விரிவான கருத்துரு மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) முடித்துவிடட்டும். அவர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) ஆக்கப் பொறுத்தவர்கள், கொஞ்சம் ஆறப் பொறுங்கள், அவர் முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஊரக வளர்ச்சித் துறை மானியம் மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்களிலுள்ள கோரிக்கைகளை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்று கூறுகின்றேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு



V 21 3805 P65 8111

உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொருவராகக் கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், (குறுக்கீடு) திரு. கணேசன், கொஞ்சம் உட்காருங்கள். திரு. மு.க. ஸ்டாலின், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் சார்பில் மொழிப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுதாரர்களுக்கு, அதேபோல, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுதாரர்களுக்கு, 1998 ஆம் ஆண்டு வேலை வழங்கக்கூடிய ஒரு சிறப்பான அரசாணையை வெளியிட்டு, அந்த அடிப்படையிலே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுதாரர்கள் 79 பேர்களுக்கும், மொழிப் போர் தியாகிகளுடைய வாரிசுதாரர்கள் 14 பேர்களுக்கும், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, 2001–ல் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு, அந்த அரசாணை இரத்து செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக்கூடிய எண்ணம் இந்த ஆட்சிக்கு உண்டா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடுகள்) ஒவ்வொருவராகக் கேளுங்கள்.

பிற்பகல் 12–45

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், திரு. குரு அவர்கள் பொதுக் கூட்டத்தில் பேசியதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அவைக்கு என்று ஒரு தனி மரபு உண்டு. வெளியிலே, பொதுக் கூட்டத்திலே, பேசுவதைப் பற்றி இந்த அவையிலே விவாதிக்கப்பட வேண்டுமானால், ஆளுங்கட்சிக்கு நீங்கள் கொடுத்த அதே வாய்ப்பினை, எங்களுக்கும் நீங்கள் வழங்குவீர்களா என்பதுதான் எங்களுடைய கேள்வி.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185240
சென்னை-600 008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. குரு, சட்டமன்ற உறுப்பினர், அவர் அப்படிப் பேசவில்லையென்று சொன்னால் மறுத்துவிடலாம், அதிலே ஒன்றும் இல்லை. குரு அப்படிப் பேசவில்லையென்று தாங்கள் மறுக்கிறீர்களா? (குறுக்கீடு) நான் கேட்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பொதுக் கூட்டத்திலே என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. பொதுக் கூட்டத்திற்கு நான் போகவில்லை. பொதுக் கூட்டத்திலே பேசுவதையெல்லாம் இங்கே பேசலாமா? அது ஒரு முறையா? அது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பொதுக் கூட்டத்தில் பேசியதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அந்தத் தண்ணீர் பிரச்சினை தொடர்பாக, நீதிமன்றம் உத்தரவிட்டும்கூட, சிலபேர் தடையாக இருக்கிறார்கள் என்கிற கருத்தைச் சொல்வதற்காக சொன்னார் அதை. வேறு ஒன்றும் தவறான நோக்கத்தில் அதைச் சொல்லவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, இதிலே ஒரு தெளிவான பதில் வேண்டும். அங்கு, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அனைத்து வீடுகளிலும் கருப்புக் கொடியெல்லாம் கட்டியிருக்கிறார்கள். அதையெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அதைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடு) அதைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொன்னார்.

**திரு. ஐ. கணேசன்:** அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில், பொதுக் கூட்டத்தில் பேசினால் அதை இங்கே எடுத்துக்கொண்டு பதில் சொல்லலாமா என்று கேட்டார். வெளியிலே ஓர் உறுப்பினர் அறிக்கை விட்டால், அதை எடுத்துக்கொண்டு பேசலாமா என்றால், வெளியிலே அறிக்கை விட்ட திரு. பொன்முடிக்கு, அமைச்சர் அண்ணாவி அவர்கள், அந்தப் பத்திரிகையைக் கொண்டுவந்து, தினகரன் பத்திரிகையை வைத்து, இப்படி அறிக்கை வந்திருக்கிறது என்று பதில் சொன்னார். பொதுக் கூட்டத்திலே, திரு. குரு பேசியதற்கு, இங்கே ஒரு பதில் சொல்லியிருக்கிறார். ஆகையினாலே, இது ஒரு நல்ல மரபு. இங்கே வராமலே அறிக்கை விடலாம், பேசலாம். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. பழனிசாமி (குறுக்கீடு) அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம்கூட, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், திரு. ஜி.கே. மணி அவர்கள், மாண்புமிகு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ பேசினார் என்று, வெளியிலே பேசியதை இங்கே கூறினார்கள். ஆகவே, இதுபோன்று வெளியிலே பேசியதை இங்கே பேசுவது மரபா என்று அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக மாண்புமிகு ஜி.கே. மணி அவர்கள் பேசியது, கண்டிப்பாக திரு. கணேசன் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது துரைமுருகன், சில கேள்விகளுக்கு, வெளியிலே அறிக்கைகள் விட்டிருந்தாலும்கூட, சில பொறுப்பான சில பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லவேண்டியது அமைச்சர்களுடைய கடமை. அந்தவகையிலேதான், மாண்புமிகு அண்ணாவி அவர்கள் உடலுழைப்புத் தொழிலாளர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் சம்பந்தமாக திரு. பொன்முடி அறிக்கை விட்டதனால், பொறுப்பாகப் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னார்கள். திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி, தமிழகத்திலே விரிவாக உருவாக்கப்பட்ட பல்வேறு விவரங்களை இங்கே தன்னுடைய நகல் அறிக்கையிலே குறிப்பிட்டார். தன்னுடைய பதிலுரையிலும் குறிப்பிட்டு அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக, எங்களுடைய மாவட்டத்திலும்கூட, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு அமல்படுத்தப்படுகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், ஒவ்வொரு குடிசைக்கும் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால், ரூ.5,000 கட்ட வேண்டுமென்று நகராட்சியிலே வலியுறுத்துகிறார்கள். அப்படிப்பட்ட உத்தரவை அரசு வழங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேறு ஏதாவது ஒரு நேரத்தில் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இதுபோன்ற பிரச்சினைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள். அமைச்சர் பதில் சொல்லி முடித்தவுடன், மறுபடியும் கேட்டீர்கள் என்றால் எப்படி பதில் சொல்வார்? திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் சாலையில் ஐந்து விளக்கு அருகில் தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித்தர வேண்டி, கடந்த 26 ஆம் தேதி தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மேற்கூறிய பாலத்தை கட்டித் தருவதற்கு, அரசிடம் ஏதாவது ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதா? பாலம் கட்டுவது குறித்த, தற்போதைய நிலையை, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம் ராஜு, சொல்லுங்கள்.

***திரு. எச்.எம் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கிராமம் திட்டம் 12,618 ஊராட்சிகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புதுப்புது விவாதங்கள் எல்லாம் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் முடிக்க வேண்டும். இரண்டு மணிக்கு முடிக்கவேண்டியது இருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன். உட்காருங்கள், (குறுக்கீடு) திரு. கருணாகரன் உட்காருங்கள்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. சேகர்பாபு அவர்கள் ஒரு பாலத்தைப் பற்றிக் கேட்டார். அந்தப் பாலம் சம்பந்தமாக ஆர்ப்பாட்டம் 25 ஆம் தேதி, நடைபெற்றதாகக் கூறினார். அந்த ஆர்ப்பாட்டத்தை கோபாலபுரத்தில் நடத்த வேண்டும், இல்லையென்றால் அறிவாலயத்தில்தான் நடத்த வேண்டும். காரணம், இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், மேயராக இருந்த நேரத்திலே, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக ரூ.5.41 கோடிக்கு திட்டம் தீட்டப்பட்டு, அன்று அறிவிக்கப்பட்டது. 2000–லே மீண்டும் அந்தப் பாலத்தின் கட்டுமானப் பணி தேவையில்லை என்று அவர்கள் அறிவுறுத்தி,



அந்தப் பாலத்திற்காக முன்மொழிவு அனுப்பப்பட்டதை மாற்றிவிட்டு, சாலை அமைப்பதற்காக ஆணை பிறப்பித்துவிட்டார்கள்.

அவர்கள் இன்றையதினம் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே சென்னையிலே பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிற நேரத்திலே அந்தப் பாலம் கட்டப்படுவதற்காக ஆயத்தப் பணிகள் மேற்கொண்டிருக்கின்ற நேரத்தில் இங்கே நம்முடைய மாமன்ற உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பகுதியிலேயிருந்து அன்று அந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கண்டன ஆர்ப்பாட்டமானது அந்த நேரத்திலே நடத்துவது தவறானதாகும். இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக இந்த ஆண்டில் நிதியை ஒதுக்கீடு செய்து கட்ட முனைப்போடு செயல்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பாலத்தை அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஸ்டாலின் அவர்கள் இருக்கின்ற நேரத்திலே அறிவிக்கப்பட்ட பாலத்தை வேகப்படுத்தவும், அதைக் கட்ட வேண்டுமென்றும் அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது முழுமையாக தவறானது. அந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு அவர்கள் இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசையும், கார்ப்பரேஷனையும் எதிர்த்து அவர்கள் நடத்த வேண்டியது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அவர்கள் ஆட்சியிலே 10–7–2000 அன்று அந்தப் பாலத்தைக் கட்டுவதற்குண்டான கடித எண் 25791/2000 நாள் 23–10–2000 அன்று அவர்கள் அந்தப் பாலத்தைக் கட்டுவதை மாற்றி சாலைப் பணிக்கு மேற்கொண்டுவிட்டார்கள். ஆகவே, நிறைவேற்றப்பட்ட பாலத்தைக் கட்ட வேண்டுமென்று அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் செய்வது முழுமையான தவறு. அவர்களுக்கு அந்த அருகதை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் சென்னையிலே தேவையான பாலங்களைக் கட்டுவதற்கு உரிய வகையிலே 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில்–அதை அறிந்து கொண்டு அவருடைய காலத்தில் அது அறிவிக்கப்பட்டது என்பதால்–7 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்டு இன்றையதினம் செயல்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு விளம்பரம் தேடிக்கொள்வதற்காக அந்தப் பகுதியிலே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 33 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன் இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை. திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.702,14,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ.666,30,25,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.121,69,23,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 40 – ஊரக வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40, ஊரக வளர்ச்சித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை. திரு. சி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரக வளர்ச்சித் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,936,30,33,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.479,76,39,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 12–55

**(இ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்**

**(ஈ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**(உ) கோரிக்கை எண் 15–நிதித் துறை**

**(ஊ) கோரிக்கை எண் 35–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**(எ) கோரிக்கை எண் 37–பொதுத் துறை**

**(ஏ) கோரிக்கை எண் 48–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

[2005 ஏப்ரல் 8

## (இ) கோரிக்கை எண் 1- மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ரூ.13,13,30,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2676, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வெளியிடப்படும் மாவட்டச் செய்திகள், மாவட்ட அரசிதழ்கள், உயர் அதிகாரிகளின் சுற்றுப்பயண விவரங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3343, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருடத்திற்குக் குறைந்தது 100 நாட்கள் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2005 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4041, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4336, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு ஆண்டில் 150 நாட்கள் சட்டமன்றம் கூடி தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4747, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவல்களுக்கு அப்பாற்பட்டு மக்களின் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு ஏற்ப மாநிலச் சட்டமன்றம் ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 100 நாட்கள் நடைபெறுவதற்கு உரிய சட்ட திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4932, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல்முருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளம் தற்போது நிர்ணயம் செய்துள்ளது, போதிய அளவில் இல்லை. எனவே, மாத வருமானம் கூடுதலாக வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5080, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கீடு செய்து பேசாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்குச் சுதந்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5724, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரையுடன் வழங்கப்படும் மனுக்களுக்கு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் குறிப்பிட்ட 15 தினங்களில் விவரம் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7166, திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7397, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6685, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3197, திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு) வெளியே அனுப்பிவிட்டீர்களா? (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவைக் கூட்டம் வருடத்தில் 100 நாட்கள் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3284, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டப் பேரவை கூடும் நாட்களை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4059, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகச் சட்டமன்றத்தின் நேரத்தைக் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கூட்டி, மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வாய்ப்பு அளிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,13,30,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6606, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் மட்டுமல்லாது வீட்டிற்கு ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3207, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3752, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்தவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5556, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6796, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6006, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப் போராட்டத் தியாகிகளின் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பங்களை உடன் ஆய்வு செய்து, வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3244, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய அரசின் சுதந்திரப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தில் மாநில அரசின் பங்கை சற்று அதிகப்படுத்தித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4109, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாநில அரசு தனது பங்காக வழங்கும் ஓய்வூதியத்தை ரூ.2,000/– ஆக உயர்த்துவதோடு மருத்துவப் படியை ரூ.100/– ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6217, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5460, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3155, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7208, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியத் தொகைகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5900, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களின் குழந்தைகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,831,13,99,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். இதில் ஆளுநர் மற்றும் அமைச்சரவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் எதுவும் சட்டமன்றத்தில் வழக்கமாக வைக்கப்படுவது இல்லை. மாநிலச் சட்டமன்றம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளை அச்சிட்டு வழங்குவதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய கருத்துகளை கேட்டபின் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் தருகிறேன் எனக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆளுக்கு 5 மணித்துளிகள் எடுத்துக்கொண்டால் 2 மணிக்குள்ளே முடித்துவிடலாம்.

**திரு. ஐ. கணேசன்:** 6 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. 15 நிமிடங்களுக்கு மேலே பேச வேண்டும். 6 மானியக் கோரிக்கைகளை படிப்பதற்கே 5 நிமிடங்கள் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளுடைய வரிசையிலும், அவையினுடைய முன்னவரிடத்திலும் பேசியிருக்கிறோம். ஓய்வூதியங்களைப் பற்றி நிறைய பேச வேண்டியிருக்கிற காரணத்தால் உறுப்பினர்கள் பேச விழைகிறார்கள். எனவே, இன்றைக்கு 1-30 மணி வரையில் எவ்வளவு போகிறதோ அவ்வளவு போகட்டும். மிச்சத்தை திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம். மத்தியானம் வைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் நாங்கள் எல்லாம் ஊருக்குப் போவதற்கு இரயில் டிக்கெட் வாங்கிவிட்டோம். (சிரிப்பு) ஆகையால்...

---

@ 175 முதல் 257 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II,III மற்றும் IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைத்தான் 'பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டுவது' என்பார்கள். நீங்கள்தான் சொன்னீர்கள், ஆளுக்கு 5 மணித்துளிகள் பேசி முடித்து விடலாம் என்று சொன்னீர்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் எல்லோரும் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால்தான் அவை முன்னவர் அவர்களிடம் கேட்டேன், அவரும் ஒத்துக்கொண்டார். ஆகையால் பேசட்டும், முடிந்துபோன பிறகு திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யன் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், எனது தலைவர் தளபதி அவர்களுக்கும், தங்களுக்கும் இம்மாமன்றத்தில் மீண்டும் பேசிட வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளை, எதிரிக் கட்சிகளாக பாவிக்காமல், நாங்கள் சொல்லும் கருத்துகளையும், விமர்சனங்களையும் கண்ணியமாகக் கேட்டு, அதற்கு ஆளும் கட்சியினர் கண்ணியமாக பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு தாங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நேரம் முடிந்துவிட்டது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்ணியம் என்பது இரண்டு தரப்பிலும் இருக்க வேண்டும்.

**திரு. பா. பரணிகுமார்:** கண்ணியம் கண்டிப்பாக எங்கள் பக்கம் இருக்கும். நேரம் முடிந்துவிட்டது, உட்காருங்கள் என்று சொல்லாமல், நான் உங்களுக்கு மீண்டும் நன்றி சொல்லி பேச்சை முடிக்கிற வரையிலே எனக்கு அனுமதி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முதலில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்ட ஒரு அறிவிப்புக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், உலகின் மிகப் பெரிய செல்போன் தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றான நோக்கியா நிறுவனத்தின் 10-வது தொழிற்சாலையை இந்தியாவிற்குக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல், அதைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, அதில்



வெற்றியும் கண்டவர் எங்களது மத்திய அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் என்று அறிந்தும், அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர ஒப்புக்கொண்டதற்கு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு சட்டமன்றத்திலே. . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு, தயாநிதி மாறன் தமிழகத்தில் அமைச்சராக இருக்கிறாரா, டெல்லியில் அமைச்சராக இருக்கிறாரா என்பதுகூட தெரியாமல் மறந்த நிலையிலே பேசுகிறார் என்று கருதுகிறேன். அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் (மேசையைத் தட்டும் ஒலி) இங்குதான் அந்த அதிகாரிகளும், தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் அவர்களும் கையெழுத்து போட்டார்கள் என்பதுகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாத அளவிற்கு மயங்கிய நிலையில் இதைக் கூறக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இதை நேற்று மட்டுமல்ல, கடந்த காலத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996-லிருந்து என்னென்ன திட்டங்களை எல்லாம் அம்மா அவர்கள் கொண்டு வந்தார்களோ, Ford தொழிற்சாலை, Hyundai தொழிற்சாலை இப்படியாக எல்லாத் தொழிற்சாலைகளையும் தாங்கள் கொண்டு வந்ததாகச் சொல்வதையே வாடிக்கையாக வைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல. இந்த NOKIA Cell Phone நிர்வாகத்தினர் கடந்த மாதம் 30 ஆம் தேதி அம்மா அவர்களைச் சந்தித்துவிட்டு, உறுதியாக நாங்கள் வருகிறோம், MoU போடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அன்று சொல்லிவிட்டுப் போனார்கள். சொல்லிவிட்டு அவர்கள் ஒப்பந்தத்தைக்கூடப் போட்டுவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். 30 ஆம் தேதி கூட இவர்கள் நினைத்திருந்தால் சொல்லியிருக்கலாம் நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்று. ஆனால் இவ்வளவு நாளும் தூங்கிக்கொண்டிருந்துவிட்டு, நேற்றையதினம்– மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் நேற்றிலிருந்து இந்த வாடிக்கையை அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள்; சுய விளம்பரத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை எல்லாம் நாங்கள் கொண்டு வந்தோம் என்றுகூட அறிக்கையில், தினசரி பத்திரிகையிலே வந்துகொண்டிருக்கிறது. இன்னும் சில Company-களை, வரவிருக்கின்ற Company-களை, மிகப் பெரிய

தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சந்தித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த Company–களைக்கூட நாங்கள்தான் கொண்டுவர இருக்கின்றோம் என்று மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் சொல்வது உண்மையிலேயே வேடிக்கையானது. இதுபோன்ற ஒரு செயல்பாடு முறையான செயல்பாடு இல்லை. இவற்றையெல்லாம் அவர்கள் தவிர்க்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாட்டு முதலீடுகளை முதலில் மத்திய அரசுதான் கொண்டுவர வேண்டும். அதுகூடத் தெரியாமல் நிதி அமைச்சர் அவர்கள் என்னைக் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார். நான் மயக்கத்தில் இருக்கிறேனாம். அல்லது அவர் மயக்கத்தில்....(குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன். I am not yielding. நான்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The Constitution of India is federal in its nature. மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். மாநிலங்கள், ஒவ்வொரு மாநிலமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு, உலகச் சந்தையிலிருந்து முதலீடுகளை இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு செயல்படுகின்றன. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டினுடைய infrastructure–அடிப்படை வசதிகளை அதிகப்படியாக வரலாறு காணாத அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து தந்துகொண்டிருக்கிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் நோக்கி முதலீடுகளை இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலங்களுக்குள் போட்டி இருக்கிறது. ஆந்திரா அழைக்கிறது; கர்நாடகா அழைக்கிறது. தமிழகத்தில் முதலமைச்சர் அழைக்கிறார், அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறார், இங்கு அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். மைய அரசு இதில் முயற்சி எடுக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது ஆதாரமற்ற ஒன்று.

**திரு. பா. பரணிகுமார்:** தயவுசெய்து...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NOKIA நிறுவனத்தினர் கடந்த 2004 டிசம்பர் மாதமே ஒரு புதிய தொழிற்சாலையை Manufacturing Unit–ஐ இந்தியாவில் தொடங்க விரும்புவதாக அறிவித்தார்கள். அதன் பிறகு பல்வேறு மாநில



அரசுகளின் ஆதரவையும், மத்திய அரசின் ஆதரவையும் அவர்கள் கோரினார்கள். அப்போது எந்த மாநிலத்தில் இந்த உற்பத்தித் தொழிற்சாலையைத் தொடங்குவது என்று அவர்கள் இன்னும் முடிவு மேற்கொள்ளவில்லை. நான் 28–1–2005 அன்றே பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, சென்னையில் NOKIA நிறுவனம் தொழிற்சாலையைத் துவங்க எல்லா வாய்ப்புகளும் பிரகாசமாக இருப்பதால் மத்திய அரசிடம் அவர்கள் என்ன உதவிகள் கோரினாலும் அவற்றை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். மத்திய அரசு செய்து கொடுக்கவேண்டிய சில கோரிக்கைகளை NOKIA நிறுவனம் முன்வைத்துள்ளது. அவற்றில் முக்கியமானது Corporate Taxation of vendors located in the Special Economic Zone தொடர்பான ஒரு கோரிக்கை. இதை இன்னும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதைத்தான் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். மைய அரசிடம் NOKIA நிறுவனம் வைத்த கோரிக்கைகளை மைய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான அறிவிப்பை இன்னும் வெளியிடவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசு கொடுத்த ஊக்கம் தமிழ்நாட்டில் இருக்கின்ற வசதிகள், தமிழ்நாட்டின் அதிகாரிகள் கொடுத்த ஒத்துழைப்பு, ஒட்டுமொத்தத்தில் தமிழகத்தில் இருக்கின்ற நல்ல சூழ்நிலை, தொழில் தொடங்குவதற்கான வசதியான கட்டமைப்பு இவற்றை எல்லாம் பார்த்து, இதனால் அவர்கள் பெரிதும் கவரப்பட்டு எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு மிக நன்றாகப் பராமரிக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பார்த்து அவர்களாகவே தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஹரியானா இந்த மூன்று மாநிலங்களில் எங்கே தொடங்குவது என்று தீவிர ஆய்வு மேற்கொண்டு, இறுதியில் இதைத் தொடங்குவதற்கு சிறந்த இடம், உகந்த இடம் சென்னைதான் என்று NOKIA நிறுவனம் முடிவு எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

மைய அரசு, நோக்கியா நிறுவனத்திற்கு செய்து கொடுக்க வேண்டிய சலுகைகள், ஏற்கெனவே நோக்கியா நிறுவனத்தால் கோரிக்கைகளாக வைக்கப்பட்டுள்ளன. மைய அரசு என்னென்ன செய்து கொடுக்க வேண்டும்? Import Duty on Components and Capital goods, இதில் ஒரு சலுகையைக் கேட்டிருக்கின்றார்கள். Corporate Taxation of vendors located in the complex. இதற்கு ஒரு சலுகை கேட்டிருக்கின்றார்கள். Net Foreign Exchange Earning Stipulations-இதற்கும் ஒரு சலுகை

கேட்டிருக்கின்றார்கள். Approval of Product Specific Special Economic Zone-இந்தக் கோரிக்கைகளையெல்லாம் திரு. தயாநிதி மாறன், மத்திய அமைச்சர், மத்திய நிதி அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார், அவ்வளவுதான். நோக்கியா நிறுவனம் மைய அரசிடம் வைத்த கோரிக்கைகளையெல்லாம், தி.மு.க.வின் மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள், மத்திய நிதி அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார். ஆனால், இவற்றுக்கு மத்திய அரசு இன்னும் ஏற்பளிக்கவில்லை. அவர்களுடைய முடிவு என்ன என்று இன்னும் தெரிவிக்கவில்லை. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற தலைசிறந்த வசதிகளைப் பார்த்து, தமிழ்நாடு அரசின் சுமுகமான அணுகுமுறையைப் பார்த்து, நோக்கியா நிறுவனம் பெரிதாகக் கவரப்பட்டு, அவர்களாகவே முடிவு எடுத்து, இங்கே சென்னையில் தங்களுடைய தொழிற்சாலையை நிறுவுவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதற்கான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். இது முழுக்க முழுக்க தமிழ்நாடு அரசின் வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் முரண்பாடாகப் பேசியிருக்கின்றார்கள். நிதி அமைச்சர் மத்திய அரசின் permission தேவையில்லை என்கிறார். முதலமைச்சர் மத்திய அரசின் permission-ஐக் கேட்டிருக்கின்றோம் என்கிறார். (குறுக்கீடு) இருங்கள் நான் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நோக்கியா நிறுவனம் ஒரு குறிப்பிட்ட business model - ஒன்றை அறிவித்திருக்கின்றார்கள். இந்த business model- படிதான் அவர்கள் இந்தத் தொழிற்சாலையை தொடங்கப் போகின்றார்கள். அப்படியானால் அதை Special Economic Zone-ஆக அறிவிக்க வேண்டும். அதாவது—Product Specific Special Economic Zone-ஆக அறிவிக்க வேண்டும். இந்த அதிகாரம் மத்திய அரசிடம்தான் உள்ளது. ஆகவே, தமிழ்நாட்டில் தொடங்க வேண்டுமென்று அவர்கள் முடிவெடுத்து இங்கே ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்ட பின்பும், மத்திய அரசு இந்த -Product Specific Special Economic Zone என்று அறிவித்தால்தான் அது செயல்பட முடியும். இந்தத் தொழிற்சாலை தொடங்க முடியும். ஆகவே, இங்கே தம்பட்டம் அடித்துக்கொள்வதற்கு முன்பாக, மைய அரசிடம் பேசி Product Specific Special Economic Zone-க்கு அனுமதி தரவேண்டுமென்று



கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் அனுமதி பெற்றுத்தர வேண்டும். அது உங்களுடைய கடமை. அந்த அனுமதியை இன்னும் மத்திய அரசு வழங்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் பேசியதற்கும், முதலமைச்சர் பேசியதற்கும் வேறுபாடு இருப்பதாக உறுப்பினரவர்கள் சொன்னார்கள். குறிப்பான வேறுபாடு என்னவென்று சொன்னால், அவர்கள் அதை Federal State என்று சொன்னார். மாநில அரசாங்கம் எதை வேண்டுமானாலும் செய்யலாம். மைய அரசு அதில் குறுக்கிட முடியாது என்கின்ற பொருள் வருகின்ற மாதிரி, (குறுக்கீடு) அப்படித்தான் சொன்னார். Federal State. Federal State. It is not a Federal State. You said so. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதற்காக இந்த விவாதம் என்று புரியவில்லை. நோக்கியா நிறுவனம் இங்கு தமிழ்நாட்டுக்கு வரக் கூடாது என்பது உங்களுடைய விருப்பமா? அதுதான் உங்களுடைய வாதமா? இப்போது சாதாரண ரீதியாக, வழக்கமான ரீதியாக தொழிற்சாலையைத் தொடங்குவதாக இருந்தால், நோக்கியா நிறுவனம் நேராக இங்கே வரலாம். அவர்களுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. ஆனால், அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற business model—Special Economic Zone இதில்தான் செய்ய முடியும். ஆகவே Product Specific Special Economic Zone என்றால் அந்த அறிவிப்பை வழங்குகின்ற அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கின்றது. ஆகவே, மத்திய அரசாங்கம் முன்வந்து அந்த clearance-ஐ, அனுமதியை வழங்க வேண்டும். அதை இன்னும் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு முன்பாக ஒரே ஒரு விஷயம். நிதி அமைச்சர் அவரைப் பார்த்து ஏய் என்கிறார். என்ன இது? என்ன இது நாகரிகம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிடுசிடுவென்று பேசுகின்ற திரு. எஸ்.ஆர்.பி. நான் சொல்லாததை சொன்னதாகச் சொல்கின்றார். ஏய் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) ஏய் என்று நான் சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவரும் உறுப்பினர், நானும் உறுப்பினர் இங்கே. அவர் ஒரு உறுப்பினரைப் பார்த்து ஏய் என்று சொல்லலாமா? எப்படிச் சொல்லலாம்? ஏய் என்று எப்படிச் சொல்லலாம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஏய் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏய் என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் நிதானமிழந்து, குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது அவருக்கு வழக்கமாக இருக்கின்றது. ஏற்கெனவே ஒரு முறை இந்த அவையில் ஒலிபெருக்கிகளையெல்லாம் காவல் துறையினர் இயக்குகின்றார்கள் என்று சொல்லி, அவர்மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்பட்டு, அவர் எழுத்து மூலமாக மன்னிப்பு கோரியதால் அந்த உரிமை மீறல் பிரச்சினை இப்போது கைவிடப்பட்டுவிட்டது. அதைப்போலவே இன்றைக்கு ஒரு அபாண்டமான பழியை நம்முடைய நிதி அமைச்சர் மீது சுமத்துகிறார். நமது நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் மென்மையானவர்; கண்ணியமானவர்; யாரையும் பார்த்து அப்படியெல்லாம் பேசுகின்ற வழக்கம் அவருக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு உங்கள்மீது தனிப்பட்ட முறையிலே உங்கள்மீது ரொம்ப மரியாதை உள்ளவர்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையிலே எப்படியிருந்தாலும் எனக்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய வாயிலிருந்து அப்படியெல்லாம் வார்த்தைகள் வராது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டப் பேரவை உறுப்பினர் எழுந்து நின்று பேசும்போது, ஏய் என்று சொல்வது முறைதானா? நாகரிகம்தானா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் காது கேட்கும் கருவி ஒன்றை காதுக்குப் போட்டுக்கொண்டால் அவருக்கு என்ன பேசினேன்



என்பது கேட்கும். அவர் எப்போது பார்த்தாலும், சிடுசிடு என்று பேசுவது, முறைத்துக்கொண்டு பேசுவது, அடிப்பதுபோல் பேசுவது என்பது அவருக்குரித்தான ஒன்று, எனக்குரித்தான ஒன்று அல்ல. அப்படி நான் பேசவில்லை என்று சொல்லிவிட்ட பிறகும் பிடிவாதமாக முரட்டுத்தனமாக இப்படிப் பேசுவது அவர் தகுதிக்கு ஏற்றதல்ல. ஏன் சிடுசிடு என்று பேசுகிறீர்கள்? ஏன் முகத்தை சிடுசிடு என்று வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்? முறைத்துக்கொண்டு ஏன் பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஒன்றும் முறைத்துக்கொண்டும் பேசவில்லை, சிடுசிடுத்தும் பேசவில்லை. அவர் நான் எழுந்தபோது இது Federal State எந்த மாநிலம் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று அவர் சொன்னார். அதை மட்டும்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஏய் என்று சொல்லிவிட்டு (குறுக்கீடு) ஏதாவது ஒரு வார்த்தையைச் சொன்னால், அதை உண்மைதான் என்று ஏற்றுக்கொள்கிற துணிச்சல் வேண்டும். அதோடு இல்லை, அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வார்த்தை சொன்னால் அதை ஏற்றுக்கொள்கின்ற துணிச்சல் வேண்டும் என்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே உபதேசம் செய்கிறார். அவர்தான் சொன்னார், இங்கே எல்லோரும் சாட்சிகள், நானும் சாட்சி. இங்கே ஒலிபெருக்கிகளை காவல் துறையினர் இயக்குகிறார்கள். அதனால்தான் எனக்கு ஒலிபெருக்கி வரவில்லை என்று சொன்னாரே, அதை நான்தான் சொன்னேன் என்று உரிமை மீறல் குழுவிற்கு முன்னால் ஏன் அவர் தைரியமாக ஒப்புக்கொள்ளவில்லை? ஏன் மன்னிப்புக் கேட்டார்? மன்னிப்புக் கேட்டதால்தான் அந்த உரிமைமீறல் பிரச்சினை கைவிடப்பட்டது. தைரியம் இருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** படித்துப் பார்க்காமல் பேசுகிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. நான் என்ன பொருளிலே குறிப்பிட்டேன் என்றுதான் சொன்னேன். நான் சொன்ன பொருள், பலர் முன்பே பேசியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே உமாநாத் இந்த அவையிலே பேசியிருக்கிறார்; எனக்கு முன்னாலே என்.எஸ்.வி. சித்தன் இந்த அவையிலே பேசியிருக்கிறார்; எனக்கு முன்னாலே பாலகிருஷ்ணன் இந்த அவையிலே பேசியிருக்கிறார்; எனக்கு முன்னாலே ஞானசேகரன் இந்த அவையிலே பேசியிருக்கிறார்; அத்தனைபேரும் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் பேசியது நிறைகுடம் போலப் பேசினார்கள். திரு. எஸ்.ஆர்.பி. பேசியது அரை வேக்காடாய், குறைகுடம் போலப் பேசினார். அதற்காகத்தான் மன்னிப்புக் கேட்டார்; வருத்தம் தெரிவித்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, விவாதம் நோக்கியாவை விட்டு எங்கேயோ போய்விட்டது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவாதம் எல்லாம் மாறி எங்கேயோ போய், அவை முன்னவர் அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அது முறையல்ல. அவை முன்னவர் பேசுகின்ற முறை ஏற்றுக்கொள்ளத்தக்க முறையல்ல. இதைப்போன்று தேவையில்லாத வார்த்தைகளையெல்லாம்கூட அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொண்டு மற்றவர்களை இன்று பழி வாங்குவதைப் போல, மற்றவர்களை இழிவு படுத்துவதைப் போலப் பேசுவதை நிச்சயமாக நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கியா நிறுவனம் தமிழ்நாட்டிற்கு வருவதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இதில் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எந்தக் கட்சிக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. மத்தியில் அமைச்சராக இருக்கக்கூடிய தயாநிதி மாறன் அவர்கள் அந்த நோக்கியா நிறுவனத்தோடு பல மாதங்களாகப் பேசி வருகிறார். ஒரு வேண்டுகோளும் வைத்தார்; நீங்கள் உங்களுடைய நிறுவனத்தை இந்தியாவில் கொண்டுவருவதாக இருந்தால், தமிழ்நாட்டிற்குக் கொண்டுவாருங்கள் என்று ஒரு வேண்டுகோள்



வைத்தார். அந்த வேண்டுகோள் வைத்து அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். என்னதான் மத்திய அரசாங்கம் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்தாலும்கூட, இடத்தைக் கொடுக்க வேண்டியது மாநில அரசு; மின்சாரம் கொடுக்க வேண்டியது மாநில அரசு. எனவே, அவரும் முயற்சி செய்தார்; முதலமைச்சர் அவர்களும் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை வரக் கூடாது என்று நினைக்கிறார்களா என்று கேட்டார்கள். Special Ecnomic Zone பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக தி.மு.க. அமைச்சர்கள் அதற்காக மத்திய அரசாங்கத்திடம் போராடி, நோக்கியா நிறுவனம் வருவதற்கு தயாநிதி மாறன் நூற்றுக்கு நூறு முயற்சி எடுத்துக்கொள்வார் என்ற வாக்குறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதுவரைக்கும் அது இன்னும் வரவில்லையென்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அமைச்சரிடம் கேளுங்கள், நீங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** முக்கியமானது. செய்வாய்க்கிழமை 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை குறித்த, நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம், அதுவும் ஆய்வு செய்தலும் ஒரே நேரத்திலே வருகிறது. அதனால் நம் நிதி அமைச்சரிடம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் இதைப் போட்டிருக்கிறீர்கள். அதனாலே திங்கட்கிழமை இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் கடைசி நேரத்திலே வைக்காமல் Comptroller and Auditor General Report–ஐயும் திங்கட்கிழமை வைக்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் செவ்வாய்க்கிழமை, 12 ஆம் தேதி பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. பரணிகுமார் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் நூற்றுக்கு நூறு நோக்கியா நிறுவனத்தைக் கொண்டு வந்தார் என்று சொன்னார்கள்; ஆனால், நோக்கியா நிறுவனத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தவர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 30 ஆம் தேதி ஏற்கெனவே அம்மாவை சந்தித்துவிட்டு ஒப்பந்தமும் இப்பொழுது கையெழுத்தாகிவிட்டது. அம்மா அவர்கள் இப்போது சொன்னது அவர்கள் S.E.Z. approval கொடுத்தால் மட்டும் போதுமானது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, முழுக்க, முழுக்க நோக்கியா நிறுவனம் தமிழ்நாட்டிற்கு வந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இப்போது பேசுகின்றபோது 4, 5 மாதங்களாக திரு. தயாநிதி மாறன் நோக்கியா நிறுவனத்துடன் பேசி, அவர்களுடைய நிறுவனத்தை புதிய தொழிற்சாலையை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அவர்கள் இந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்க முடிவு செய்தார்கள் என்று தெரிவித்தார். அது உண்மை அல்ல. 4, 5 மாதங்களாக திரு. தயாநிதி மாறன் அவர்களோடு பேசி இருக்கலாம். ஆனால், அதனால் அவர்கள் எந்த முடிவுக்கும் வரவில்லை. இந்த ஒப்பந்தம் கையெழுத்து போடுவதற்கு சில நாட்கள், ஒரு வார காலத்திற்கு முன்பு அந்த நோக்கியா நிறுவனத்தினர் வந்து இங்கே என்னைச் சந்தித்தார்கள். அப்போதுகூட அவர்கள் நாங்கள் இன்னும் மகாராஷ்டிராவில் தொடங்குவதா, ஹரியானாவில் தொடங்குவதா, இல்லை தமிழ்நாட்டில் தொடங்குவதா என்று இன்னும் முடிவு செய்யவில்லை என்றுதான், ஒப்பந்தம் கையெழுத்து போடுவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பு அவர்களாகவே வந்து இங்கு நேரில் என்னிடம் தெரிவித்தார்கள். அப்போது அவர்கள் சில சலுகைகளை எல்லாம் கேட்டார்கள். இந்தச் சலுகைகளை எல்லாம் உங்களால் செய்து கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். செய்து கொடுக்க முடியும் என்று சொன்னேன். அதன் பிறகு Finland-ல் அவர்களுடைய தலைமையிடம் அவர்கள் பேசி இந்தச் சலுகைகளை எல்லாம் தமிழ்நாடு அரசு செய்து கொடுக்க முன்வந்துள்ளது என்று சொன்ன பிறகு Finland-லேயிருந்து, அவர்களுடைய தலைமையிடத்திலிருந்து அவர்களுக்கு clearance வழங்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அதன் பிறகுதான் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதாக அவர்கள் முடிவு செய்தார்கள். இங்கே தெரிவித்தார்கள். ஆகவே, முழுக்க முழுக்க இது தமிழ்நாடு அரசின் சாதனை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்று சொல்லும்போது இரண்டு விதமாகக் கொள்ளவேண்டும். ஒன்று physical connectivity. இரண்டாவது electronic connectivity. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு தலைசிறந்த மாநிலமாக இரண்டிலும் விளங்குவதன் (மேசையைத் தட்டும் ஒலி) காரணமாக, இன்றைக்கு பன்னாட்டு முதலீடுகளுக்கு தமிழ்நாடு உகந்த மாநிலம் என்ற பெருமை பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட ஒரு கேள்வியைக் கேட்டார்கள். மைய அரசினுடைய உதவியோடுதான் இங்கே முதலீடு வரவேண்டுமா என்றால் இல்லை. இப்போதுகூட தகவல் தொழில்நுட்பத் துறையில் Philips, Accentor, iGate, KLA-Tencor, Kanby Software, Syntel, GECIS, Virtusa, Siemens, Alcatel, 24/7 Customer Car, World Bank Back Office, ABN Amro Bank - இதெல்லாம் எப்படி வந்தது? அம்மா எடுத்த பெருமுயற்சியின் காரணமாக நம்முடைய தமிழ்நாட்டிற்கு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களால் பட்டியலிட்டுக் காண்பிக்க முடியும், எந்த அளவுக்கு 1991-1996-லே தொழில் வளர்ச்சி இருந்தது. இந்த 4 ஆண்டு காலத்திலே எந்த அளவுக்கு தொழில் வளர்ச்சி இருக்கின்றது என்று. ஆனால், உங்களாலே சொல்ல முடியுமா? அன்றைக்கு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் இருந்தார். எந்தத் தொழிற்சாலையை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள்? இன்றைக்கு தகவல் தொழில்நுட்பத் துறையிலே அமைச்சர் தயாநிதி மாறன் இருக்கிறார். எந்தத் தொழிற்சாலையைக் கொண்டு வந்தார்கள்? ஒரு தொழிற்சாலை கொண்டு வருவதற்குக்கூட உங்களுக்கு அந்தத் திறமை இல்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. பரிதி இளம்வழுதி:** நாங்குநேரியில் கொண்டு வந்தாரா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொண்டுவந்த திட்டங்கள் எல்லாம் viable இல்லாமல் ஒரு விளம்பரத்திற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டங்கள். அது viable இல்லாத திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அவர் பேசட்டும், பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நாங்குநேரியைப் பற்றிச் பேசினார்கள். நாங்குநேரி தொழிற் பூங்கா 24–12–1998 ஆம் ஆண்டு அவர்கள் காலத்தில் ஒப்பந்தம் மட்டுமே போடப்பட்டதே தவிர, அதற்குப் பிறகு வந்த எல்லாத் தொடர் நடவடிக்கைகளும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அனைத்து திட்டங்களையுமே கொண்டு வந்தார்கள். 9–10–2001–ல், ஏற்கெனவே இந்தச் சபையிலே நான் தெரிவித்திருக்கிறேன்.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகுதான் 9–10–2001–ல் 1,567 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டது. 6–2–2002 அன்று தாமிரபரணி ஆற்றிலிருந்து 6.77 மில்லியன் காலன் தண்ணீர் அனுமதி கொடுக்கப்பட்டதும் அம்மாவினுடைய ஆட்சியிலேதான். 5–5–2003 அன்றே இதற்காக தமிழ்நாடு அரசு சிறப்புப் பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டது புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டரை ஆண்டுகாலமாக இன்னும் தொழில்முனைவோர்கள், எந்தவிதமான தொழில் முதலீடுகளையும் இதுவரையிலும் அவர்கள் எட்ட முடியவில்லை. காரணம், எது எதெல்லாமோ காரணமாகச் சொல்லப்பட்டது. இதையெல்லாம் தொடர்ந்து, விரைந்து நடவடிக்கை எடுப்பதற்காக 29–11–2002, 18–12–2002, 14–1–2003, 25–3–2003, 11–4–2003, 19–5–2003 ஆகிய தேதிகளில் அவர்களுக்கு மின் அஞ்சல் அனுப்பப்பட்டது. இதுவரையிலும் அவர்கள் இந்தத் தேதிவரையிலும் எந்தவிதமான பதிலும் அந்தத் தொழில்முனைவோர்களிடமிருந்து வரவில்லை. 10–7–2003–ல் நேரில் விளக்கம் அளிக்க அவர்களை அழைத்தும் இதுவரையிலும் வரவில்லை. 27–1–2004 ஒரு Show Cause Notice விடப்பட்டது. நீங்கள் இனிமேலும் வரவில்லையென்று சொன்னால் உங்களுடைய, நீங்கள் வரையறுத்தத் திட்டம் நிச்சயமாக அது கேள்விக் குறியாகிவிடும் என்பதற்காக ஒரு Notice அனுப்பப்பட்டது. ஆனால், செப்டம்பர் 2004, அதுவரைக்கும் அவர்களுக்கு மீண்டும் ஒரு அவகாசம் கொடுக்கப்பட்டது.



அதுவரைக்கும் அந்தத் தொழில்முனைவோர்கள் வரவில்லை. இவ்வளவு, தொடர்ந்து அந்த நடவடிக்கைகள் எடுத்த பிறகும்கூட, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கிற மத்திய அரசாங்கம், இன்றைக்கு கொண்டுவந்தோம், கொண்டுவந்தோம் என்று சொல்கிறார்கள். 13–8–2004–ல் ஒரு Notice–ஐ அனுப்பி இந்தத் திட்டத்திற்கு மாநில அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் கொடுத்திருந்தும் தமிழகத்தினுடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. இருந்தாலும் நீங்கள் இந்தத் திட்டத்தை இனிமேல் ஏன் இரத்து செய்யக்கூடாது என்று மத்திய அரசாங்கம் இப்பொழுதுகூட Notice அனுப்பியிருக்கிறது. நீங்கள், தி.மு.க.–காரர்கள் தயவுசெய்து அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, தொடர்ந்து இதற்கு இன்றும் அம்மா அவர்கள் நாட்டிலே தொழில் வரவேண்டும், வேலைவாய்ப்பின்மை குறைய வேண்டும் என்பதைக் கருத்திலேகொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து இன்னும் கால அவகாசம் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பரணிகுமார் பேசி முடித்துவிடட்டுமா? (குறுக்கீடு) இல்லை, பேச ஆரம்பித்துவிட்டார் அல்லவா? அவர் பேசி முடித்துவிடட்டும் என்கிறேன். (குறுக்கீடுகள்) பேசி முடித்துவிடட்டும். பேச ஆரம்பித்துவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) பேசி முடித்துவிடட்டும். திரு. பரணிகுமார் பேசி முடித்துவிடுங்கள். பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) ஆரம்பித்துவிட்டார் அல்லவா, பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. பா. பரணிகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும் திரு. புகழேந்தி. திரு. புகழேந்தி, அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நாங்குநேரி உயர் தொழில்நுட்ப தொழிற்பூங்காவைப் பற்றிக்

கூறப்பட்டது. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு சொன்னார்களே, Special Economic Zone என்று. அந்த Special Economic Zone என்பதை அந்த நாங்குநேரி பகுதிக்காக மாண்புமிகு மறைந்த மத்திய அமைச்சர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் அன்றைக்கே அந்தப் பகுதிக்கு அறிவித்தார்கள். அப்படி அறிவித்ததற்குப் பிறகு அதிலே சுமார் 2,000 ஏக்கருக்கு மேல் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய கருத்தினுடைய தொடர்ச்சிதானே? திரு. பரணிகுமார் பேசுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அரை மணி நேரம் எனக்கு ஒதுக்கித் தரவேண்டும். அப்படி இல்லையென்றால் திங்கட்கிழமை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒன்றுமில்லை. அது உங்களுடையது. நான் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எல்லோருக்கும் 15 மணித்துளிகள்தான். திரு. துரைமுருகன் கேட்டுக்கொண்டதனால், 5 மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** நாங்கள் பிரதான எதிர்க்கட்சிங்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரதான எதிர்க்கட்சிகளுக்கு 15 மணித்துளிகள். உங்களுக்கு, காங்கிரஸ் கட்சிக்கு எல்லாம் 15 மணித்துளிகள்.

**திரு. பா. பரணிகுமார்:** 5 மானியக் கோரிக்கைகள் இருக்குங்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். 15 மணித்துளிகளுக்குள்ளேதான் பேச வேண்டும். இப்போது 5 நிமிடம் முடிந்துவிட்டது. 10 நிமிடங்களிலே பேசி முடிப்பதாக இருந்தால் முடியுங்கள். இல்லையென்றால் உங்களுடைய பேச்சு நிறைவுபெற்றது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கூறும்போது, அங்கு அந்த நோக்கியா கம்பெனி நிர்வாகிகள் வந்து...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**திரு. பா. பரணிகுமார்:** இல்லை, இல்லை ஒரேயொரு point. அவர்கள் எல்லோரும் வந்து நான்கு மாநிலங்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** இருங்கள். இவ்வளவு நேரம் நீங்கள் சொன்னீர்கள், நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், வேறு கருத்துக்கு நீங்கள் போவதாக இருந்தால், போங்கள், இல்லையென்றால் உங்கள் பேச்சு இத்தோடு நிறைவுபெற்றது.

**திரு. பா. பரணிகுமார்:** ஏன், நீங்கள் சொன்னதற்கு நாங்கள் பதில் சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** நீங்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? இதுதான், கண்ணியமாகத்தான் பேசுகிறேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் அல்ல. பேரவைத் தலைவருடைய விவாதம் அல்ல,

**திரு. பா. பரணிகுமார்:** கண்ணியமாகத்தான் பேசுகின்றேன், நான். கண்ணியமாகப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

பிற்பகல் 1–40

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு நோக்கியா கம்பெனியில் உள்ள நிர்வாகிகள் எல்லாம் பேசும்போது அவர்கள் கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களை நான் குறிப்பிடவேயில்லை. மகாராஷ்டிரா, ஹரியானா, தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்களுக்குள்தான் போட்டி. அவர்கள் தமிழ்நாடு என்று தேர்ந்தெடுத்தார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பா. பரணிகுமார்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு கருத்திற்கு நீங்கள் போவதாக இருந்தால் போங்கள், இல்லையென்றால் பேச்சை இத்துடன் முடியுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** அடுத்து, தமிழ்நாடு சட்ட சபை பாரம்பரியமிக்கது. ஓமந்தூரார், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், எம்.ஜி.ஆர். வரை இந்த மன்றத்தின் பெருமையைக் காப்பாற்றி இவர்களெல்லாம் தலைமையேற்று நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தும், படித்தும் இருக்கின்றோம். கண்ணியத்தோடு ஜனநாயக முறையில் மரபுகள் மீறாமல் நடைபெற்றிருக்கின்றன. உதாரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தாங்கள் பேசியது முழுக்க முழுக்க தவறு. அவர்கள் இருக்கிறபோது கண்ணியமாக நடந்தது என்று சொன்னால், அதற்குப் பிறகு கண்ணியக் குறைவாக நடைபெற்றது என்கிற பொருளிலே சொல்வது முறையற்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாள் அவர்களுடைய தலைவர் திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது இதே அவையில் என்னென்ன கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன, நான் எப்படி அவமானப்படுத்தப்பட்டேன் என்பதை இன்னும் இந்த நாடு மறந்துவிடவில்லை. எவ்வளவு கண்ணியக் குறைவாக அன்றைக்கு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்டார்கள் என்பதை அனைவரும் நினைவில் வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதைப்பற்றி அப்போதிருந்த (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பற்றி திரு. பரணி பேசுகிறார். அவர்கள் பேசுவதற்குத் தகுதியில்லை. 2–12–1972–ல் இதே சட்டப் பேரவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீது செருப்புகளையே வீசிய பெருமை, உங்களுடைய அவல நடவடிக்கையை இந்த அவை அறியும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நாடு அறியும். நீங்கள் அந்த கண்ணியத்தைப் பற்றிப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். 1972 டிசம்பர் 2 ஆம் தேதி என்ன நடைபெற்றது என்பதை நானே நேரடியாக இருந்து பார்த்தவன். நானே சாட்சி. 1989 மார்ச் 25 ஆம் தேதி என்ன நடந்தது என்பதற்கு எஸ்.ஆர்.பி. அவர்களே நேரடியான சாட்சி. அவர் துக்ளக் பத்திரிகைக்கு இது தொடர்பாக விரிவான பேட்டியேகூட வழங்கியிருக்கிறார். அவர்கள் விரும்பினால் நான்கூட அந்த பேட்டியையே எடுத்துக்கொண்டு வந்து வாசித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். என்ன நடந்தது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, தயவுசெய்து, நீங்கள் முறையாக வேறு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். திரு. பரணிகுமார், வேறு ஏதாவது பேசுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பா. பரணிகுமார்:** உதாரணத்திற்கு, தலைவர் கலைஞர் ஆட்சியில் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபோது சட்டமன்றம் எப்படி நடைபெற்றது என்று அன்றே தினமணி ஏட்டில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மானியக் கோரிக்கைகள்மீது பேசுவது நல்லது. தி.மு.க.விற்கும் இந்தப் பேரவையின் கண்ணியத்தைக் காப்பதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அவையின் கண்ணியத்தை தி.மு.க. எவ்வாறு காத்தது என்பதைப் பற்றி பேசாமல் இருப்பதே நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 8

**திரு. பா. பரணிகுமார்:** சான்றுதான் இப்போது நான் சொல்கிறேன். சட்டமன்றம் நடைபெறும்போது அது பற்றி தினமணி ஏட்டிலே ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் இப்போது தங்களுக்குப் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதெல்லாம் என்னிடம் காட்டாமல் இப்படிப் படிக்கக் கூடாது. முறைகேடானது. (குறுக்கீடுகள்) இல்லை. இதே மாதிரிதான் நீங்கள் பேச வேண்டுமென்றால் உங்களுக்குப் பேசுவதற்கான நேரம் முடிந்துவிட்டது. அனுமதி மறுக்கப்படுகிறது. உட்காருங்கள். Question Hour திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா திரு. துரைமுருகன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், கேள்வி நேரம் திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா? (குறுக்கீடுகள்) வைத்துக்கொள்ளலாமா? (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசியது முறைகேடானது. இந்த மாதிரி பேச்சுக்களைப் பேசுவதற்கு இங்கே அனுமதிக்க முடியாது. திரு. பரணிகுமாருடைய பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் திங்கட்கிழமை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (11-4-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

108. 28-1-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கை எண். II (2)/ ஆர்.யு. எல்/120 (a-3) / 2004-க்கு திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி (C1) துறையின் 15-10-2004 ஆம் நாளிட்ட 161 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 ஏப்ரல் 8]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

208. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

209. மானியக் கோரிக்கை எண் 15 – நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

210. மானியக் கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

211. மானியக் கோரிக்கை எண் 37 – பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

212. மானியக் கோரிக்கை எண் 37 – தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

213. மானியக் கோரிக்கை எண் 48 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

214. மதிப்பீட்டுக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2003–2005)

215. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2005)

216. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஆறாவது அறிக்கை. (2003–2005)

217. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஏழாவது அறிக்கை. (2003–2005)

218. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து எட்டாவது அறிக்கை. (2003–2005)

219. திட/திரவக் கழிவு மேலாண்மை சிறப்பு சிற்றூராட்சிகள் என்கிற சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

[2005 ஏப்ரல் 8

3. நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் வருமாறு.

**கருவூலக் கணக்குத் துறை**

4. கருவூலக் கணக்குத் துறை 01-04-1962ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின்கீழ் 9 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 30 மாவட்டக் கருவூலங்கள், 203 சார் கருவூலங்கள், 3 வட்டார இணை இயக்குநர் அலுவலகங்கள், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை ஆணையாளரின் தலைமையிட அலுவலகம் ஆகியவை உள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு சம்பளங்களும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகைகளை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். அரசுக்குச் சேரவேண்டிய தொகைகளைப் பெற்று அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். பத்திரப் பதிவுக்கு பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள் முறையாக வழங்கப்படுவதையும் கருவூலக் கணக்குத் துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நல நிதியை கருவூலக் கணக்குத் துறை பராமரிக்கிறது. அரசுத் துறைகள் கருவூலங்களில் வைப்பீடு செய்யும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களை கருவூலங்கள் பத்திரமாகப் பாதுகாக்கின்றன.

5. நிதி குறித்த அறிக்கைகளை அளித்தல், செலவுப் பொறுப்பு மற்றும் சேவைப் பணிகளை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் கருவூலக் கணக்குத் துறை நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. நவீனமயமாக்கலை செயல்படுத்த வங்கி வசதியில்லாத துணை கருவூலங்கள் (Non/Banking Sub Treasuries), வங்கி வசதியுடன்கூடிய துணைக் கருவூலங்களாக (Banking Sub Treasuries) மாற்றப்பட்டுள்ளன. இரண்டு துணைக் கருவூலங்கள் மட்டுமே அருகாமையில் ரூபாய் நோட்டிற்கான பேழை வசதியை (Currency Chest) கொண்ட வங்கிகள் இல்லாததால் இரண்டு துணைக் கருவூலங்கள் வங்கி வசதியில்லாத துணைக் கருவூலங்களாக தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ்விரு சார் கருவூலங்களையும் (தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் மற்றும்



2005 ஏப்ரல் 8 ]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஆகிய இடங்களில்) வங்கி வசதியுடன்கூடிய துணைக் கருவூலங்களாக விரைவில் மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

6. 2003-2004 ஆம் ஆண்டில் சென்னை மற்றும் மதுரை மாநகரங்களிலுள்ள அரசுப் பணியாளர்களுக்கு சம்பளங்கள் வழங்குவதற்கும், முன்னர் சென்னை மாநகரிலுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்குவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட மின்னணுமூலம் வங்கிகளுக்கு பணம் அனுப்பும் முறை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதால், இதை ஏனைய மாவட்ட கருவூலங்களுக்கும் நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும், மாவட்ட கருவூலங்களிலும் நடைமுறையிலிருக்கும் காசோலை மூலம் தொகை வழங்கும் ஏற்பாட்டை மாநிலத்திலுள்ள அனைத்து துணை கருவூலங்களுக்கும் நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. நடைமுறைகளை எளிமையாக்கும் ஒரு பகுதியாக சம்பளத்திற்கு என்று ஒன்றும் சம்பளம் சாரா இனங்களுக்கென மற்றொன்றுமாக பொதுவான பட்டியல் படிவங்களை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாநில கணக்குத் துறைத் தலைவரின் முறையான ஒப்புதல் பெறப்படும்.

9. மொத்தம் ரூ.15 கோடி நிதியொதுக்கத்தில் 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி மூன்றாண்டு கால அளவில் செயல்படுத்தப்படக்கூடிய மின்னாளுகை சிறப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்த இத்துறை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்துறையில் மின் ஆளுகை முயற்சிகளை செயல்படுத்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கருவூல கணக்குத் துறையை சேர்ந்த அலுவலர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழு, தொழில்நுட்ப வணிக ரீதியிலான செயல்குறிப்புகளை தயாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்டு, செயற்குறிப்பு ஆய்வு செய்த பிறகு, கருவூல ஏற்பாட்டு முறையை நவீனப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மின் ஆளுகை திட்டம் செயல்படுத்தப்படும். தேனி மற்றும் கரூர் மாவட்ட கருவூலங்களில் மின் ஆளுகை குறித்த முன்னோடித் திட்டம் சோதனை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 8

**உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை**

10. மாநிலத்திலுள்ள நகர்ப்பகுதி மற்றும் ஊரகப் பகுதி உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர பல்வகை நிறுவனங்களின் கணக்குகளை அவற்றிற்குரிய சட்ட விதிகளின்கீழ் சட்டபூர்வத் தணிக்கை செய்யும் பொறுப்பு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

11. பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:—

| தொடர் எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 6 |
| 2 | (அ) நகராட்சிகள் | 102 |
| | (ஆ) 3 ஆம் நிலை நகராட்சிகளாக தற்போது நிலை உயர்த்தப்பட்டுள்ள பேருராட்சிகள் | 49 |
| 3 | சிறப்பு கிராம ஊராட்சிகள் | 562 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 29 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6 | பல்கலைக்கழகங்கள் | 16 |
| 7 | உள்ளூர் நூலக ஆணைக் குழு | 29 |
| 8 | மாவட்ட விற்பனைக் குழு | 20 |
| 9 | பல்வகை நிறுவனங்கள் | 9 |
| 10 | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 |
| 11 | உள்ளூர் திட்ட அதிகார மன்றங்கள் | 20 |
| 12 | கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்) | 1260 |

12. சென்ற ஆண்டில், இத்துறை மேற்சொன்ன நிறுவனங்களின் மொத்தம் ரூ. 8,605.63 கோடி மதிப்பிலான நிதிப் பற்று வரவுக் கணக்குகளை தணிக்கை செய்தது.



2005 ஏப்ரல் 8]

**ஊராட்சி ஒன்றியங்களில் உடன் தணிக்கை ஏற்பாடு**

13. அரசு 2000–2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடன் தணிக்கை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 119 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒரு ஆய்வாளர், ஒரு துணை ஆய்வாளர்/ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

14. உடன் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக, உடனுக்குடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் தணிக்கைக் குழு மூலம் தெரிவிக்கப்படுகிறது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் சரிசெய்யப்பட்ட பின்னர், தணிக்கைக்குரிய பதில்கள், சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு, தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு, அவை தொடர்பான தணிக்கை மறுப்புகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகள் வரப்பெற்றவுடன், சரிபார்க்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியத்தால் தீர்வு செய்யப்படாமல் நிலுவையிலுள்ள தணிக்கைச் சீட்டு பத்திகளையும் சேர்த்து, தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. 28–02–2005 ஆம் நாள் நிலவரப்படி, 2003–2004 ஆம் ஆண்டு வரையிலான 385 ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகள் தணிக்கை செய்து முடிக்கப்பட்டு விட்டன. 2004–2005 ஆம் ஆண்டுக்கான தணிக்கைப் பணி நடைபெற்று வருகிறது.

15. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், பதினோராம் நிதிக் குழு பரிந்துரைத்தவாறு புதிய கணக்குப் படிவம் ஒன்று ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக இந்திய தணிக்கைத் துறை தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டு, அதற்கேற்ற மென்பொருள் (Software) ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய கணக்குப் படிவத்தில் கணினியை பயன்படுத்திக் கணக்குகளைப் பராமரிக்க பணியாளர்களுக்கான பயிற்சி ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 8

## நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சேர்ந்துவரும் அடிப்படையிலான (accrual based) கணக்கு வைப்பு முறையைச் செயற்படுத்தல்

16. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்பட்டு வருகின்ற ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் சீரமைக்கும் ஒரு நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு, 1999–2000, 2000–2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து, சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையை இரு கட்டங்களாகச் செயற்படுத்தியுள்ளது. அனைத்து முன்னாள் பேரூராட்சிகளிலும் (தற்போதைய சிறப்பு கிராம ஊராட்சிகள்) 2002–2003 ஆம் ஆண்டு முதல் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை செயல்படுத்தப்பட்டது.

17. ஓர் ஆண்டின் நிதிசார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income & Expenditure Accounts) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) தயாரிக்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்புமுறைக் கோட்பாட்டில் இந்தக் கணக்கு வைப்பு முறையை அமைப்பதே நோக்கமாகும்.

18. இந்த நடைமுறையினால், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள், சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் மேம்படுத்தப்பட்ட கணக்கு வைப்பு முறைகளை செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் இதனால் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

19. உள்ளாட்சி நிறுவனங்களில் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையின் நாடுதழுவிய வெற்றிகரமான செயலாக்கம் இந்திய தணிக்கைத் துறைத் தலைவர்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, இதன் சிறப்பு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக பணிக் குழு ஒன்று



2005 ஏப்ரல் 8 ]

ஏற்படுத்தப்பட்டது. விரிவான ஆய்விற்குப் பின்னர் அக்குழு இந்தக் கணக்கு வைப்பு முறையை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலுமுள்ள நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் அனைத்திலும் செயல்படுத்தப் பரிந்துரைத்துள்ளது. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் இதனை ஏற்றுக்கொண்டு, ஏனைய மாநிலங்களிலும் இனிவரும் நிதியாண்டிலிருந்து இந்தக் கணக்கு வைப்பு முறையைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார். உள்ளாட்சி மன்றங்களில் இந்த கணக்கு வைப்பு சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

20. வரி செலுத்துவோருக்கும், பொதுமக்களுக்கும் நிருவாகத்தில் நம்பிக்கையையும் ஒளிவு மறைவற்ற தன்மையையும் பராமரிக்கும் நோக்குடன், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், மின் ஆளுகையை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக தெரிந்தெடுக்கப்பட்ட 67 நகராட்சிகளிலும், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகளிலும் வரிக் கட்டணங்களின் வசூல் முறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வசூல் முறையை சரிபார்க்கவும் தணிக்கை செய்யவும் இத்துறை தயார் செய்யப்பட்டுள்ளது.

### தணிக்கை மறுப்புரைகளுக்கான தீர்வு

21. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை, இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கை மூலம் அரசுக்கும் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையின் தலைவருக்கும் தெரியப்படுத்தப்படுகின்றது.

22. தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின்மூலம் இத்துறையின் வட்டார மற்றும் மாவட்ட அதிகாரிகள் மூலமாக தணிக்கை மறுப்புரைகளுக்கான உடனடித் தீர்வு காணப்படுகிறது.

53-48—14a

[2005 ஏப்ரல் 8

**தணிக்கை நிலை**

23. *28–2–2005* அன்றைய நிலவரப்படி பல்வேறு நிறுவனங்களின் தணிக்கை நிலை விவரம் கீழ்வருமாறு: –

| தொ. எண் | நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை கணக்குகள் முடிவுற்ற ஆண்டு | தணிக்கை நடைபெற்று வரும் ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 | 2002–2003 (5) | 2002–2003 (1) 2003–2004 (6) |
| 2. | (அ) நகராட்சிகள் | 102 | 2001–2002 | 2002–2003 |
| | (ஆ) மூன்றாம் நிலை நகராட்சிகளாக புதிதாக நிலை உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் | 49 | 2001–2002 | 2002–2003 2003–2004 |
| 3. | ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் | 385 | 2003–2004 | 2004–2005 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 29 | 2003–2004 | – |
| 5. | சிறப்பு கிராம ஊராட்சிகள் | 562 | 2001–2002 | 2002–2003 2003–2004 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 16 | 2002–2003 | 2003–2004 |
| 7. | உள்ளூர் நூலக ஆணைக் குழு | 29 | 2001–2002 | 2002–2003 |
| 8. | விற்பனைக் குழுக்கள் | 20 | 2001–2002 | 2002–2003 |
| 9. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 | 2001–2002 | 2002–2003 |
| 10. | உள்ளாட்சி நகரமைப்புத் திட்ட அதிகார மன்றம் | 20 | 2001–2002 | 2002–2003 |
| 11. | பல்வகை நிறுவனங்கள் | 9 | 2001–2002 | 2002–2003 |
| 12 | கிராம ஊராட்சிகள் | 1260 (சோதனை தணிக்கை) | 2000–2001 | 2001–2002 |



2005 ஏப்ரல் 8 ]

அரசு வரையறுக்கும் குறிப்பிட்ட கால அளவிற்குள் ஆண்டுக் கணக்குகள் வரப்பெற்றதும் ஆண்டுத் தணிக்கை முடிவுபெறும். பெருமளவு நிறுவனங்களில் தணிக்கைப் பணி மன நிறைவு அளிக்கும் வகையில் உள்ளது.

**பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்**

24. பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்படும் நிதி உதவிகள், இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர நிறுவனங்களுக்கு மாநில/மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதற்கு இத்துறையினால் பயன்பாட்டுத் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

**சிறப்புப் பணிகள்**

25. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியை நிருவகித்தல்
- உள்ளாட்சி நிறுவனங்களின் கருவூல வைப்பு இருப்புக்கு வட்டி அளித்தல்
- அரசு அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.

**உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியை நிருவகித்தல்**

26. நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்களுக்குச் சான்றளித்தல் மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் நிருவகிக்கப்பட்டு வருகிறது. 28,482 ஓய்வூதியதாரர்கள் மூலம் நிருவகிக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். 2005–06 நிதி ஆண்டிற்கு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வுகாலப் பயன்கள் வழங்க தேவைப்படும் நிதி ரூ.138.10 கோடியாகும். ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 8

| தொ. எண் | உள்ளாட்சி மன்றங்களின் பெயர் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | 2005–2006 ஆம் ஆண்டுத் தேவை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 90–க்கு கீழ் 11673<br>90–க்குமேல் 3217 | 55.81<br>24.11 |
| 2. | சிறப்பு கிராம ஊராட்சிகள் | 5163 | 22.00 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 8429 | 36.18 |
| | மொத்தம் | 28482 | 138.10 |

27. உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கத்தக்க மானிய பகிர்வுத் தொகையிலிருந்து மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்கள் வழங்கத் தேவைப்படும் தொகையை அரசு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. தற்போது இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இதுகாறும் அந்தந்த நகராட்சி நிதியிலிருந்து ஓய்வூதியம் பெற்று வந்த நகராட்சிகள், சிறப்பு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும், இந்த இயக்ககத்தினால் பராமரித்து வரப்படும் நிதியிலிருந்தே ஓய்வூதியமும், ஓய்வுகாலப் பயன்களும் வழங்கும் பொறுப்பை அரசு இந்த இயக்ககத்திடம் ஒப்படைத்துள்ளது.

28. மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை ஓய்வூதியப் பயன்களுக்கான தணிக்கைச் சான்றிதழ்கள் இத்துறையின் உள்ளுறைத் தணிக்கைக் குழுக்களால் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில் இவர்களது ஓய்வூதியப் பயன்களை, அந்தந்த நிறுவனங்கள் தமது நிதியிலிருந்து வழங்குகின்றன.

**உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

29. அரசாணை எண் 533, நிதித் துறை, நாள் 17–06–1967–ன்படி உள்ளாட்சி மன்றப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும், அவற்றின் முதலீடுகளும் அரசால் ஏற்கப்பட்டன. உள்ளாட்சி



2005 ஏப்ரல் 8]

மன்றங்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து வட்டித் தொகை கோரிக்கை பெறப்பட்டு அரசின் வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வட்டித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 8 கோடி வட்டித் தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறும் வட்டித் தொகை கோரிக்கையின் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**அறக்கட்டளை நிதிக் கணக்குகளின் பொருளாளர்**

30. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01–04–1952 முதல் அறக்கட்டளை நிதிப் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளை நிதிக்கான பொருளாளர், கல்விக்காக ஏற்படுத்தப்படும் அறக்கட்டளைக்கு நன்கொடைகள் பெறுகிறார். அறக்கட்டளையை அரசு ஏற்று ஆணைகள் பிறப்பித்து அரசிதழில் சம்பந்தப்பட்ட நிருவாகத் திட்டங்கள் வெளியிடப்பட்ட பின்னரே அறக்கட்டளை செயல்பாட்டுக்கு வருகிறது.

31. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு, அவர்களிடமிருந்து வரும் கோரிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளரின் கட்டுப்பாட்டில், ரூபாய் 4 இலட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.9.52 கோடி மதிப்புள்ள 769 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன.

**சிறுசேமிப்புகள்**

32. சிறுசேமிப்பு, மாநிலத் திட்டங்களுக்கும், கட்டமைப்பு வசதி மேம்பாடுகளுக்கும் தேவைப்படும் நிதி பெறுவதற்கு உதவும் முக்கியமான மிகப் பெரிய நிதி ஆதாரமாக விளங்குகிறது. 1–4–2002–லிருந்து மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறு சேமிப்பு வசூலுக்குச் சமமான தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கு மத்திய அரசு தற்போது 9.5% வட்டி விதிக்கிறது. 2004–05 ஆம் ஆண்டுக்கான நிகர இலக்கு ரூ.4,500 கோடியாக அரசு நிர்ணயித்திருக்க, இந்த இலக்கு விஞ்சப்பட்டுள்ளது.

33. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் உள்ளன. அவை வருமாறு:—

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

(அ) பல்வகை வருவாய்த் திட்டம்

கிசான் விகாஸ் பத்திரம்

(ஆ) வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம்

(i) சேமிப்புப் பத்திரம் VIII ஆவது வெளியீடு

(ii) 15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி

(இ) காலமுறை அடிப்படையிலான தொடர் வருவாய்த் திட்டம்

(i) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம்

(ii) மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத் திட்டம்

(ஈ) தொடர் சேமிப்புத் திட்டம்

அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்

(உ) குறித்த கால வைப்புத் திட்டங்கள்

(i) 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்

(ii) 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்

(iii) 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்

(iv) 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்

34. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டிவீதங்கள் மத்திய அரசால் திருத்தம் செய்யப்படுவதற்கு உட்பட்டவையாகும். 1-3-2003 ஆம் நாள் முதல் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் வட்டி வீதங்கள் வருமாறு:—

| தொடர் எண் | திட்டம் | 1-3-2003 முதல் வட்டி வீதங்கள் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% |
| 2. | ஓராண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25% |
| | ஈராண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.50% |
| | மூன்றாண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.25% |
| | ஐந்தாண்டு அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.50% |
| 3. | அஞ்சலக தொடர் வைப்பீட்டுத் திட்டம் | மாதம் ரூபாய் 10 வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூபாய் 728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும். |
| 4. | தேசிய சேமிப்புப் பத்திரம் VIII வெளியீடு | 8.00% |
| 5. | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 8.00% |
| 6. | கிசான் விகாஸ் பத்திரம் | 8 ஆண்டுகள் 7 மாதங்களில் முதலீடு இரட்டிப்பாகும் |
| 7. | அஞ்சலக சேமிப்புக் கணக்கு | 3.5% |



**2004–2005 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை**

35. மாநில அரசு, ஒவ்வொரு ஆண்டும், மாநிலம் முழுமைக்கும் சிறுசேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, அதில் ஒவ்வொரு மாவட்டமும் வசூலிக்கவேண்டிய தொகையின் அளவையும் வரையறுக்கிறது. 2004–2005 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட நிகர வசூல் இலக்கு ரூபாய் 4,500 கோடியாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், அரசு நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் பொறுப்பாவர். 2004–2005 ஆம் ஆண்டின் (2005 பிப்ரவரி வரை) நிகர வசூல் தொகை ரூபாய் 5147.89 கோடியாகும்.

**சிறு சேமிப்புக்குரிய முகவர் அமைப்பு**

36. சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவித்தல் மற்றும் வசூலில், சிறுசேமிப்பு முகவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

[2005 ஏப்ரல் 8

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | நியமிக்கப்பட்ட திட்டங்கள் | 31-12-2004 ஆம் நாள் நிலவரப்படி மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் | 14,565 |
| 2. | மகளிர் முகவர்கள் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 25,366 |
| 3. | அதிகாரபூர்வமான முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | பொது வருங்கால வைப்பு நிதி | 1,444 |
| | மொத்தம் | | 41,375 |

37. இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத வட்டாரங்கள்/கிராமங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில், 400 வீடுகளுக்கு ஒரு முகவர் என்ற அடிப்படையில் அதிக எண்ணிக்கையில் முகவர்களை நியமிப்பதன் மூலம், உரிய கவனம் செலுத்தப்பட்டு இலக்குகள் எய்தப்படும்.

**முகவர்களுக்கான ஊக்கத்தொகை**

38. 2004–2005 ஆம் ஆண்டிற்கு முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:–



2005 ஏப்ரல் 8 ]

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டங்களின் பெயர்கள் | மத்திய அரசு வழங்கும் தரகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப் பட்ட முகமைத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், கிசான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்புப் பத்திரம் VIII–வது வெளியீடு, 1, 2, 3, 5 ஆண்டுகளுக்கான குறித்த கால வைப்பீடு | 0.5 முதல் 1 சதவீதம் வரை | 0.5 முதல் 1 சதவீதம் வரை | 1% முதல் 2% வரை |
| 2. | மகளிர் முகவர் திட்டம் | தொடர் வைப்புத் திட்டம் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் | பொது வருங்கால வைப்பு நிதி | 1% | 1% | 2% |
| 4. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 0.5% | ஏது மில்லை | 0.5% |

39. முகவர்களின் ஊக்கத் தொகையை அவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் அஞ்சலகங்களிலேயே, அவரவர் கணக்குகளில் வரவு வைக்க, அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக, அரசு, ரூபாய் 60 கோடி அனுமதித்துள்ளது.

**சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்**

40. தொடர் விளம்பரங்கள் மூலமும், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ஊக்கத் தொகை வழங்குதல் மூலமும், தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டத்தை அரசு ஊக்குவித்து வருகிறது.

**உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம்**

41. சிறுசேமிப்பு வசூலில், உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, முந்தைய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் கூடுதலாக

[2005 ஏப்ரல் 8

சிறு சேமிப்பு நிகர வசூலை ஈட்டும் மாவட்டங்களுக்கு, அவை ஈட்டிய வசூல் தொகை அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் அரசு ஊக்க மானியம் வழங்குகிறது. சிறப்பாக செயல்பட்ட மாவட்டங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக 2004-2005 ஆம் ஆண்டிற்கு அரசு ரூபாய் 30 கோடி அனுமதித்தது. இவ்வூக்கத் தொகையானது பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார நிலையங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் சிறுசேமிப்பைத் திரட்டுவதில் மாவட்ட அதிகாரிகளுக்கிடையே இத்திட்டமானது ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துகிறது.

**அரசு தகவல் தொகுப்பு விவர மையம்**

42. மின்னணுத் தொகுப்பாய்வு சாதனத்தின் மூலம் அரசுத் துறைகள் தொடர்பான நிதிசார் விவரங்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து, நல்ல முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், மேலாண்மைத் தகவல் அமைப்பில் மின்னணுத் தொகுப்பாய்வு முறை முக்கியப் பங்கு வகிக்கின்ற வகையில் அதன் பயன்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது.

அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் தற்போது பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சிறப்புத் துணைத் தேர்வு முடிவுகள் உள்ளிட்ட பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளி தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்
- செயல் திறன் அறிதல் / தேர்வு முடிவைத் தொகுத்தல்
- சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்
- சீருடைப் பணிக்கான ஆட்தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்
- ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி
- தகவல் களஞ்சியம்

**தேர்வு முறை**

43. பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் 1974 செப்டம்பரில் கணினிமயமாக்கப்பட்டன. மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகளைத்



2005 ஏப்ரல் 8 ]

தொகுக்கும் பணி 1980 மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போதிலிருந்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு முடிவுகள் உட்பட அனைத்து, பள்ளி இறுதித் தேர்வு முடிவுகளும் முறையாக தொகுக்கப்பட்டு வருகின்றன. மேலும் மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறும் தேர்வுகளின் முடிவுகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் துல்லியமாக வெளியிடப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில் 14,85,769 மாணவர்களின் தேர்வு முடிவுகள் தொகுக்கப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு: –

| தேர்வுகள் | 2004 மார்ச் | சிறப்புத் துணைத் தேர்வு | 2004 அக்டோபர் |
|---|---|---|---|
| மேல்நிலை | 5,54,961 | 1,04,118 | 32,313 |
| எஸ்.எஸ்.எல்.சி. | 7,29,972 | 1,19,721 | 69,748 |
| மெட்ரிகுலேஷன் | 88,908 | 9,183 | 4,899 |
| ஆங்கிலோ–இந்தியன் | 4,860 | 285 | 108 |
| மொத்தம் | 13,78,701 | 2,33,307 | 1,07,068 |

44. மார்ச்/ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் பொதுத் தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் தவறிய மாணவர்களுக்கு "உடனடித் துணைத் தேர்வு" குறித்து அரசு அறிவித்துள்ளது. அவர்கள், மேற்படிப்பைத் தொடர்வதற்கு ஓராண்டு காலம் காத்திருக்கத் தேவையில்லை. இந்தச் சிறப்பு துணை தேர்வு 94,298 மாணவர்கள் பயனடைந்து, அதே ஆண்டில் அவர்களின் மேற்படிப்பைத் தொடர உதவியது.

**சட்டக் கல்வி நுழைவுத் தேர்வு**

45. 2004 ஆம் ஆண்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வுகளை நடத்தியது. பி.ஏ., பி.எல் (ஆனர்ஸ்) பட்டப் படிப்பிற்கான 556 தேர்வர்கள், பி.எல். (5 வருடங்கள்) பட்டப் படிப்பிற்கான 6,259 தேர்வர்கள் மற்றும் பி.எல். (3 ஆண்டுகள்) பட்டப் படிப்பிற்கான 9,519 தேர்வர்களின் நுழைவுத் தேர்வு முடிவுகள் இந்த மையத்தில் தொகுக்கப்பட்டன.

[2005 ஏப்ரல் 8

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம்

46. 2003–2004 ஆம் ஆண்டில் பெண் காவலர்கள் நிலை II மற்றும் சிறை அதிகாரி நிலை II ஆகிய பணியிடங்களுக்குத் தெரிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2004 ஆம் ஆண்டில் பெண் காவலர்கள் பதவி தேர்விற்கு 13,632 நபர்களும், சிறை அதிகாரி (நிலை II) பதவி தேர்விற்கு 13,852 நபர்களும் கலந்துகொண்டனர்.

## ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி

47. ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி கணக்குகளை கணினி மயமாக்கும் பணியும், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு கணக்கு விவரச் சீட்டு வழங்கும் பணியும் இந்த மையத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அரசு மானியம் பெறும் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றுக்கு புதிய ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி எண்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. 1996–97 முதல் 1998–99 வரையிலான ஊராட்சி ஒன்றிய சந்தாதாரர்களுக்கான கணக்கு விவரச் சீட்டுகள் தொகுக்கப்பட்டு, தொடக்கக் கல்வி இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய காலத்திற்கான கணக்குகளைத் தொகுப்பதற்கு, இந்த அலுவலகம் முனைப்பாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## தகவல் களஞ்சியம்

48. மாநில திட்டக் குழு பரிந்துரை செய்தவாறு, பதினோரு துறைகளைப் பொறுத்தவரையிலான அதாவது ஊரக வளர்ச்சி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வணிக வரி, குடும்ப நலத் துறை, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து, வேளாண் கணக்கெடுப்பு, கால்நடைகள் கணக்கெடுப்பு, மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள், பள்ளிக் கல்வி, கால்நடை வளர்ப்பு மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை ஆகிய துறைகள் குறித்த தகவல் விவரங்கள் தகவல் களஞ்சியத்தில் வைக்கப் பெறுவதற்காக கூர்ந்தாய்வு செய்யும்பொருட்டு தேசிய தகவல் மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

49. 'தனியுரிமை கொண்ட நடுநிலைதவறா கூட்டுறவுத் தணிக்கை' என்ற கொள்கைக்கிணங்க, 17–06–1981 அன்றிலிருந்து செயல்படும் வகையில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை ஏற்படுத்தப்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, 14 செயல்முறை



2005 ஏப்ரல் 8]

பதிவாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 80 ஆம் பிரிவிற்கிணங்க தணிக்கை மேற்கொள்வது கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முக்கியப் பணியாகும்.

கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண் | பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11,132 |
| 2 | கைத்தறி மற்றும் துணி ஆணையர் | 1,584 |
| 3 | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 350 |
| 4 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1,781 |
| 5 | தலைமைச் செயல் அலுவலர் பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | |
| 6 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1,036 |
| 7 | மீன் வளத் துறை இயக்குநர் | 1,116 |
| 8 | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 950 |
| 9 | சர்க்கரைத் துறை ஆணையர் | 19 |
| 10 | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 355 |
| 11 | வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் | 220 |
| 12 | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 40 |
| 13 | சமூக நலத் துறை இயக்குநர் | 137 |
| 14 | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 49 |
| | மொத்தம் | 18,769 |

[2005 ஏப்ரல் 8

**கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் செயல் பரப்பு**

50. கணக்குகளைச் சரிபார்க்கவும், ஐந்தொகைக் கணக்கும், ஆதாய இழப்புக் கணக்கும், சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் முறையாக தயாரிக்கப்படுவதை உறுதி செய்யவும் கூட்டுறவுத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை இரு வகைப்படும். அவையாவன:–

(i) உடனிகழ் தணிக்கை

(ii) அடிப்படை விதி 127–ன்கீழ் தணிக்கை

**(i) உடனிகழ் தணிக்கை**

51. 45 நாட்களில் தணிக்கைகளை முடிக்கக்கூடிய அளவில் உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் உடனிகழ் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 2004–2005 ஆம் நிதியாண்டில் (2005 பிப்ரவரி மாதம் வரை) தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 1.68 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**(ii) அடிப்படை விதி 127–ன்கீழ் தணிக்கை**

52. அதிக அளவிலான பல்வகைப்பட்ட நடவடிக்கைகளுடன்கூடிய நிதி பற்று வரவுகளைக் கொண்டிருக்கும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அடிப்படை விதி 127–இன்கீழ் தணிக்கையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதன்படி தணிக்கையாளர்கள் தணிக்கைப் பணியை மேற்கொள்கின்றனர். அந்தந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலைக்கு உட்பட்டு, தணிக்கைப் பணியாளர்களுக்கான பணியாளர் செலவு முழுவதும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. கூட்டுறவு அமைப்புகளின் தற்போதைய நிதி நெருக்கடியை கவனத்தில் கொண்டு அடிப்படை விதி தணிக்கைக் கட்டண விதிப்பை 100 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக 23–11–2004 முதற்கொண்டு அரசு குறைத்துள்ளது. 2004–2005 ஆம் நிதியாண்டில் (2005 பிப்ரவரி மாதம் வரை) அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 6.84 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 8 ]

**தணிக்கைப் பணியில் முன்னேற்றம்**

53. கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவு தணிக்கைத் துறை மேற்கொண்ட தணிக்கைகளின் விவரம் வருமாறு:–

| தொடர் எண் | ஆண்டு | முடிக்கப்பெற்ற தணிக்கை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2000–2001 | 19,820 |
| 2 | 2001–2002 | 19,753 |
| 3 | 2002–2003 | 21,654 |
| 4 | 2003–2004 | 21,842 |
| 5 | 2004–2005 (2005 பிப்ரவரி வரை) | 18,156 |

**சிறப்பு அறிக்கைகள்**

54. நிதி இழப்பு மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளை மீறிய பற்று வரவுகள் மற்றும் சட்ட மீறல் உள்ளிட்டவை அடங்கிய கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக கூட்டுறவுத் தணிக்கைத் துறை அளித்த சிறப்பு அறிக்கைகள் மற்றும் கடந்த ஐந்தாண்டு காலத்தில் அவற்றில் சம்பந்தப்பட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண் | ஆண்டு | சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2000–2001 | 1,121 | 9,607.07 |
| 2 | 2001–2002 | 1,261 | 6,902.90 |
| 3 | 2002–2003 | 1,445 | 7,450.56 |
| 4 | 2003–2004 | 1,146 | 14,518.22 |
| 5 | 2004–2005 (2005 பிப்ரவரி வரை) | 762 | 23,079.00 |

[2005 ஏப்ரல் 8

**துறை தணிக்கை மற்றும் சட்டப்படிக்கான நிறுவனங்கள் தணிக்கைத் துறை**

55. துறைத் தணிக்கை மற்றும் சட்டப்படிக்கான நிறுவனங்கள் தணிக்கைத் துறையானது, முந்தைய மாநில வாணிபத் திட்டப் பணிகள் தணிக்கைத் துறையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மேற்கொண்டு வந்த பணிகளை ஒப்படைத்ததன்மூலம் 1-10-2002 ஆம் நாள் முதல் மறுசீரமைக்கப்பட்டது.

56. தலைமை துறை தணிக்கையாளர் மற்றும் சட்டப்படிக்கான நிறுவனங்களின் தலைமை தணிக்கையாளர், 10 சட்டப்படிக்கான நிறுவனங்கள், 1,821 சட்டபடியில்லாத நிறுவனங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தின் 70,349 மையங்கள் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை மேற்கொள்கிறார். மேலும் ஆண்டொன்றுக்கு ரூ.0.20 இலட்சம் தொடர் மானியத்தைப் பெறுகின்ற மற்றும் ஆண்டொன்றுக்கு ரூ.1.20 இலட்சம் தொடரா மானியத்தைப் பெறுகிற அரசுசாரா அமைப்புகளையும் இத்துறை தணிக்கை செய்கிறது. 14 அரசுத் துறைகளிலும், இத்துறை துறைத் தணிக்கை மேற்கொள்கிறது.

57. இத்துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டிற்குள் வரும் நிறுவனங்கள் பின்வருமாறு:

| தொடர் எண் | நிறுவனத்தின் பெயர் | நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சட்டப்படிக்கான தணிக்கைகள் | 10 |
| (அ) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | |
| (ஆ) | தமிழ்நாடு கதர் மற்றும் கிராம தொழில் வாரியம் | |
| (இ) | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | |
| (ஈ) | சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் | |
| (உ) | பேராட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் | |
| (ஊ) | சொத்தாட்சியர் | |
| (எ) | அலுவல்முறை கலைப்பு அதிகாரி | |
| (ஏ) | தமிழ்நாடு வஃக்ப் வாரியம் | |
| (ஐ) | வஃக்ப் அமைப்புகள் | |



2005 ஏப்ரல் 8 ]

| தொடர் எண் | நிறுவனத்தின் பெயர் | நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (ஒ) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | |
| 2 | சட்டப்படி அல்லாத தணிக்கை | |
| (அ) | தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் | 1 |
| (ஆ) | வேளாண் விரிவாக்க மையங்கள் | 889 |
| (இ) | எடைகள் மற்றும் அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளரின் அலுவலகம் | 215 |
| (ஈ) | திரைப்படப் பிரிவு, திரைப்படக் கல்லூரி, அரசு விருந்தினர் மாளிகைகள் முதலியன போன்ற அரசு நிறுவனங்கள் | 247 |
| (உ) | அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர் இல்லங்கள் போன்ற நலவாழ்வு நிறுவனங்கள் | 428 |
| (ஊ) | தனியார் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்ப பயிலகங்கள் | 39 |
| (எ) | வழக்கு தொகுப்போர் நிதி | 1 |
| (ஏ) | சென்னை உயர் நீதிமன்றத்தின் உரிமையியல் நீதிமன்ற வைப்புத் தொகைகள் | 1 |
| (ஐ) | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்கள் | 70,349 |
| (ஒ) | பொது நூலகங்கள் மற்றும் மாவட்ட நூலகங்களின் இயக்குநர் | 29 |
| (ஓ) | அனைத்து மாவட்டங்களில் உள்ள சிறுசேமிப்புத் துறை அலுவலகங்கள் | 29 |
| (ஔ) | அனைத்து மாவட்டங்களில் உள்ள மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி | 29 |
| | மொத்தம் | 72,267 |

[2005 ஏப்ரல் 8

58. சட்டப்படிக்கான மற்றும் சட்டப்படி அல்லாத நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், இத்துறை தணிக்கை செய்த பற்று வரவுகளின் மொத்த மதிப்பு ரூ.8528.73 கோடியாகும். (அதாவது சட்டப்படிக்கான நிறுவனங்கள் ரூ.2063.64 கோடி மற்றும் சட்டப்படி அல்லாத நிறுவனங்கள் ரூ.6465.09 கோடி) மேற்சொன்ன நிறுவனங்களுடன், கூடுதலாக, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் தணிக்கைப் பணியையும் 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஒப்படைத்துள்ளது.

**தணிக்கை குறித்த நிலவரம்**

59. 28-02-2005 அன்றுள்ளவாறு, பல்வேறு நிறுவனங்களின் தணிக்கை குறித்த நிலவரம் பின்வருமாறு:

| நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை செய்து முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடைபெறுகிற ஆண்டு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சட்டப்படிக்கான நிறுவனங்கள் | 10 | 2002–03: 10<br>2003–04: 5 | 2003–04: 5<br>2004–05: 5<br>10 |
| சட்டப்படியில்லாத நிறுவனங்கள் | 1821 | 2002–2003 | 2003–2004 |
| புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்ட மையங்கள் | 70,349 | 2002–2003 | 2003–2004 |
| மாவட்ட நூலகங்கள் | 29 | 2002–2003 | 2003–2004 |
| மாவட்ட சிறுசேமிப்புத் திட்ட அலுவலகங்கள் | 29 | 2002–2003 | 2003–2004 |
| அனைத்து மாவட்டங்களில் உள்ள மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி | 29 | 2002–2003 | 2003–2004 |



2005 ஏப்ரல் 8]

**நடைபெற்று வரும் தணிக்கைப் பணிகள்**

60. கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்துறை வழங்கிய தணிக்கை அறிக்கைகளின் எண்ணிக்கை வருமாறு:

| ஆண்டு | தணிக்கை முடிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2000-2001 | 65,405 |
| 2001-2002 | 70,188 |
| 2002-2003 | 71,255 |
| 2003-2004 | 72,112 |
| 2004-2005 | 72,875 |

**சிறப்பு அறிக்கைகள்**

61. கடந்த ஐந்தாண்டு காலத்தில் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்களில் கண்டறியப்பட்ட முறைகேடுகள் குறித்து இந்தத் துறை அளித்துள்ள சிறப்பு அறிக்கைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட தொகைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| அறிக்கை ஆண்டு | அளிக்கப்பட்ட சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | சம்பந்தப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2000–2001 | 300 | 145.00 |
| 2001–2002 | 260 | 138.00 |
| 2002–2003 | 210 | 132.00 |
| 2003–2004 | 180 | 127.00 |
| 2004–2005 | 150 | 122.80 |

[2005 ஏப்ரல் 8

**தணிக்கைச் சான்றிதழ் வழங்குதல்**

62. இத்துறை, 6 பெரிய வாரியங்களின் ஆண்டு கணக்குகளுக்கும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம தொழில் வாரியத்தின் அனைத்து அலகுகள் / பிரிவுகள் மற்றும் 889 வேளாண் விரிவாக்க மையங்களின் ஒப்படைப்புக் கணக்குகளுக்கும் சான்றளிக்கிறது. 385 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்கின் இறுதி இருப்புத் தொகை குறித்தும் இந்தத் துறை சான்றளிக்கிறது. அரசிடமிருந்து உதவி மானியம் பெறுகிற தனியார் பொறியியல் கல்லூரிகள், தனியார் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் அனைத்து அரசு சாரா அமைப்புகளைப் பொறுத்தமட்டில், அவற்றிற்கு உரிய மானியங்கள் குறித்து இத்துறை சான்றளிக்கிறது.

**சிறப்புத் தணிக்கைப் பணிகள்**

63. முறையான தணிக்கை பணிகள் தவிர, 20 பல்வேறு வகையிலான சிறப்புத் தணிக்கைப் பணிகளை அரசு அவ்வப்போது இந்தத் துறைக்கு ஒப்படைக்கிறது. சட்டப்படிக்கான வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் அனைத்துப் பணியாளர்களின் ஓய்வூதிய கோரிக்கைகள் குறித்தும் இத்துறை சான்றளிக்கிறது.

64. 01–01–1996 அன்றுள்ளவாறு திருத்தப்பட்ட சம்பள வீதங்களில் அனைத்துப் பணியாளர்களுக்கும் சம்பள நிர்ணயம் செய்யப்பட்டது குறித்த சிறப்புத் தணிக்கைப் பணியையும் அரசு ஒப்படைத்துள்ளது. இதுவரை, வருவாய் மற்றும் காவல் துறை குறித்த தணிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய துறைகள் குறித்த தணிக்கைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தணிக்கை மறுப்புகளுக்கு பதிலளித்து தீர்த்தல்**

65. பதில்கள் மற்றும் பதிவுருக்களை சரிபார்த்தப் பின்னர், நிருவாக துறைகளால் ஏற்பாடு செய்யப்படும் மாவட்ட அதிகாரிகள் பங்குபெறும் கூட்டமர்வு வாயிலாக, தணிக்கை மறுப்புகளுக்கு தீர்வு காணும் பணியை இத்துறை செயல்படுத்துகிறது. 2004–2005 ஆம் ஆண்டில், 35,655 எண்ணிக்கையிலான புதிய மறுப்புகள் எழுப்பப்பட்டன. 38,784 மறுப்புகளுக்கு தீர்வு காணப்பட்டன.



2005 ஏப்ரல் 8 ]

**தணிக்கைக் கட்டண வசூல்**

66. தணிக்கை செய்யப்படுகிற நிறுவனங்களிடமிருந்து, தணிக்கைக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில், ரூ.4.49 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதிய இயக்ககம்**

67. ஓய்வூதிய இயக்ககம், 1–9–1994 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்ககம் பின்வரும் பணிகளை ஆற்றி வருகிறது:—

i. ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்த்து வைத்தல்.

ii. துறைத் தலைவர்களும், அலுவலகத் தலைவர்களும் ஓய்வூதிய செயற்குறிப்புகளை உரிய காலத்தில் மாநில கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்தல் மற்றும் அது தொடர்பான கால முறைப்படி மறு ஆய்வு மேற்கொள்ளுதல்.

iii. அலுவலர்களும் பணியாளர்களும் ஓய்வூதியப் பயன்களைக் கால தாமதமின்றிப் பெறுவதற்கு இயலும் வகையில் அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவர்கள் ஓய்வுபெறும் நாளில் அல்லது அதற்கு முன்னர் முடிவு செய்யப்படுவதை உறுதி செய்ய, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுத்தல்.

iv. ஓய்வூதியதாரர்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்துதல்.

v. சிறப்பு வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் குறித்தப் பணியை கருவூலக் கணக்குத் துறையிடமிருந்து எடுத்துக் கொள்ளுதல்.

vi. தமிழ்நாடு அரசு தொழிலகப் பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைக் கவனித்தல்.

vii. தமிழ்நாடு 1995 ஆம் ஆண்டு அரசு ஓய்வூதியதாரர்கள் நல வாழ்வு நிதித் திட்டம்.

[2005 ஏப்ரல் 8

viii. தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், மற்றும்

ix. தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம்.

68. 28–02–2005 ஆம் நாள் நிலவரப்படி, ஓய்வூதியதாரர்களின்/குடும்ப ஓய்வூதியதாரர்களின் மொத்த எண்ணிக்கை வருமாறு:—

| வகை | ஓய்வூதியதாரர்கள் | குடும்ப ஓய்வூதியதாரர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சிவில் ஓய்வூதியதாரர்கள் | 2,70,380 | 1,18,739 | 3,89,119 |
| ஆசிரியர்கள் | 63,373 | 27,634 | 91,007 |
| மொத்தம் | 3,33,753 | 1,46,373 | 4,80,126 |
| ஏனைய வகையினர் அதாவது, இராணுவ, விடுதலை போராட்ட வீரர்கள், கலைஞர்கள் முதலியோர் | – | – | 40,143 |
| | பெருமொத்தம் | | 5,20,269 |

69. மாவட்ட ஆட்சியர்கள், தங்களுடைய மாவட்டங்களில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஓய்வூதியதாரர்கள் குறைதீர்வு நாள் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். ஓய்வூதிய இயக்ககத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இக்கூட்டங்களில் கலந்துக் கொண்டு, மாவட்டங்களில் உள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதில் மாவட்ட ஆட்சியர்களுக்கு உதவி செய்கிறார். மாநில கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்தில் முடிவுறாமல் உள்ள இனங்கள் குறித்தும் இவ்வியக்ககம் தொடர் நடவடிக்கை எடுக்கிறது. ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக, நேரடியாக அல்லது முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக ஓய்வூதிய இயக்ககத்திற்கு வரப் பெறும் மனுக்கள் அனைத்தும்



2005 ஏப்ரல் 8 ]

கருணையுடன் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து தீர்வு காணப்படுகின்றன.

70. தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் ஓய்வூதிய நீதிமன்றம் (அதாலத்) ஒன்று உயர் நீதிமன்ற வளாகம், சென்னை–104–ல் அமைக்கப்பட்டு, 22–2–2002 முதல் இயங்கி வருகிறது. ஓய்வூதிய நீதிமன்றம் அளிக்கும் உத்தரவு மீது தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக, ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலகத்தில் உள்ள நிருவாகத் துறைகள் மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் மாநில கணக்குத் துறைத் தலைவரின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஓய்வூதிய இயக்குநர், இந்த நீதிமன்றத்தின் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். அதிக ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவதற்காக, இந்த நீதிமன்றம் 2003 டிசம்பர் திங்களிலிருந்து மாதம் இருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

71. ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஓய்வூதியதாரர்கள் அறிந்து கொள்வதற்கான வழிகாட்டு குறிப்பேடு ஒன்று தயாரிக்கப்பட்டு www.tn.gov.in/dop. என்ற இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்கள் மேற்சொன்ன இணையதளத்திலிருந்து உடனடித் தேவைக்குப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதிய இயக்ககத்தின் மின் அஞ்சல் முகவரி, dop@tn.nic.in. ஆகும்.

**1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நலவாழ்வு நிதித் திட்டம்**

72. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், தமிழ்நாட்டில் பணியமர்த்தப்பட்டு ஓய்வுபெற்ற அனைத்திந்திய பணி அதிகாரிகள் ஆகியோர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு வகை மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சை மருத்துவமனைகளில் பெற நிதியுதவி அளிப்பதற்காக, தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நலவாழ்வு நிதித் திட்டம் 1–7–1995 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டு இந்நிதியில் வரவு வைக்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 8

ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வாழ்நாளில் மேற்கொள்ளக்கூடிய மருத்துவச் சிகிச்சை/அறுவை சிகிச்சைக்கான செலவுத் தொகையில் 75 சதவீதம் அல்லது ரூபாய் 50,000/– இதில் எது குறைவோ அத்தொகை இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 28–02–2005 வரையில் இந்த நலவாழ்வு நிதித் திட்டத்தின்கீழ், 20,902 ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளனர். ஓய்வூதியதாரர்களுக்கு ரூபாய் 21.38 கோடி ஈடு செய்யப்பட்டுள்ளது.

**1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதித் திட்டம்:—**

73. மரணமடைந்த ஓய்வூதியதாரர்களின் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு 01–01–1997–லிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. 1–1–1998 முதல் இந்த நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதிக்கு ஓராண்டு காலம் சந்தாத் தொகை செலுத்திய பின்னர் ஓய்வூதியதாரர் ஒருவர் இறந்துவிட நேர்ந்தால், அவரது மனைவி/நியமனதாரர்/சட்டப்படியான வாரிசுதாரருக்கு இந்நிதியிலிருந்து ரூபாய் 25,000/– வழங்கப்படும். இது ஒரு விருப்பத் திட்டமாகும். இந்நிதிக்கு சந்தாத் தொகை செலுத்தி வந்த ஓய்வூதியதாரர்கள் பின் ஒரு தேதியில், இத்திட்டத்திலிருந்து விலகிக்கொள்ளலாம். அதுவரை அவர் செலுத்தி வந்த தொகை அவருக்கு திருப்பிக் கொடுக்கப்படும். தற்போது, ஓய்வூதியதாரர்கள் இந்நிதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 70/– செலுத்தி வருகின்றனர். 28–02–2005 வரையில் மொத்தம் 47,112 குடும்பத்தினர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொழிலகத் தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதித் திட்டம்**

74. அரசுத் துறைகளில் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களின் நலனுக்கான இத்திட்டம் 1969 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1–4–1989–க்கு முன்னர், ஊதியத்தில் 8.33 சதவீதம் பணியாளர்களின் பங்களிப்புத் தொகையாகவும், அதற்கு சமமானத் தொகை அரசின்–தொழிலதிபர் பங்களிப்புத் தொகையாகவும் இத்திட்டத்திற்கு அளிக்கப்பட்டு வந்தது.



2005 ஏப்ரல் 8 ]

1–4–1989–க்குப் பின்னர் பணியாளர்களின் ஊதியத்தில் 10 சதவீதத் தொகை தொழிலாளரின் பங்களிப்புத் தொகையாக வழங்கப்படுகிறது. அதற்குச் சமமானதொரு தொகையை அரசு தன் பங்களிப்பாக அளிக்கிறது.

தற்போது, வேளாண்மை, வனம், பொதுப் பணித் துறை, கால்நடை வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு போன்ற அரசுத் துறைகளைச் சார்ந்த 453 பிரிவுகள் இத்திட்டத்தின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மொத்தம் 20,200 உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் கணக்கு வைப்பு நடைமுறைகள் யாவும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்**

75. இத்திட்டம், 01–04–1984 ஆம் நாள் முதற்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20/– வீதம் 148 மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்டு, பின்னர் அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை, அதற்குரிய வட்டி ஆகியவற்றோடு அரசின் பங்களிப்புத் தொகையாக ரூபாய் 10,000/– சேர்த்து திருப்பி வழங்கப்படும்.

**2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம்**

76. இத்திட்டம் 1–10–2000 ஆம் நாள் முதற்கொண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

(அ) அனைத்து நிரந்தர அரசு ஊழியர்களும் இத்திட்டத்தில் சேர விருப்பம் தெரிவிக்கலாம். இத்திட்டத்தில் சேருபவர்கள் ஓய்வுபெறுகின்ற மாதத்திற்கு முன்மாதம் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50/– வீதம் செலுத்தலாம். அவர்கள் ஓய்வு பெறும்போது அத்தொகை, அதன்மீது சேர்ந்து வரும் வட்டியுடன் திருப்பி வழங்கப்படும்.

(ஆ) இத்திட்டம், 1–10–2000 அன்று, அல்லது அந்நாளுக்குப் பின்னர் புதிதாக பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் சந்தாத் தொகையாக ரூபாய் 70/– செலுத்த வேண்டும். இச்சந்தாத் தொகையுடன் வட்டித் தொகையும், அரசின் பங்களிப்புத் தொகையான ரூபாய் 10,000/–மும் சேர்த்து ஓய்வு பெறும் நாளன்று வழங்கப்படும்.



## இணைப்பு – II

(153 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 35

## திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**1.1 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:**

i. மாநில திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல்.

ii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.

iii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவிபெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலம் மதிப்பீடு செய்தல்.

iv. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மூலமாக புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவற்றுடன் மாநில பொருளாதார மாதாந்திர கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

v. இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோதயத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

vi. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் மாவட்டத் திட்டக் குழுவின் பணிகளை மாநிலத் திட்டக் குழுவின் உதவியுடன் மேற்பார்வையிடுதல்.

[2005 ஏப்ரல் 8

vii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.

viii. உலக வர்த்தக மையப் பிரிவின் ஒருங்கிணைப்பாளரின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

ix. பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

x. சிறப்பு முயற்சிகளின்கீழ் வரும் திட்டங்களை ஒருங்கிணைத்து செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xi. சென்னைப் பெருநகர் பகுதிக்கான கட்டமைப்பு முதலீட்டுத் திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

xii. ஆண்டுத் திட்டங்களுக்கான திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட இணைப்பினைத் தயாரித்தல்.

xiii. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்கள் குறித்த பணிகளைச் செய்தல்.

xiv. 15 அம்ச திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xv. மாநில திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றுக்கான மத்திய உதவியைப் பெறுவதைக் கண்காணித்தல்.

xvi. தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xvii. ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

xviii. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.



2005 ஏப்ரல் 8 ]

**1.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பணிகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு:**

**1.2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்:**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதல் திட்ட ஒதுக்கீடுகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| திட்டக் காலம் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| முதல் திட்டம் (1951–56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956–61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (1961–69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969–74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974–79) | 1122 | 1165 |
| ஆறாவது திட்டம் (1980–85) | 3150 | 3645 |
| ஏழாவது திட்டம் (1985–90) | 5750 | 6317 |
| ஆண்டுத் திட்டம் (1990–91) | 1450 | 1591 |
| ஆண்டுத் திட்டம் (1991–92) | 1600 | 1726 |
| எட்டாவது திட்டம் (1992–97) | 10200 | 14024 |
| ஒன்பதாவது திட்டம் (1997–2002) | 25000 | 25036 |

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.29 ஆக இருந்தது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.248 ஆக உயர்ந்தது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு உயர்ந்த அளவான ரூ.6,440 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 8

### 1.2.2 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002–2007):

தேசிய அளவில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கண்ணோட்டம் 2001 ஆம் ஆண்டு, செப்டம்பர் முதல்நாள் கூட்டப்பட்ட தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் பத்தாவது திட்டக் காலத்தில், அதாவது 2002 முதல் 2007 வரையிலான காலத்தில், தேசிய மொத்த உற்பத்தி வீதத்தில் ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநிலத் திட்டக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.40,000 கோடி என உயர்ந்த அளவிலான ஒதுக்கீட்டிற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 8 சதவீத வளர்ச்சி அடைவதைத் தவிர, மனிதவளம் குறித்த முக்கிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்க்கை அமைவதற்கான அனைத்து வசதிகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டை நாட்டிலேயே சிறந்த மாநிலமாக ஆக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

### 1.2.3 2002–2003, 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுத் திட்டம்:

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கான ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 2002–2003 | 5750.00 | 5841.05 | 101.58 |
| 2003–2004 | 7000.00 | 7088.31 | 101.26 |

2004–2005 ஆம் ஆண்டு திட்ட இலக்கீடு முற்றிலும் எய்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.4 2005–2006 ஆம் ஆண்டுத் திட்டம்:

2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.9100 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டளவிற்கு 30–11–2004 ஆம் நாளன்று புதுடெல்லியில்



2005 ஏப்ரல் 8 ]

மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அளவிலான கலந்துரையாடலுக்குப்பின் ஒப்புதல் பெறப்பட்டது. இந்த ஒதுக்கீடு 2004–2005 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் மிக உயர்ந்த அளவில் அமைந்துள்ளது.

### 1.2.5 இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா:

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா என்ற திட்டம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது முக்கிய பிரச்சினைகளான, குறைந்த வேளாண்மை உற்பத்தி, வேலையின்மை மற்றும் சமூக மற்றும் ஏனைய கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகும். இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுதோறும் சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ.15.00 கோடி என மூன்றாண்டுகளுக்கு மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தில் மண்வள பாதுகாப்பு, வன வளம், சமூக வனம், நீர்ப்பிடிப்பு வளர்ச்சி, சிறுபாசனம், வேளாண்மை, தோட்டக் கலை, கட்டமைப்பு வசதி (சாலைகள் மற்றும் மின் சக்தி) சமூகத் துறை (மருத்துவம் மற்றும் கல்வி) பிழைப்பதற்கான உதவி (வருமானம் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் குறிப்பாக கைத்தறி, தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை செய்முறை மற்றும் பல அடங்கும். இத்திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்திய பின்னர் தனிநபர் வருமானம் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆகியவை மூன்றாண்டுகளுக்குப் பிறகு உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.2.6 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/மத்திய மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்:

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கின்றது. திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்யும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்களில் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

53-48—16

[2005 ஏப்ரல் 8

### 1.2.7 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்:

சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாகவும், வெவ்வேறு ஆதாரங்களிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களைச் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளுடனும், இதர சார்பு துறைகளுடனும் கலந்தாலோசித்து செயல்படுத்தும் நோக்குடனும், "திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பது "திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்று திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29-04-2003 நாளிட்ட 31 ஆம் அரசாணைப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 1.2.8 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1975-1976 ஆம் ஆண்டு முதல் (ஐந்தாண்டுத் திட்ட தொடக்கம் முதல்) மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும் 10% கடன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அரசின் திட்டங்களுக்கு உதவியாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பு ஆகியவற்றிற்குத் துணைபுரியும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுப்புற சூழல் மேம்பாடு, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மீட்பு ஆகியவை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் உதவுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒருங்கிணைந்த நீர்நிலை ஆதார அடிப்படையில் பல்வேறு துறைகளையும் ஒரேமாதிரியாக மேம்படுத்தும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலை ஆதாரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் 75 நீர் முகட்டு (Watershed) பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் 6 வட்டங்களிலுள்ள 4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை மற்றும் வனவளம் ஆகிய துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், மனிதவள மேம்பாடு, உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சி, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், சாலைகள் மேம்பாடு, சுற்றுலா அபிவிருத்தி,



2005 ஏப்ரல் 8]

பட்டுப்பூச்சி வளர்த்தல், மரபுசாரா எரிசக்தியை பரவலாக்குதல், தொலை உணர்வு நுட்பம் போன்ற ஏனைய துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு போதுமான நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக 2,545 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டு கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் சராசரியாக கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அதிக உயரமான பகுதி தொட்டபெட்டா ஆகும். (கடல் மட்டத்திலிருந்து 2,640 மீட்டர் உயரம்) மாவட்டத்தின் மொத்த பரப்பளவில் 14,2579 ஹெக்டேர் பரப்பளவில் காடுகள் அமைந்துள்ளன. இது 56.03 சதவிகிதம் ஆகும். மொத்த சாகுபடி பரப்பளவு 78,800 ஹெக்டேர் ஆகும். உணவுப் பயிர்கள் 35 சதவிகிதம் பரப்பளவிலும்; மற்ற பயிர்கள் 65 சதவிகிதம் இடத்திலும் பயிரிடப்படுகிறது. மற்ற பயிர்களில் தேயிலை மற்றும் காபி போன்றவை முக்கியப் பயிர்கள் ஆகும். அதில் மொத்தப் பரப்பளவில் 50 சதவிகிதத்திற்கும் மேலாக தேயிலை பயிரிடப்பட்டு வருகிறது.

நடப்பு திட்டக் காலத்தில் பகுதி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது. திட்டமிடாமல் நிறுவப்பட்டுள்ள வடிகால் அமைப்பினால் ஏற்படும் மண் அரிப்பினைத் தடுப்பதற்கும் பழமையான விவசாயம் செய்யும் முறையை மாற்றுவதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. நீலகிரியின் பசுமைக் காடுகளையும், புல்வெளிகளையும் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.
2. சரிவு மட்டங்கள் மற்றும் இதர தட்பவெப்ப, சுற்றுச்சூழல் தன்மைகளைப் பொறுத்து காடுகள் மற்றும் விளை நிலங்களின் பயன்பாட்டு திட்டமிடுதலை மேம்படுத்துதல்.
3. பெருவாரியாக செடி பயிரிடும் முறையைப் பயன்படுத்தியும் பயிரிடும் விதங்களை மாற்றியமைத்தும், நிலத்தின் விளைச்சல் திறனை உயர்த்த மண் வளத்தையும் நீரையும் பேணிக் காத்தல்.
4. ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் நிலம் சாரா பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

[2005 ஏப்ரல் 8

5. ஒதுங்கிய வசிப்பிடங்களில் வாழும் பழங்குடியினரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

6. மனிதர்களால் ஏற்படும் சுற்றுசூழல் சீர்கேட்டினை சமாளிக்க ஒருங்கிணைந்த மனிதக் குடியேற்றக் கொள்கையை வகுத்தல் மற்றும் குடிப்பெயர்ச்சியைத் தடுத்தல்.

7. "பகுதி சார்ந்த அணுகுமுறைக்கு" முன்னுரிமை அளிக்கப்படும். எல்லா நீர்நிலை ஆதாரங்களுக்கும் ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்து, அதிக முன்னுரிமை உள்ள நீர்நிலை ஆதாரங்களை தேர்ந்தெடுத்து சுத்திகரித்தல்.

8. தொலையுணர்வு போன்ற அறிவியல் நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.

9. சூரியஒளி, நீர் மற்றும் சாண எரிவாயு போன்ற மரபு சாரா எரிசக்திகள் பயன்படுத்துவதை அதிகரித்தல்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு கடந்த ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் (1997–2002) ரூ.10744 இலட்சங்களை மத்திய அரசின் திட்டக்குழு நிதியுதவியாக தமிழகத்திற்கு அளித்துள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2002–2003, 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2210 இலட்சம் வீதம் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. இத்திட்டம், சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பிற்கும் இயற்கை வளங்களைப் பேணிக்காப்பதற்கும் மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கான 2005–2006 ஆம் ஆண்டிற்கான (பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் 4–வது ஆண்டு) திட்ட மதிப்பீடு ரூ.2210 இலட்சமாக மத்திய திட்டக்குழு உத்தேசமாக ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களிடமிருந்து, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் பெற்ற கருத்துருவிற்கு ஆண்டு திட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டு திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 8 ]

**1.2.9 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:**

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76–ல் தொடங்கப்பட்டு, மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும் 10% கடன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இது, தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 விழுக்காடாகும். இத்திட்டம் தற்பொழுது, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முழுவதுமாக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

அ) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்

ஆ) இப்பகுதியில் அபரிமிதமாக காணப்படும் உயரிய மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்

இ) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட மற்றும் ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரிசெய்தல்

ஈ) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களைத் தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகள் மண்வள பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரக சாலைகள், கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பட்டு வளர்ச்சி, தொலையுணர்வு, பனைப்பொருள் வளர்ச்சி ஆகியவையாகும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு தொகை மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு ஆகிய மூன்று முக்கிய பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் ரூ.51.50 கோடி மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவியாக பெறப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 8

இத்திட்டத்திற்காக, பத்தாவது ஐந்தாண்டு காலத்தின (2002–2007) முதல் மூன்றாண்டுகளுக்கு, அதாவது 2002–2003, 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளுக்கு மத்திய திட்டக் குழு ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ.1099.00 இலட்சங்களை நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் யாவும், சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பு, தோட்டப் பயிர்கள் மற்றும் இயற்கை வளங்களை பேணி காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மத்திய திட்டக் குழுவானது, இத்திட்டத்திற்காக 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.1099.00 இலட்சங்களை உத்தேச ஒதுக்கீடாக தெரிவித்துள்ளது. இதற்கான கருத்துருக்கள் யாவும் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்டு, ஆய்வுக் கூட்டங்களும் நடத்தி முடிக்கப்பட்டு, மத்திய திட்டக்குழுவின் ஒப்புதலுக்காகவும், நிதி ஒதுக்கீட்டிற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் செய்யப்பட்டுள்ளது.

### 1.2.10 இருபது அம்சத் திட்டம்:

இத்திட்டம் நாட்டின் வறுமையினைக் குறைப்பதற்கென 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உபரிநில விநியோகம், கிராம சுகாதாரம், கிராமப்புற வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல், சாணஎரிவாயு கலன்கள் அமைத்தல், குழந்தைகள் நல மேம்பாடு, கிராமப்புற குடிநீர் வசதி மற்றும் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் மேம்பாடு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றன.

### 1.2.11 பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்:

அரசு திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும்



2005 ஏப்ரல் 8 ]

மதிப்பீடுகளை செய்துவருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

### 1.2.12 உலக வர்த்தக நிறுவனப் (W.T.O.) பிரிவு:

உலக வர்த்தக நிறுவனம் சம்பந்தமான பொருள் குறித்து ஒருங்கிணைப்பதற்காக அரசு ஆணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19–11–2001–ன்படி ஏற்படுத்தப்பட்ட ஓர் ஒருங்கிணைப்புப் பிரிவு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் செயல்பட்டு வருகிறது.

உலக வர்த்தக மையம் மாநில விவசாயத் துறைப் பிரிவுகளுக்கு ஓர் அறைகூவல் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. ஜவுளித் துறை தொழிற்சாலைகள், முக்கியமாக அப்பேரல் தொழிற்சாலைகள் உலக வர்த்தக மையத்தின் உலகமயமாக்குதல் கொள்கை காரணமாக எதிர்கொள்ளும் விளைவுகள் குறித்து திருப்பூர் விசைத்தறி உரிமையாளர்களுடன் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. பல்வேறு துறைகளில் கண்டுள்ள வளர்ச்சிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட துறைகள் தொடர்நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகின்றன.

## 1.3 துறைத் தலைமையிடங்கள்

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 8

## மாநிலத் திட்டக் குழு

**2.1** தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டு, 17–09–2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்டது. முனைவர் வ.சீ. அருணாசலம் அவர்கள் துணைத் தலைவராக உள்ளார். மாநில திட்டக் குழுவில் ஒரு முழு நேர உறுப்பினர் மற்றும் உறுப்பினர்–செயலரும் உள்ளனர். வளர்ச்சி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர், நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயலாளர், வேளாண்மைத் துறை செயலாளர் ஆகியோர் அலுவல் வழி உறுப்பினர்களாக உள்ளனர்.

**2.2 மாநிலத் திட்டக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்புக்களாவன:**

(அ) ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்களை அரசின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பது.

(ஆ) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பரந்த அளவிலான இலக்குகளில் முக்கிய பங்காற்றக்கூடிய திட்ட எல்லைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.

(இ) மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறையின்மூலம் அரசு நிகழ்வுகளில் சமூகப் பொருளாதார வெளிப்பாடு குறித்து மதிப்பீடு செய்தல்.

(ஈ) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல் மற்றும் அது சம்பந்தமான அறிக்கைகளை அரசுக்கு அளித்தல்.

(உ) மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டக் குழுவுடன் இணைந்து செயலாற்றுதல் மற்றும் கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மேற்பார்வையிடுதல்.

(ஊ) அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை அடங்கிய ஐந்தாண்டுத் திட்டங்களின் இலக்கினை அடையவும், பெரு முதலீடுகள் பெறுவதற்கான எளிய, முற்போக்கான நடைமுறைகள் குறித்தும் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.



2005 ஏப்ரல் 8 ]

### 2.3 தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல்:

மாநில திட்டக் குழு மாநிலத்தின் பொருளாதார நிலைமையினை தொடர்ந்து ஆய்வு செய்து அதன் பேரில் அரசு மேல்நடவடிக்கைகளை எடுக்க செயல்படுகிறது.

### 2.4 மாவட்ட பரவலாக்கத் திட்டம்:

மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட திட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் மாவட்ட திட்டக் குழுவிற்கு உதவும்பொருட்டு எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட திட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மாநிலத் திட்டக் குழு விரிவான வழிகாட்டி நெறிமுறைகளைத் தயாரித்துள்ளது.

### 2.5 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம்:

மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர் வ.சீ. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஒரு குழு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் பணிகளை கவனித்து வருகிறது.

01–04–2000 முதல், மத்திய அரசானது மாநிலங்களுக்கு பெரு மேலாண்மை முறையிலான வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வகைச் செயல் திட்டங்களின் முதலீட்டுத் தொகையானது 90 சதவீதம் மத்திய அரசும், 10 சதவீதம் மாநில அரசும் நிதி பொறுப்பேற்கும் விதத்தில் அமைந்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவியானது 80 சதவீதம் மானியமாகவும், 20 சதவீதம் கடனாகவும் மாநில அரசிற்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்திற்கு 2004–05 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து ரூ.48.60 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதற்கீடான மாநில அரசின் பங்கு ரூ.5.40 இலட்சமாகும்.

### 2.6 தமிழ்நாட்டின் மனித வள மேம்பாட்டு அறிக்கை:

மாநில திட்டக் குழு தமிழ்நாட்டின் முதலாவது மனித வளமேம்பாட்டு அறிக்கையினை தயாரித்துள்ளது. இதில் மாவட்ட அளவில் காணப்படும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வறிக்கையை 14 ஜூலை, 2003 அன்று வெளியிட்டார்கள்.

[2005 ஏப்ரல் 8

**2.7 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (2005–2006) தயாரித்தல்:**

மாநிலப் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளுக்கான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக் குழுக்களை அமைத்து அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மாநில திட்டக் குழு ஏற்கெனவே தயாரித்துவிட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டாகிய 2005–2006 ஆம் ஆண்டுக்கான திட்டத்தை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள இலக்குகளின் அடிப்படையில், மாநில திட்டக் குழு தயாரிக்கிறது.

**2.8 2005–2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1. ஆண்டுத் திட்டம் மற்றும் இடைக்கால ஆய்வறிக்கை தயாரித்தல் – ரூ.1.50 இலட்சம்.
2. பயிலரங்கம்/கருத்தரங்கம்/கூட்டங்கள் / மாநாடுகள்/ஆய்வுகள் போன்றவை நடத்துதல் – ரூ.7.00 இலட்சம்.
3. தலைமைச் செயலகத்திலுள்ள திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் செயல்படுத்தப்படும் மின்னணுவியல் முறையில் கோப்புகளைப் பரிசீலிக்கும் முறையை ஏனைய துறைத் தலைவர் அலுவலகங்களுக்கு நீட்டித்தல் – ரூ.1.70 இலட்சம்.

**பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை**

**3.1** பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, மாநிலத்தின் தலைமை புள்ளிஇயல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி குறியீடுகள் ஆகிய பிரிவுகளின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவதும் இத்துறையின் முக்கிய பணியாகும்.

**3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.**

**(அ) மாநிலத் திட்டங்கள்:**

**1. தேசிய மாதிரி ஆய்வுத் திட்டம்:**

தேசிய மாதிரி ஆய்வு, தேசிய அளவில், முக்கியமாக அமைப்புச் சாரா பிரிவுகளின் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி அடுத்தடுத்த



2005 ஏப்ரல் 8 ]

சுற்றுக்களில் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும். இது மக்களுடைய சமூகப் பொருளாதார இனங்களின் மீதான அடிப்படை விவரங்களை அளிக்கிறது.

**2. மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ், கணினி முறைகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேம்படுத்தப்படுகின்றன.

**ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்:**

**1. வேளாண்மைக் கணக்கெடுப்பு:**

நுண்ணிய அளவில் வேளாண்மையைத் திட்டமிட உரிய நிலப்பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் மறு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

**2. பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்:**

பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து அதன்மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கணக்கிடப்படுகிறது.

**3. பொருளாதாரக் கணக்கெடுப்பு:**

வேளாண்மை (பயிர் உற்பத்தி மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் தவிர) மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்களின் விவரங்களைச் சேகரித்தல் பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

நூறு சதவிகித இந்திய அரசின் நிதி உதவியுடன் பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு 2005–ல் மேற்கொள்ளப்பட தமிழகத்திற்கு மொத்தம் ரூ.588.76 இலட்சம் நிதி ஒதுக்கீடாக இந்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் ரூ.303.93 இலட்சம் 2004–2005 ஆம் ஆண்டிற்கு தமிழகத்தில் ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொடங்குவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2005 ஏப்ரல் 8

**(இ) மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்:**

**1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்:**

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளிவிவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர் பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

**2. பயிர் மேம்பாட்டுத் திட்டம்:**

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப்பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றைச் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**ஈ. தன்னாட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறும் திட்டங்கள்:**

**தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல் :**

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் அவர்களின் தேவை மற்றும் அளிப்பினை மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**3.3** திட்டப் பணிகளைத் தவிர, திட்டம் சாரா திட்டங்களின் மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக் கணக்கு, மூலதனம் ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திர தொழிற் குறியீட்டெண், பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழை புள்ளி விவரங்கள் சேகரித்தல், நீர்ப்பாசனத் திட்டம், விவசாயக்கூலி குறியீட்டெண், வீட்டு வசதி புள்ளிவிவரம், கட்டட கட்டுமான செலவு குறியீட்டெண், ஆண்டு நகராட்சி புள்ளிஇயல் கையேடு மற்றும் மாவட்ட புள்ளிஇயல் கையேடு, மாநில புள்ளிஇயல் கையேடு மற்றும் ஆண்டு புள்ளிவிவரத் தொகுப்பு, ஆள் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறியீடு, மொதத விலைக் குறியீட்டெண் மற்றும்



2005 ஏப்ரல் 8 ]

சிறுபான்மை பயிர் மதிப்பீட்டாய்வு ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.4 மாநிலப் புள்ளிஇயல் குழு:**

மாநிலப் புள்ளிஇயல் குழுவானது உறுப்பினர் (புள்ளிஇயல் மற்றும் பொருள் இயல் பகுப்பாய்வு) மாநிலத் திட்டக் குழு அவர்களின் தலைமையில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது.

**3.5 2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்:**

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறைக்கு கணினி, நகலி இயந்திரம் மற்றும் ஒரு ஆழ்துளைக் கிணறு ஆகியவற்றை ரூ.42.14 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

**மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை**

**4.1** பேரளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு அரசு நிதியளித்து நிறைவேற்றி வருகிறது. அவ்வாறான திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை முன்மதியுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தொடங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதற்கொண்டு மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளுதல்மூலம் கொள்கைகளை வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு பொறுப்பேற்று அரசுக்கு உதவி வருகிறது.

**4.2 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

1. குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;
2. மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்புப் பகுத்தாய்வுகள் மேற்கொள்ளல்;
3. இரு வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு – ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.

[2005 ஏப்ரல் 8

**4.3** தமிழ்நாட்டில் மாநில, மைய அரசுகள் மற்றும் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, அரசு வருவாய் எதிர்பார்ப்பு மற்றும் செலவினங்கள் மத்திய அரசின் நிதிக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.4** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த 532 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.5** எந்தெந்த திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கவும் மாநில மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட இக்குழு, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும் மற்றும் ஐந்து உறுப்பினர்களுடன் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலராகக் கொண்டும் இயங்கி வருகிறது.

**4.6 2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்:**

ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.



2005 ஏப்ரல் 8]

## இணைப்பு – III

(153 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 37

## பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

தலைமைச் செயலரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பொதுத் துறை, மாநிலத்தின் பொது நிருவாகம் சம்பந்தப்பட்ட சில முக்கியமான பணிகளைக் கவனித்து வருகிறது. பொதுத் துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

- மரபுப் பணி
- அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் நலன்
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல்
- முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் முன்னாள் படைவீரர் கழகத்தினை நிருவகித்தல்
- முதலமைச்சரின் தனிப் பிரிவு
- புதுடில்லி, சென்னை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிருவகித்தல்
- சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்
- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்
- தேர்தல்கள் நடத்துதல்
- தலைமைச் செயலக வளாகத்திலுள்ள கட்டடங்களின் பராமரிப்பு

[2005 ஏப்ரல் 8

- மாநிலங்களிடை மற்றும் தென் மண்டலக் குழுக்கள் சம்பந்தப்பட்ட அலுவல்கள்
- பாகிஸ்தான் மற்றும் பங்களா தேச நாட்டினர் தவிர இந்தியாவிற்கு வரும் பிற அயல் நாட்டினரின் அனைத்து விதமான விசாக்களின் நீட்டிப்பு தொடர்பான பணிகள்

**2.** மேற்கண்ட பணிகள் தவிர, மானியக் கோரிக்கை எண் 2-ல் சேர்க்கப்பட்டுள்ள மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட பணிகளையும் பொதுத் துறை கவனிக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதமர், மத்திய அரசு அமைச்சர்கள் போன்ற சீர்மக்கள் வருகையின்போதும், ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சீர் மக்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகையின் போதும், அவை தொடர்பான பணிகளை இத்துறையில் உள்ள மரபுப் பிரிவு கவனிக்கிறது. பொதுத் துறை, இலங்கை அகதிகள், முன்னாள் படைவீரர், போரில் மரணம் எய்திய வீரர்களின் மனைவியர், முன்னாள் படைவீரர்தம் குடும்பங்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் ஆகியோர் நலன் குறித்த பணிகளையும் கவனிக்கிறது. தலைமைச் செயலக வளாகத்துக்குள் கட்டுமானப் பணிகள், மேற்பார்வை மற்றும் சுற்றுப்புறப் பராமரிப்பு ஆகியவையும் இத்துறையைச் சார்ந்ததே. இத்துறை மத்திய அரசின் பாதுகாப்புத் துறை, உள் துறை, வெளி விவகாரத் துறை ஆகிய துறைகளுடன் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையேயான பொதுவான பொருட்கள் குறித்து அவ்வப்போது தொடர்பு கொண்டு வருகிறது. மேலும், அமைச்சர்களின் அலுவலகப் பணியாளர்கள் தொடர்பான அனைத்து நிருவாகப் பணிகளையும், அவர்களுக்கு மோட்டார் வண்டிகள், தொலைபேசி மற்றும் இதர அலுவலகச் சாதனங்கள் ஆகியவை வழங்குவது குறித்த பணிகளையும் இத்துறை கவனிக்கிறது.

**3.** மாநில மனித உரிமைகள் ஆணையம் மற்றும் சட்டம்-ஒழுங்கு மற்றும் கூர்உணர்வுடைய பொருள்கள் தொடர்பாக 1952 ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் அரசால் நியமிக்கப்படும் விசாரணை ஆணையங்கள் ஆகியவற்றின் பணியாளர் பற்றிய பணிகளை இத்துறை கவனித்து வருகிறது. தகைசால் பெருமக்களுக்குத் தேவையான அலுவலக அறைகள், ஒதுக்குதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல், அறைகலன்கள், தொலைபேசி வசதி, சீருந்து முதலியவற்றை வரையறைப்படி வழங்குதல் போன்ற பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.



2005 ஏப்ரல் 8]

## அகதிகள் மறுவாழ்வு

**அகதிகள்:**

**4.** **1983** ஆம் ஆண்டில் இலங்கையில் வெடித்த இனக் கலவரத்தின் காரணமாக, இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழர்கள் புகலிடம் தேடி இந்தியாவிற்கு அகதிகளாக பெருமளவில் வரத் தொடங்கினர். அது முதல், இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்த வண்ணம் இருந்தனர். இடையில் **1987-1991** மற்றும் **1992-1995** ஆண்டுகளில் இரு முறை அவர்கள் திரும்ப இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். **2003** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குப் பிறகு அகதிகளின் வருகை நின்றுவிட்டது. **31-01-2005** அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு முழுவதிலும் பல்வேறு மாவட்டங்களில் 2 சிறப்பு முகாம்கள் உட்பட **103** அகதிகள் முகாம்கள் உள்ளன. இவற்றில், **14,031** குடும்பங்களைச் சேர்ந்த **52,322** நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த அகதிகளுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் அனைத்து நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அகதிகளின் பராமரிப்பு தொடர்பான செலவு முழுவதும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் ஈடுசெய்யப்பட்டு வருகிறது.

### இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

**பணக்கொடை**

**5.** தமிழகத்திலுள்ள பல்வேறு அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு, கீழ்க்கண்ட வீதங்களில் பணக்கொடை அளிக்கப்பட்டு வருகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | மாதம் ஒன்றுக்கு | ரூபாய் **200** |
| 2. | 12 வயதும் மற்றும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதம் ஒன்றுக்கு | **144** |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதம் ஒன்றுக்கு | **90** |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதம் ஒன்றுக்கு | **45** |

[2005 ஏப்ரல் 8

மேற்படி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் அனைவருக்கும் மாதமொன்றிற்கு சுமார் ரூ.**79,00,000/-** (ரூபாய் எழுபத்தொன்பது இலட்சம்) வரை பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது.

**மலிவு விலையில் அரிசி**

**6.** அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு, மத்திய அரசின் வழி காட்டி குறிப்புகளின்படி மலிவு விலையில், கிலோ ஒன்றிற்கு ரூ.**0.57** (ஐம்பத்தேழு பைசா) வீதம் கீழ்க்கண்ட அளவுகளில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

| | | (நாளொன்றிற்கு) |
|---|---|---|
| அ. | பெரியவர்கள் (8 வயதும் அதற்கு மேலும்) | 400 கிராம் |
| ஆ. | குழந்தைகள் (8 வயதிற்குட்பட்டவர்கள்) | 200 கிராம் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அதன் நியாயவிலைக் கடைகள் மூலமாகவும் கூட்டுறவுத் துறையின்கீழ் வரும் நியாயவிலைக் கடைகள் மூலமாகவும், இம்மலிவு விலை அரிசியை முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்குகிறது. விலை வேறுபாட்டுத் தொகையை அரசு ஈடு செய்கிறது. இவ்வாறு, அகதிகளுக்கு மலிவு விலையில் அரிசி வழங்குவதால் ஆண்டிற்கு சுமார் ரூ.**5,30,00,000/–** (ரூபாய் ஐந்து கோடியே முப்பது இலட்சம்) செலவாகிறது.

**துணிமணிகள்**

**7.** முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மத்திய அரசு வரையறுத்துள்ள அளவுகளில் ஆண்டுதோறும் துணிமணிகள் மற்றும் பாய் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை முகாமில் உள்ள அகதிகளுக்குப் போர்வைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ.**2,00,00,000/–** (ரூபாய் இரண்டு கோடி) செலவிடப்படுகிறது.

**பாத்திரங்கள்**

**8.** முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து அகதிகளுக்கும் **5** வகையான **8** பாத்திரங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை



2005 ஏப்ரல் 8 ]

இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாமில் உள்ள அகதிகளுக்கு பாத்திரங்கள் வாங்குவதற்கு இரண்டாண்டுக்கு ஒருமுறை ரூ.**15,00,000/–** (ரூபாய் பதினைந்து இலட்சம்) செலவிடப்படுகிறது.

**மருத்துவ உதவி**

**9.** முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

**கல்வி வசதிகள்**

**10.** இலங்கை அகதிகளுக்கு கல்வி வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் தமிழ்நாடு அரசு மிகவும் தாராளப் போக்கை கடைப்பிடிக்கின்றது. அகதிகளின் குழந்தைகள், இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், கல்லூரிவரை அவர்கள் கல்வியைத் தொடரவும் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, சீருடைகள், மதிய உணவு, பயணச்சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகளின் குழந்தைகள் தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். முகாமிற்கு வெளியே தங்கிப் படிக்கும் குழந்தைகளுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள், சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்படுகின்றன.

**முகாம்களில் அடிப்படை வசதிகள்**

**11.** அகதிகள் தங்கவைக்கப்பட்ட முகாம்களில் மின் வசதி, குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி, குடிசைகள் பழுதுபார்த்தல் போன்ற அடிப்படை வசதிகள் செய்ய **2004–2005** ஆம் ஆண்டில் 23 முன்மொழிவுகளில் ரூ.**80,73,000/–**(ரூபாய் எண்பது இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம்) மதிப்பிற்கான பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பித்துள்ளது. மேற்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்**

**12.** சொந்தச் செலவில் தங்களது தாய்நாட்டிற்கு அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அகதிகள் இந்தியாவைவிட்டு வெளிச்செல்வதற்கான அனுமதிச் சீட்டுகள் (Exit Permit) பெற்று, அவ்வாறு

[2005 ஏப்ரல் 8

செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அனுமதி சீட்டுகள் மாவட்ட நிருவாகம் மூலமாக இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**முன்னாள் படைவீரர் நலன்**

**13.** நமது மாநிலத்திலுள்ள முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் மற்றும் தற்போது படைப் பணியில் உள்ளோர் குடும்பங்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தினைச் சார்ந்ததாகும். அனைத்து நலப் பணிகளும், இந்த இயக்ககத்தின் 25 மாவட்ட அலுவலகங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 31–01–2005 அன்றுள்ள நிலவரப்படி, 1,60,539 முன்னாள் படைவீரர் / விதவையர் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

**14.** இத்துறையின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு:

(1) அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்தல்

(2) சுயவேலைவாய்ப்பு வழங்குதல்

(3) பயிற்சி வசதிகள்

(4) நலத்திட்ட உதவிகள்

**15.** போரில் இறந்துவிட்ட வீரர்களின் குடும்பங்களுக்கும், போரில் ஊனமுற்றவர்களுக்கும் அரசு கருணைத் தொகை வழங்குகிறது. மேலும் வீரப்பதக்கங்கள், சிறப்புப் பணிக்கான பதக்கங்கள் மற்றும் மகன்கள் / மகள்களைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோர்க்கு ஊக்க மானியம் ஆகியவை தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. முன்னாள் படைவீரர்கள் நலத் துறையின் மொத்த நிருவாகச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை மத்திய அரசு ஈடுசெய்கிறது.

**16.** கீழ்க்கண்ட இரண்டு நிதிகள் முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் நிருவகிக்கப்படுகின்றன:

(1) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேம நல நிதி

(2) தொகுப்பு நிதி

2004–2005 ஆம் ஆண்டில், 16,266 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேம நல நிதியிலிருந்து ரூ.5,05,00,000/–(ரூபாய் ஐந்து கோடியே ஐந்து இலட்சம்) நிதி உதவி வழங்கப்பட்டது. தொகுப்பு நிதியிலிருந்து 2,027 முன்னாள்



2005 ஏப்ரல் 8]

படைவீரர்/சார்ந்தோர்களுக்கு ரூ.45,59,000/– (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம்) அளவிற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**17.** தமிழ்நாட்டில் முதன்முறையாக, **2001** ஆம் ஆண்டில், வீர விருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு நிலக் கொடைக்குப் பதிலாக மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகைக்கு இணையாக ரொக்கத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. நாட்டிற்காக எல்லைப்புறத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்கள் / எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் தியாகத்தினை அங்கீகரிக்கும் வகையில், வீரமரணமடைந்த வீரர்களுக்கு உரிய இறுதி மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. இறுதிச் சடங்கில் ஓர் அமைச்சர் மற்றும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்த வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள்/ எல்லையோரப் பாதுகாப்புப் படைவீரர்கள் எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போதோ அல்லது ஊடுருவல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போதோ உயிரிழந்தாலோ / ஊனமுற்றாலோ அவர்களுடைய வாரிசுகளுக்கு/அவர்களுக்குக் கீழ்க்கண்ட நிவாரணம் வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| 1. உயிரிழந்தவர்கள் | ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம்) |
| 2. ஊனமடைந்தவர்கள்: | |
| i. முழுவதுமாக ஊனமடைந்தவர்கள்/ இரு கால்களோ கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள் | ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) |
| ii. ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள் | ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம்) |

**2004–2005** ஆம் ஆண்டில், எதிரிப் படைகள், மற்றும் ஊடுருவல்களுக்கெதிரான நடவடிக்கைகளில் வீர மரணமெய்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் மற்றும் எல்லையோர பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) வீதம் 6 குடும்பங்களுக்கு கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 8

மேலும், சிவில் நிருவாகத்திற்கு உதவியான நடவடிக்கைகளின் போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) முதல் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) வரையில் ஊனத்தின் தன்மைக்கேற்ப கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வகையில் 2004–2005 ஆம் ஆண்டில் 16 படைவீரர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கு, மொத்தம், ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம்) கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**18.** இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியில் உள்ள வீரர்களின் பிள்ளைகளுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.. பொறியியல் பட்டப் படிப்புக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் 6 இடங்களும், மற்ற பொறியியல் கல்லூரிகளில் 75 இடங்களும், மருத்துவப் பட்டபடிப்புக்கு 2 இடங்களும், பல் மருத்துவப் படிப்பிற்கு 1 இடமும், செவிலியர் பயிற்சி படிப்புக்கு 60 இடங்களும், பல்தொழில் பயிலகங்களில் பட்டயப் படிப்புக்கு 80 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும் மற்றும் சட்டப் படிப்புப் பிரிவில் 1 சதவீத இடமும் இவற்றில் அடங்கும். முதன் முறையாக, அரசுப் பணிகளில் 'சி' பிரிவில் முன்னாள் படைவீரர்களுக்கு 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து 29–08–2002 அன்று, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2002 ஆம் கல்வியாண்டு முதல் ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டு இடங்கள் 67–லிருந்து 132 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை காவலர்கள் தேர்வுக்குத் தேவையான உடல் மற்றும் அறிவுத்திறன் தேர்வுகளை முன்னாள் படைவீரர்களுக்குச் சாதகமாக இந்த அரசு ரத்து செய்துள்ளது. காவலர்கள் தேர்வுக்குப் போட்டியிடும் முன்னாள் படை வீரர்களைப் பொறுத்தவரை வயது உச்சவரம்பு 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**19.** முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி படிப்பில் ஓர் இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரை உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இடங்களும், இரண்டுக்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மூன்று இடங்களும் அரசு ஒதுக்கியுள்ளது.



2005 ஏப்ரல் 8]

**ஜவான்ஸ் பவன்**

**20.** தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேம நல நிதியிலிருந்து ரூ.1,94,00,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சம்) செலவில் ஈரோட்டில் ஜவான்ஸ் பவன் கட்டப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளது.

**ஆலயப் பாதுகாப்புப் படை**

**21.** 1992 ஆம் ஆண்டில், கோயில்களைப் பாதுகாக்கவும் அங்குள்ள சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் முதலியன களவாடப்படுவதைத் தடுப்பதற்காகவும், முன்னாள் படைவீரர்களைக் கொண்ட கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்படையில் பணியாற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு, தொகுப்பூதிய அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. இதுவரை பல்வேறு கோயில்களில் 2,674 படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ.1500/–(ரூபாய் ஆயிரத்து ஐநூறு) தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**கொடிநாள் வசூல்**

**22.** தமிழ்நாடு கொடிநாள் நிதி வசூலில், 1985 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நாட்டிலேயே முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டுக்கு, கொடிநாள் நிதி வசூல் இலக்காக ரூ.6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி) நிர்ணயிக்கப்பட்ட போதிலும் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.8,19,00,000/- (ரூபாய் எட்டு கோடியே பத்தொன்பது இலட்சம்) ஆகும். 2004 ஆம் ஆண்டுக்கு (07–12–2004 முதல் 06–12–2005 வரையிலான காலத்திற்கு) நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் நிதி வசூல் இலக்கு ரூ.6,30,00,000/- (ரூபாய் ஆறு கோடியே முப்பது இலட்சம்) ஆகும். இதில் 24–02–2005 அன்றுவரை, ரூ.73,18,000/- (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து பதினெட்டாயிரம்) வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு 6–12–2005–க்கு முன்பாகவே எய்தப்பட்டுவிடும்.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் (டெக்ஸ்கோ)**

**23.** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) கம்பெனிகள் சட்டத்தின்படி 28–1–1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதரவுள்ள, இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட

பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூபாய் 22.91 இலட்சம் ஆகும்.

**24.** இக்கழகத்தின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு :

- தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு ஏற்றவகையில் பல திட்டங்களைத் திட்டமிடுதல், உருவாக்குதல் அவற்றைச் செயல்படுத்துதல், ஆகியவற்றில் தேவையான உதவிகளை அளிப்பது.
- நிறுவனம் என்ற அளவில் முன்னாள் படைவீரர்கள் பயன்படும் வகையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

**25.** பதிவு பெற்ற முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் மைய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புப் பணிக்கென அமர்த்தப்படுகின்றனர். மேற்கண்ட அரசு நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ இப்பணிகளுக்கென 1–4–2004 முதல் பணிக் கட்டணமாக 12 விழுக்காடு பெற்று வருகிறது. இவ்வாறு, பாதுகாப்புப் பணிக்கும் பிற பணிகளுக்கும் அனுப்பப்படும் முன்னாள் படைவீரர்களுக்கான ஊதியம் பாதுகாப்பு அமைச்சகத்தின் மறு புனரமைப்பு தலைமை இயக்குநரால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

**26.** இக்கழகம், தென்னக இரயில்வே, மதுரை மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காக பணம் வசூலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சியும் வாகனம் நிறுத்துவதற்கான கட்டணங்கள் வசூலிக்கும் பணியை இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

**27.** தற்சமயம் இக்கழகத்தின் மூலமாக 7,127 முன்னாள் படை வீரர்கள் மறுவேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**முதலமைச்சரின் தனிப் பிரிவு**

**28.** பொது மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பதில் முதலமைச்சரின் தனிப் பிரிவு, மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பொது மக்களின் குறைகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்காக, இப்பிரிவின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலருக்கு வழக்கமான அலுவலக ரீதியான தொடர்பு முறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டு, மாநில அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களிடமும்



நேரடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**29.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்னையிலும், மற்றும் சுற்றுப் பயணத்தின்போது தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் அளிக்கப்படும் மனுக்கள் உடனடி நடவடிக்கைக்காக, தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும், துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும் கணினியில் பதிவு செய்த பின் அனுப்பப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வருகை தரும் அனைத்து நாட்களிலும், இதர அலுவலகப் பணி நிலைமையைப் பொறுத்து, பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணிக்குள்ளாக பொது மக்களை நேரடியாக சந்தித்து மனுக்களைப் பெற்று வருகிறார்கள். பொது மக்கள், தனிப் பிரிவில், நேரடியாக அனைத்து வேலை நாட்களிலும் மனுக்கள் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதோடு, தபால், நிகரி மற்றும் மின் அஞ்சல் மூலமாகவும் அனுப்பி தீர்வு காண வகை செய்யப்பட்டுள்ளது.

**30.** முதலமைச்சரின் தனிப் பிரிவில், 10 சமூக நல சேவகர்கள் / ஆலோசகர்கள் உள்ளனர். இந்த ஆலோசகர்கள், மனுதாரர்களின் கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டு, அவர்களுக்கு அரசின் நலத் திட்டங்களைப் பற்றியும், அதனைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் விரிவான ஆலோசனை வழங்குகிறார்கள். முதலமைச்சர் தனிப் பிரிவில் இயங்கி வரும் விசாரணை மையத்தில், பொது மக்களின் மனுக்களின் மீதான தற்போதைய நிலவரம் கணினியில் சரிபார்த்து மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**31.** மனுக்களின்மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தொடர்ந்து கண்காணிக்க முதலமைச்சரின் தனிப் பிரிவின் தனி அலுவலர், காலமுறைப்படி தலைமைச் செயலகம் மற்றும் துறைத் தலைவர்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் **(Nodal Officers)** மற்றும் மக்கள் குறை தீர்ப்பு தனித் துணை ஆட்சியர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துகிறார். 2004 ஆம் ஆண்டில் மட்டும், 3,87,884 மனுக்கள் தனிப் பிரிவில் பெறப்பட்டு, அதில் 3,39,965 (88%) மனுக்கள் தீர்வு காணப்பட்டன.

**32.** முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களின்மீது விரைவாகவும், மனுதாரர்களுக்கு நிறைவளிக்கும் வகையிலும் தீர்வு கண்டு சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களின் சீரிய செயல்பாட்டை அங்கீகரித்து

பாராட்டும் வகையில், ஆகஸ்ட், 2004–ல் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**33.** 2003 ஆம் ஆண்டில் முதலமைச்சர் தனிப் பிரிவிற்கு ரூ.23,00,000/– (ரூபாய் இருபத்து மூன்று இலட்சம்) செலவினத்தில், புதிய கணினிகள் மற்றும் மென்பொருட்கள் பெறப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் கணினிகள் மற்றும் மென்பொருட்கள் வாங்குவதற்காக ரூ.12,23,000/– (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரம்) அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் தனிப் பிரிவின் சாதனைகள்**

**(14–05–2001 முதல் 25–12–2004 வரை)**

(1) வறுமையான சூழ்நிலைகளில் வாழும் 1,187 ஏழை எளிய மக்களுக்கு, உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கென முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,89,73,660/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தொன்பது இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து அறுநூற்று அறுபது) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(2) தொழிற்கல்வி பயில்வதற்கு மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டும் வசதி இல்லாத காரணத்தால் சேர இயலாமல் தவித்த 499 மாணவர்களுக்கு ரூ.1,26,60,235/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

(3) பல்வேறு வகையில் நிதியுதவி கோரிய 469 நபர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,38,28,304/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முன்னூற்று நான்கு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

(4) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், உடல் ஊனமுற்ற 5,184 நபர்களுக்கு ரூ.60,39,776/– (ரூபாய் அறுபது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று எழுபத்தாறு) நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



**34. 2005–2006–ல் பகுதி II திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள புதிய திட்டங்கள்**

1. மாண்புமிகு அமைச்சர்களின் அறைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். தற்போதுள்ள மேசை, நாற்காலி போன்ற அறைகலன்கள் மற்றும் குளிர்சாதனங்கள் மிகவும் பழையனவாகி விட்டதாலும், அவை நல்ல நிலையில் இல்லாததால், அவற்றுக்குப் பதிலாக ரூ.6 இலட்சம் செலவில், 1.5 டன் திறன் கொண்ட 15 குளிர்சாதனங்கள் மற்றும் ரூ.7.50 இலட்சம் செலவில், மேசை, நாற்காலி போன்ற அறைகலன்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு வருகை தரும் முக்கிய விருந்தினர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, இரண்டு சொகுசு சீருந்துகள் ரூ.10 இலட்சம் செலவில் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. புதுடெல்லி, கூடுதல் விருந்தினர் இல்லம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16–9–2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் தங்கும் விருந்தினர்களின் வசதிக்காக, தொலைபேசி இயக்குபவர் மற்றும் வரவேற்பாளர் பணியிடங்கள் மூன்றினை ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

4. தற்போது இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களில் மூன்றில் இரண்டு பங்கு அலுவலர்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு சென்னையில் சொந்தமான குடியிருப்பு வசதியில்லை. சென்னைக்கு மாறுதல் மற்றும் அயற்பணியில் வரும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் குடியிருப்பு வசதிக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, அவர்களுக்காக சென்னை, கோயம்பேடு, தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில் 24 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்த ஆண்டு ரூ.100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. தலைமைச் செயலகத்திலுள்ள நூலகம், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நூலகத்தில் வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு

[2005 ஏப்ரல் 8

குளிர்சாதனங்கள் பொருத்துவதற்காக ரூ.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. மாநிலத்தில் உள்ள, 30 மாவட்டங்களுள், 25 மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் நலத் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்திற்கு, முதல் கட்டமாக, 2003–2004 ஆம் ஆண்டில் 13 கணினிகள் மற்றும் உபகரணங்கள் (மாவட்ட அலுவலகங்களுக்கு 10 மற்றும் இயக்ககத்திற்கு 3) வழங்கப்பட்டுள்ளன. தற்போது இரண்டாம் கட்டமாக, மேலும் பத்து மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ.8 இலட்சம் செலவில் பத்து கணினிகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்குரிய நலத் திட்டங்களை வழங்குவதற்காக மாவட்ட அலுவலர்கள் ஊரகப் பகுதிகளுக்குச் செல்வதற்காக, இவ்வரசு ஏற்கெனவே 12 மாவட்ட அலுவலகங்களுக்கு வாகனங்களை ஒதுக்கியுள்ளது. இந்த ஆண்டு சென்னை, திண்டுக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள முன்னாள் படைவீரர் அலுவலகங்களுக்கு ரூ.22.62 இலட்சம் செலவில் 5 ஜீப்புகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 8 ]

## கோரிக்கை எண் 37–பொதுத் துறை

## 2005–2006 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு

| துறைத் தலைவர் | | 2005–2006 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 3701 தலைமைச் செயலகம் | சாட்டியது | 7,20 | — | — | 7,20 |
| | அனுமதித்தது | 27,12,72 | 10,00,00 | — | 37,12,72 |
| 3702 முதன்மைத் தேர்தல் அலுவலர் மற்றும் அரசுச் செயலர் | அனுமதித்தது | 18,24,98 | — | — | 18,24,98 |
| 3703 முன்னாள் படை வீரர்கள் இயக்ககம் | அனுமதித்தது | 4,85,20 | — | — | 4,85,20 |
| 3704 மறுவாழ்வு ஆணையரகம் | அனுமதித்தது | 24,16,10 | — | — | 24,16,10 |
| 3705 தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி | அனுமதித்தது | 5,69,37 | — | — | 5,69,37 |
| 3706 மாநில மனித உரிமைகள் ஆணையம் | அனுமதித்தது | 1,14,76 | — | — | 1,14,76 |
| மொத்தம் | சாட்டியது | 7,20 | — | — | 7,20 |
| | அனுமதித்தது | 81,23,13 | 10,00,00 | — | 91,23,13 |

[2005 ஏப்ரல் 8

## இணைப்பு - IV

(153 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 48
# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்
# கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**1.** இந்த மானிய கோரிக்கையின்கீழ் இடம் பெறும் முதலாவது, முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், விடுதலை போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், 31–12–2004 ஆம் நாள் நிலவரப்படி, சுமார் 5,20,269 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,70,380 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 63,373 |
| 3. | அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,18,739 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,634 |
| 5. | ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர் | 40,143 |
| | **மொத்தம்** | **5,20,269** |



2005 ஏப்ரல் 8 ]

**2.** இம்மானியக் கோரிக்கையில் பின்வரும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:

| | (ரூபாய்) |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால பயன்களும் | 48,19,24,92,000 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – | |
| 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 12,00,87,000 |
| **மொத்தம்** | 48,31,25,79,000 |

### 3. ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். அரசுப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற நாளுக்கு முன்னர், கடைசி 10 மாத பணி காலஅளவில் பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாநில அரசு, 1–1–1996 முதல் மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்படுவது போன்ற ஓய்வூதியத்தை/ குடும்ப ஓய்வூதியத்தைத் திருத்தியமைத்து ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை 1–1–1996 முதல் மாதமொன்றிற்கு ரூபாய் 375/–லிருந்து ரூபாய் 1275/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### 4. பணிக்கொடை

#### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாகத் தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப்

[2005 ஏப்ரல் 8

பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டு மொத்தத் தொகையாகும்.

### (ii) இறப்புப் பணிக்கொடை

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:–

| பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரெண்டு மடங்கு |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

### (iii) ஓய்வுகாலப் பணிக்கொடை

ஒருவர் ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16 1/2 மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1–1–1996–லிருந்து



2005 ஏப்ரல் 8]

ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1–4–1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

### 5. குடும்ப ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போது அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவரது குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்குமுன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், ஓய்வுபெற்ற பிறகு இறந்துவிடும் நேர்வுகளில் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றி இருப்பவர்களின் குடும்பங்களுக்கும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மற்றபடி ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர் அல்லர்.

குறைந்தளவு குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375–லிருந்து ரூபாய் 1275 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. உயரளவு, குடும்ப ஓய்வூதியம் சம்பள வீதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.

விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர், மறுமணம் செய்துகொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில், இதில் எது முந்தியதோ அதுவரையில், அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, ஓய்வூதியம் அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையில் குடும்ப

[2005 ஏப்ரல் 8

ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

**6. கருணைத் தொகை வழங்குதல்**

வருங்கால வைப்பு நிதிக்கு பங்குத் தொகை செலுத்தி, இறந்துவிட்ட பணியாளர்/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற்ற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-11-1997 முதல் ரூ.31 அகவிலைப்படியுடன் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூபாய் 150-லிருந்து ரூபாய் 605 ஆக உயர்த்த அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 முதற்கொண்டு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

**7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்**

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33 1/3 விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையின் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெறத் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள், விண்ணப்பித்திருந்தால், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநில கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின், அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால், அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.



2005 ஏப்ரல் 8]

**8. ஏனைய ஓய்வுகாலப் பயன்கள்**

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவு 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை, ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான விடுப்பை, (அதிகபட்சம் 180 நாட்கள், இது 90 நாட்களாகக் கொள்ளப்படும்) முழு சம்பளத்திற்கு ஒப்படை செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலைப்படியும், வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வுபெறும் பணியாளர் ஓய்வுபெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

**9. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்:**

**(அ) அகவிலைப் படி**

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப் படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/ மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள்/ குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

[2005 ஏப்ரல் 8

**10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்பு மருத்துவச் சிகிச்சை / அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் ஒரே சீராக ரூ.70 செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டுத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000/- வழங்கப்படும்.

**12. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**13. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:**



2005 ஏப்ரல் 8]

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பயன்கள் குறித்த மொத்த செலவு | மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் சதவிகிதம் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1996-97 | 1070.15 | 8.95 |
| 1997-98 | 1286.77 | 9.47 |
| 1998-99 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2668.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 | 3488.20 | 16.86 |
| 2003-2004 | 3279.96* | 13.84 |
| 2004-2005 திருத்த மதிப்பீடு | 4064.39 | 15.03 |
| 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 4819.25 | 15.93 |

* நிலுவைத் தொகை வழங்குவது தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக மதிப்பீடு குறைந்துள்ளது.

ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்கள் குறித்த செலவு கணிசமாக உயர்ந்துள்ளதை மேலே உள்ள அட்டவணையில் காணலாம்.

**14. பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்**

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ், அரசு மாதந்தோறும் ஒரு நிலையான பங்களிப்புத் தொகை வழங்கும். இத்திட்டத்திற்கு அரசு அளிக்கும் குறிப்பிட்ட பங்களிப்புத் தொகையுடன் பணியாளர் பங்களிப்புத் தொகையும் சேர்த்து, ஒரு பொருத்தமான ஓய்வூதியத் திட்டத்திற்கு நிதியளிக்க இயலும்.

[2005 ஏப்ரல் 8

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்**

**15.** நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சொல்லொணா துன்பங்களை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் பயனடையும் வகையிலும், அவர்களது நலனுக்காகவும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு, வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

**16.** 01–10–1966 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டத்தின்படி, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் அல்லது காவல் கைதிகளாக இருந்தவர்கள் அல்லது தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, மரணமடைந்தவர்கள் அல்லது துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்கள் ஆகியோர் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். பின்னர், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக ஆக்கப்பட்டனர். இவர்கள் மட்டுமின்றி, சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்து, சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் அல்லது சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்கள்/ஜப்தி செய்யப்பட்டவர்கள் அல்லது சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் அல்லது பணியறவு செய்யப்பட்டவர்கள் ஆகியோரும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக ஆக்கப்பட்டனர். ஆனால், அத்தகைய கோரிக்கைகளுக்கு ஆதாரமாக நீதிமன்றப் பதிவுருக்கள் அல்லது அரசு பதிவுருக்கள்மூலம், ஆவணச் சான்று அளிக்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத சிறைவாசம் என்பது,



2005 ஏப்ரல் 8]

01–04–1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பும் 11–03–1983 முதல் நீக்கப்பட்டது.

**17.** சிறைத் துன்பம் அனுபவித்ததை நிரூபிக்கும் பொருட்டு, அதற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணை அல்லது சிறைத் துறை ஆவணத்தின் உரிய பகுதியின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மேற்சொன்ன ஆவணங்கள் கிடைக்காத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு பணிபுரிந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள், மனுதாரர்கள் சிறை தண்டனை அனுபவித்தமைக்கு ஆதாரமாக 1–4–1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும் சக கைதி சான்றினை ஏற்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறை பிறப்பித்த 16–11–1988 ஆம் நாளிட்ட ஆணையின்படி, மாநிலம் முழுவதற்கும் அத்தகைய சக கைதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்ட பதினைந்து விடுதலைப் போராட்ட வீரர்களில் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. மேற்சொன்ன முறையிலும் சில இடர்பாடுகள் உள்ளன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், 7–2–1996 ஆம் நாளிட்ட பொதுத் துறையின் அரசு ஆணையின்படி, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், மூன்று பிரபல விடுதலைப் போராட்ட வீரர்களை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல விடுதலைப் போராட்ட வீரர்களை சான்றளிப்பவர்களாகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ளவர்கள் நீதிமன்றத்தின் அல்லது சிறைச்சாலையின் மூல ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர், தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். அரசு பிறப்பித்த வழிகாட்டிக் குறிப்புகளின்படி, மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 8

**18.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரங்கள் இணைப்பு–I–ல் கொடுக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும் மாநில அரசு ஓய்வூதியம் ரூ.500/– மாதந்தோறும் வழங்கப்படுகின்றது.

**19.** மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது, அவரது மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஓய்வூதியத் தொகை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரங்கள் இணைப்பு–II–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**20.** நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அரசு சிறப்பு ஓய்வூதியம் வழங்கி வந்துள்ளது. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 150 பேர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேருக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுதாரர்கள் 82 பேர்களுக்கும், அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/– வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**21.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**அ) மருத்துவ வசதிகள்**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/– வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்சொன்ன விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 8]

**ஆ) கல்விச் சலுகைகள்**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் முறை மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/ பேரன் பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித்தொகையும் வழங்கப்படுகின்றது.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன் பேத்தியருக்கு தொழில் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள் மற்றும் இதர சிறப்பு கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இ) வீட்டு வசதி**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/ மனைகளில் / அடுக்குமாடி வீடுகளில் ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவீதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவீதத்திலிருந்தும், தலா ஒரு சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஈ) போக்குவரத்து வசதி**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உ) ஈமச்சடங்குச் செலவு**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது, அவர்தம் ஈமச்சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரர்களுக்கு உதவித்தொகை ரூ.2,000/– உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால், மறைந்தவரின் உடல்மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

[2005 ஏப்ரல் 8

**ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை**

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்பொழுது, விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தமிழ்மொழிக் காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**22. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்**

மத்திய அரசின் விடுதலை போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தை மத்திய அரசு 15-8-1972 அன்றிலிருந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கிணங்க, பின்வரும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன:

i) விடுதலை போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்தவர்கள் மைய அரசின் சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் (சுதந்திர சைனிக் சம்மான் பென்சன்) பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத் தண்டனைக்கு ஆதாரமாக சிறைச் சான்றிதழ் அளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச்சான்றிதழ் அலுவலக பதிவுருக்களில் இல்லாத நிலையில், சம்பந்தப்பட்ட சிறை அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதை" குறிப்பிடும் சான்றிதழுடன் இரண்டு சக கைதிகளின் சான்றிதழையும் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் அளிக்கவேண்டும். தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்து, மைய அரசின் ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்தோ அல்லது தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்தோ சிறைத் தண்டனை காலத்தை குறிப்பிடும் சக கைதி சான்றிதழ் ஒன்று பெறப்படவேண்டும்.

ii) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனைகள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 8 ]

iii) ஓய்வூதியம் பெறுவதற்கான வரையறுக்கப்பட்டிருந்த ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000/– என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

iv) ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்திருந்து அரசு ஆவணங்களை அளிக்க முடியாமலுள்ளவர்கள், இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக சிறை தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சக கைதி சான்றிதழுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை" என்பதைக் குறிப்பிடும் சான்றிதழையும் இணைத்து அனுப்பலாம். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

v) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள் / கசையடிகள் / பிரம்படிகளை தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால், அது ஆறு மாத காலத்திற்கு சிறை தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

vi) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலாகவோ சிறைத் துன்பம் / காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும், மைய அரசின் சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

vii) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம், அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம், இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

viii) மத்திய அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒருவர் இறக்க நேரிடும்பொழுது, அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 3,000/–த்துடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500/–ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தொடர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

ix) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியதாரர்களுக்கு (SWATANTRATA SAINIK SAMMAN PENSIONERS) 1-08-2003 முதல் ஓய்வூதியத்துடன் 39 சதவீதம் அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 8

**23.** மே திங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் இதுவரை 399 பேருக்கு மாநில அரசின் சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி இந்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இராமநாதபுர முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வாரிசுதாரர்கள் 87 பேருக்கு அரசியல் ஓய்வூதியம் வழங்கவும் 8–1–2003ஆம் நாளிட்ட அரசாணையில் அரசு ஏற்பளித்தது.

**24.** தற்போது மாநில / மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/– + ரூ.15 மருத்துவப் படி) | 1424 |
| 2. | மாநில அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500/– + ரூ.15/– மருத்துவப் படி) | 2258 |
| 3. | மைய அரசின் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/– + ரூ.1,170/– அகவிலைப்படி + ரூ.15/– மருத்துவப் படி) | 1117 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000/– + 1170/– அகவிலைப்படி + 15/– மருத்துவப் படி) | 1156 |
| 5. | மைய அரசு ஓய்வூதியத்துடன் மாநில அரசின் ஓய்வூதியமான ரூ.500/–ஐ பெறும் ஓய்வூதியதாரரின் எண்ணிக்கை | 2273 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்கள் (ரூ.500/– மாதம் ஒன்றுக்கு) ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் | 7 |
| 7. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ.500/– மாதம் ஒன்றுக்கு) ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் | 150 |
| 8. | முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (ரூ.500/– மாதம் ஒன்றுக்கு) ஓய்வூதியம் பெற்று வருகின்றனர் | 82 |



2005 ஏப்ரல் 8]

**25.** மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் ஓய்வூதியங்களின் பொருட்டு, 2005–2006 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.11,69,45,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இணைப்பு – 1**

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம் :

| வரிசை எண் | கால அளவு (ரூபாய்) | ஓய்வூதியத் தொகை |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1,000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3,000/- |

[2005 ஏப்ரல் 8

**இணைப்பு –2**

மாநில விடுதலைப் போராட்ட வீரர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம் :

| வரிசை எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 500/- |
| 9. | 01-09-1995 முதல் | 750/- |
| 10. | 15-08-1997 முதல் | 1,500/- |



2005 ஏப்ரல் 8 ]

**இணைப்பு – 3**

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு (சுதந்திர சைனிக் சம்மான் ஓய்வூதியதாரர்கள்) மைய அரசால், வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம் :

| வரிசை எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 200/- |
| 2. | 01-08-1980 முதல் | 300/- |
| 3. | 01-06-1985 முதல் | 500/- |
| 4. | 14-11-1988 முதல் | 750/- |
| 5. | 12-08-1992 முதல் | 1,000/- |
| 6. | 02-10-1994 முதல் | 1,500/- |
| 7. | 15-08-1997 முதல் | 3,000/- |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைக் குறிப்புகள்

**தொகுதி 81–எண் 1**

**நாள் 8–4–2005**

### பிழைத் திருத்தச் சீட்டு

| பக்க எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ii | 8 | திரு. கே.சி. கருணாகரன் 41,43–53 | திரு. கே.சி. கருணாகரன் 46–53 |
| 4 | 13 | இச்செயலக எதிர்நோக்கி | இச்செயலை எதிர்நோக்கி |
| 71 | 14 | ஒடந்துறை | ஓடந்துறை |
| 120 | கேரி–ஓவர் பெயர் | [திரு. எச்.எம். ராஜு] | [திரு. எச்.எம். ராஜு] |
| 153 | அடிக் குறிப்பு | @ 175 முதல் 257 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III மற்றும் IV ஆக அச்சிடப் பெற்றுள்ளன. | @ 175 முதல் 257-i வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV மற்றும் V ஆக அச்சிடப் பெற்றுள்ளன. |
| 165 | 12 | Accentor | Accenture |
| 165 | 13 | 24/7 Customer Car | 24/7 Customer Care |
| 257–a முதல் i வரை | | பொதுத் துறை தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு இணைக்கப் படவில்லை | நடவடிக்கைக் குறிப்புகளின் இறுதியில் இணைப்பு V ஆக அச்சிட்டு இணைக்கப்பட்டுள்ளது |



அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# இணைப்பு - V

(153 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 37

## பொதுத் துறை – தேர்தல்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005

தேர்தல்களுக்கான நிதி ஒதுக்கீடு 2015 என்ற தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 37–ல் இடம் பெற்றுள்ளது. இம்மானியக் கோரிக்கையின்கீழ் 1–1–2005–ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதி பெற்ற எஞ்சிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், தேர்தல் நிர்வாக அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப் படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் 2005–2006 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.18,24,98,000/– நிதி தேவைப்படுகிறது.

14–வது மக்களவைக்கு 2004 ஆம் ஆண்டு மே திங்களில் 10 ஆம் நாள் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, தற்போதைய மக்களவையில் இம்மாநிலத்திலிருந்து உறுப்பினர் இடம் ஏதும் காலியில்லை.

தமிழக சட்டப் பேரவைக்கு 10–5–2001–ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 15. கும்மிடிப்பூண்டி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 26. காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன. இடைத் தேர்தல் நடத்துவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் முடிவு எடுக்க வேண்டும்.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 37–ல் 2005–2006 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.18,24,98,000/– (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

[2005 ஏப்ரல் 8

| | | |
|---|---|---|
| 2015. | தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது) | |
| 102. | தேர்தல் அதிகாரிகள் | |
| எள. | சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் | ரூ.5,03,39,000/– |
| 103. | வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல் | |
| எள. | சட்டப் பேரவைத் தொகுதிகள் | ரூ.9,48,33,000/– |
| 104. | மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எள. | மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் | ரூ.22,97,000/– |
| 105. | நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எள. | இடைத் தேர்தல்கள் | ரூ.18,000 (அடையாள ஒதுக்கீடு) |
| எபி. | மக்களவைக்குத் தேர்தல் | ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு) |
| 106. | மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் | |
| எள. | மாநில சட்டப் பேரவை | ரூ.1,90,44,000/– |
| 108. | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல் | |
| எள. | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் | ரூ.1,59,43,000/– |
| | மொத்தம் | ரூ.18,24,98,000/– |



2005 ஏப்ரல் 8]

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான செலவு மேற்கொள்வதற்காக தேவைப்படுகின்றது.

**102. தேர்தல் அதிகாரிகள்**

**எள. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்**

மதிப்பீடு – ரூ.5,03,39,000/–

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். மாநில தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய இணைச் செயலர் அந்தஸ்தில் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் ஒரு துணைச் செயலர், ஒரு சார்புச் செயலர் உள்ளனர். பொது (தேர்தல்கள்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் சம்பந்தமான பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிகளை கவனிக்க மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு

[2005 ஏப்ரல் 8

மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர்–தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளை கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், இதர செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கின்றது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

### ஏஏ. சட்டப் பேரவைத் தொகுதிகள்

மதிப்பீடு – ரூ.9,48,33,000/–

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்கான நிரந்தர பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து திருத்தப்படுகின்றன. இந்திய தேர்தல் ஆணையம் 1–1–2005–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தத்தினை மேற்கொள்வதற்கு விரிவான வழிகாட்டு முறைகள் வெளியிட்டுள்ளது.



2005 ஏப்ரல் 8]

ஆறு மாநகராட்சிப் பகுதிகளான சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 74. ஒசூர் சட்டமன்றத் தொகுதி உட்பட 39 சட்டமன்றத் தொகுதிகளில் தீவிர முறைத் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. வரைபடங்கள் தயாரித்தல், கணக்கெடுப்பாளர்/மேற்பார்வையாளர் நியமனம் முதலிய ஆயத்தப் பணிகள் ஏற்கெனவே முடிவுற்று வீடு வீடாகக் கணக்கெடுக்கும் பணி 1–3–2005 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 195 சட்டமன்றத் தொகுதிகளில் சுருக்க முறைத் திருத்தம் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. சுருக்க முறைத் திருத்தம் நடைபெறவுள்ள பகுதிகளில் வரைவுப் பட்டியல் வெளியீட்டுக்கு முன்னர் கதவிலக்கங்களைச் சரிபார்த்து பழைய மற்றும் புதிய எண்களை பதிவு செய்யும் பணி 1–2–2005–ல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவடைந்துள்ளது. மாற்றங்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர், வரைவுப் பட்டியல்கள் தபால் நிலையங்கள் உட்பட அனைத்து குறிப்பிட்ட அமைவிடங்களிலும் வெளியிடப்படும்.

இந்தத் துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் பட்டியல் வரைவு மற்றும் இறுதிப் பட்டியல் தயாரித்தல், அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், பயணப் படிகள் மற்றும் கணக்கெடுப்பாளர்/ மேற்பார்வையாளர்களுக்கான ஊதியம் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள ரூ.9,48,33,000/– நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இந்த செலவினத்தின் 50 விழுக்காட்டினை மைய அரசு பகிர்ந்து கொள்ளும்.

### கணினி கட்டமைப்பு

கடந்த சில வருடங்களாக இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் குறித்த அடிப்படைப் புள்ளி விவரங்களை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் செய்ய தகவல்தொழில்நுட்பங்களை தீவிரமாகவும், அதிக அளவிலும் பயன்படுத்தி வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி தேவையான கணினி கட்டமைப்புகள் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும், தலைமை தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் சம்பந்தப்பட்ட தகவல்தொழில்நுட்பம் குறித்து மாநில தேர்தல் துறைக்கு உதவிட இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி மாநில முகவர்

[2005 ஏப்ரல் 8

நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிறுவனம் அனைத்து மாவட்டங்களிலும் கணினிப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான பணியாளர்களை நியமித்துள்ளது.

இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் CMC நிறுவன பணியாளர் ஊதியம், பயணப் படிகள், கணினிகள் (மற்றும்) உபபொருட்கள் வாங்குவது மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் (மற்றும்) மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் உள்ள கணினி/உபபொருள் பராமரிப்பு முதலியவற்றிற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செலவினத்தில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்ளும்.

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்**

மதிப்பீடு - ரூ.22,97,000/-

மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமான தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொது (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குப் பதிவிற்குரிய உபகரணங்கள் ஆகியவை வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும், விருத்தாசலம், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் ஆகியவை மேற்கண்ட துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.



2005 ஏப்ரல் 8]

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள்**

மதிப்பீடு - ரூ.18,000/- (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திலுள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எபி. மக்களவைக்குத் தேர்தல்**

மதிப்பீடு - ரூ.24,000/- (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாகப் பெறப்படும். 14-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல்கள் 10-05-2004 அன்று நடைபெற்றன. மக்களவைக்கான அடுத்த தேர்தலுக்கு மே மாதம் 2009 வரை கால அவகாசம் உள்ளதால் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே இந்தத் துணைத் தலைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மாநில சட்டப் பேரவை**

மதிப்பீடு - ரூ.1,90,44,000/-

மாநில சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

தற்பொழுது சட்டமன்றப் பேரவையில் 15. கும்மிடிப்பூண்டி மற்றும் 26. காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏற்பட்டுள்ளன. இடைத் தேர்தல்கள் நடத்துவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் தகுந்த நேரத்தில் முடிவெடுக்கும்.

[2005 ஏப்ரல் 8

பொது (தேர்தல்கள்) துறையில் மின் தட்டச்சுகள், போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் தொலை அச்சுக் கருவிகள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இச்செலவினம் முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும்.

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எஎ.வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

மதிப்பீடு - ரூ.1,59,43,000/-

அனைத்து பொதுத் தேர்தல்கள் மற்றும் மக்களவை, சட்டமன்றங்களுக்கான இடைத் தேர்தல்களில் வாக்காளர்கள் தங்கள் அடையாளங்களை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மூலம் உறுதி செய்யவேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் பணித்தது. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தவும் அட்டை தயாரிப்புக்குத் தேவையான மென்பொருள் மற்றும் விவரங்கள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் மூன்று கட்டங்களாக இதுவரை நடத்தப்பட்டுள்ளது. முதல் கட்டம் 1996–1998–ல் மேற்கொள்ளப்பட்டது. இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட விரிவான வழிகாட்டுதல்களின்படி, இரண்டாம் கட்ட புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவும், மூன்றாம் கட்டப் பணிகள் 2002–2003 ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்டன.

இம்மாநிலத்தில் மூன்று கட்டப் பணிகளுக்குப் பிறகு தற்போது 3.55 கோடி வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. (கடந்த மே மாதம் மக்களவை பொதுத் தேர்தல் இடைப்பட்டதால் நான்காவது கட்டப் பணியைத் தொடங்க முடியவில்லை.) தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி முடிவடைந்தவுடன், மீதமுள்ள வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்படும். இதற்கிடையில் புகைப்பட வாக்காளர் பட்டியல் குறித்து இந்திய தேர்தல் ஆணையம் வழிமுறைகள் வழங்கியுள்ளது. புகைப்பட வாக்காளர் பட்டியலும், பின்னர் அதனை அடிப்படையாகக் கொண்டு மீதமுள்ள



2005 ஏப்ரல் 8]

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிப்பு மற்றும் முந்தைய கட்டங்களில் தயாரிக்கப்பட்டதற்கான நிலுவைத் தொகை ஆகிய செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செலவில் 50 விழுக்காட்டை மைய அரசு ஏற்றுக்கொள்ளும்.

— — —

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18240
சென்னை-600 008

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.